# அப்போஸ்தலர் நடபடிகளும் ரோமருக்கு எழுதின நிருபமும்

**வேத பாடசாலை**
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்
சென்னை – 600 010.

Acts and Romans
Booklet - 12
Tamil

© IBL
2004

Cover Credit : Cynthia Kingston
Printed by :

*For additional booklets write to*:
**India Bible Literature,**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

Ph: 26425166 Fax: 26428298
E-mail: ibl.maa@iblchennai.org

## அத்தியாயம் ஒன்று

# உயிர்த்த கிறிஸ்துவின் நடபடிகள்

புதிய ஏற்பாட்டில், சபை வரலாற்றைப் பற்றி ஏவப்பட்டு எழுதப்பட்ட ஒரே புத்தகம் அப்போஸ்தலருடைய நடபடிகள் மட்டும் தான். இது நான்கு சுவிசேஷங்களையும் பவுலுடைய பதின்மூன்று நிருபங்களோடு இணைக்கிறது. இந்த வரலாற்றுப் புத்தகம் மட்டும் இல்லாதிருந்திருந்தால், பவுலுடைய நிருபங்களை நீங்கள் வாசிக்கத் துவங்கும் போது, "பவுல் என்று அழைக்கப்படும் இந்த அப்போஸ்தலர் யார்? இவரைப் பற்றி சுவிசேஷங்களில் நான் ஒன்றையும் வாசித்ததில்லையே" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொண்டிருப்பீர்கள். நாம் இப்போது ஆராய்ச்சி செய்யப் போகும் இந்த நடபடிகள் புத்தகமில்லாமல், புதிய ஏற்பாட்டில் ஒரு பெரிய இணைக்கக்கூடிய சங்கிலி இல்லாமல் போயிருக்கும்.

புதிய ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களும் வரலாற்றுப் புத்தகங்களாயிருப்பதற்கு ஒரு அர்த்தம் உண்டு. சுவிசேஷங்கள் முதலாவதாக, இயேசு கிறிஸ்துவின் சரித்திரங்களாக இருக்கின்றன, அவை வரலாற்றுப் புத்தகங்களாகவும் இருக்கின்றன. இருப்பினும், அப்போஸ்தலருடைய நடபடிகள், புதிய ஏற்பாட்டு சபையின் வரலாற்றுப் புத்தகமாயிருப்பதால், இது சுவிசேஷங்களிலிருந்து தனியாகப் பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம்: "தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவியினாலே கட்டளையிட்ட பின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன்." (அப்போஸ்தலர் 1:1,2) என்று ஆரம்பமாகிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகளின் இந்த முதல் இரண்டு வசனங்களிலிருந்து, இதை எழுதியவர் லூக்கா சுவிசேஷத்தை எழுதிய

அதே மனிதன் தான் என்றும், அந்த மூன்றாம் சுவிசேஷத்தை அவர் யாருக்கு எழுதினாரோ, அவருக்குத் தான் இந்த அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தையும் எழுதினார் என்றும் அறிந்து கொள்கிறோம். “தேவனை அன்பு செய்பவர்” என்று அர்த்தம் கொள்ளும் பெயரையுடைய தெயோப்பிலு, இந்த மிகவும் முக்கியமான இரண்டு பத்திரங்களையும் பெற்றுக் கொள்ள தகுதியுள்ளவர் என்று லூக்காவினால் கருதப்பட்டவர்.

தன்னுடைய பெயரைக் கொண்ட சுவிசேஷத்தில், தான் ஆரம்பித்த கதையை, அப்போஸ்தலருடைய நடபடிகளில் தொடர்கிறார் லூக்கா. தன்னுடைய சுவிசேஷத்தில், இயேசு பிறந்தது முதல் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்வரை உள்ள வரலாற்றுரீதியான, சரியான தகவல்களை நமக்குக் கொடுத்ததாக லூக்கா கூறுகிறார். இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பும், அப்போஸ்தலர்களின் மூலமாக ‘செய்யவும் போதிக்கவும்’ தொடர்ந்தார் என்று லூக்கா நமக்கு அறிவிக்கிறார். எனவே வேதத்தின் பல பதிப்புகளும் இந்தப் புத்தகத்தை, “அப்போஸ்தலருடைய நடபடிகள்” என்று அழைக்கின்றன.

பெந்தெகொஸ்தே நாளின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ளும் போது, “அப்போஸ்தலர் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள்” என்ற தலைப்பு பொருத்தமானதாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன். பெந்தெகொஸ்தேவின் எல்லா அடையாளங்களையும் அற்புதங்களையும் பேதுரு உயிர்த்த, ஜீவிக்கிற கிறிஸ்துவுக்கே உரித்தானதாகக் கருதுவதால், ‘அப்போஸ்தலர் மூலமாக உயிர்த்த கிறிஸ்துவின் நடபடிகள்’ (அப்போஸ்தலர் 2:32, 33) என்று தலைப்பிட்டால், இன்னும் அதிக பொருத்தமுள்ளதாயிருக்கும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் என்ற இந்தப் புத்தகம் முடிவு பெறவில்லை, அது அப்படியே நிறுத்தப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். லூக்கா கைது செய்யப்பட்டான், எனவே இந்தப் புத்தகத்தை முடிக்க முடியவில்லை என்று சில வேத பண்டிதர்கள் நம்புகின்றனர். இன்னும் சிலர், இந்தப் புத்தகம் சபையின் சரித்திரமாயிருப்பதால் முடிவு பெறவில்லை, நீங்களும் நானும் அந்த சரித்திரத்தைத் தொடர்ந்து எழுதி கொண்டிருப்பதாக நம்புகின்றனர்.

### அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் பார்க்க வேண்டியது என்ன?

இந்த அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் ஒரு சரித்திரப் புத்தகமாயிருப்பதால், பழைய ஏற்பாட்டின் பன்னிரெண்டு சரித்திரப் புத்தகங்களையும் எப்படி அணுகினீர்களோ அப்படியே இதையும் அணுக வேண்டும். பவுல் எபிரெய சரித்திரத்தைக் குறித்து: “இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும்

இருக்கிறது" (I கொரிந்தியர் 10:11) என்று எழுதுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தை வாசிக்கும் போது திருஷ்டாந்தங்களையும் எச்சரிப்புகளையும் தேடுங்கள்.

**சபையின் நோக்கம்**

இந்த வரலாற்றுப் புத்தகத்தை வாசிக்கும் போதே, சபைக்குக் கொடுக்கப்பட்ட நோக்கத்தைத் தேடுங்கள். இயேசு அப்போஸ்தலர் களோடிருந்த கடைசி நாட்களில் மகா பெரிய பொறுப்பு என்று நாம் அழைக்கும் பொறுப்பை அவர்களுக்குக் கொடுத்தார். நான்கு சுவிசேஷங்களின் இறுதியிலும் இந்த மகா பெரிய பொறுப்பை நாம் பார்க்கிறோம். மத்தேயுவை பொறுத்தவரை இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கூறிய கடைசி வார்த்தைகள்:

"...வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் (மத்தேயு 28:18-20).

நான்கு சுவிசேஷங்களும் இந்த மகா பெரிய பொறுப்பைக் கூறுவதோடு முடிவடைகிறது. இந்த மகா பெரிய பொறுப்பில் ஒரு கட்டளை இருக்கிறது, அது "சீஷராக்குங்கள்" என்பது தான். பின்பு, அந்த "சீஷராக்குங்கள்" என்ற கட்டளையைத் தழுவிய நான்கு செயல்கள் உள்ளன, அவை செல்வது, போதிப்பது, ஞானஸ்நானங்கொடுப்பது மற்றும் உபதேசிப்பது ஆகும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் இது தான் சரியாக நடைபெறுகிறது. அப்போஸ்தலர்கள் சென்று, போதித்து, ஞானஸ்நானங்கொடுத்து, உபதேசித்து, சீஷராக்குகிறார்கள். சபைக்கு, அதன் ஆரம்பத்திலிருந்தே கொடுக்கப்பட்ட நோக்கம் இந்த மகா பெரிய பொறுப்பு ஆகும். அந்தப் பொறுப்பே "சபையின் அதிகாரப் பத்திரமாகும்". வேறு எந்த அமைப்பையும் போலவே, சபையும் அதன் அதிகாரப் பத்திரத்திலுள்ள நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.

**சபைக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம்**

இந்தப் புத்தகத்தின் முதல் வசனங்களில், இயேசு பரலோகத்திற்கு போவதற்கு முன்பு அப்போஸ்தலர்களுக்கு கட்டளைகளைக் கொடுக்கிறார் என்று பார்க்கிறோம். இந்த மகா பெரிய பொறுப்போடேகூட இயேசு அவர்களைக் காத்திருக்குமாறு கட்டளையிட்டார். "பிதாவின் வாக்குத்தத்தம்

நிறைவேறக் காத்திருங்கள்'' (அப்போஸ்தலர் 1:4,5). இயேசு, மேல் வீட்டறையில், தாம் அவர்களிடம் பரிசுத்த ஆவியை அனுப்பப்போவதாக வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார்.

கர்த்தருக்காக காத்திருத்தலைக் குறித்து வேதம் மிகுதியாகக் கூறுகிறது. எனக்கு மிகவும் பிடித்தமான பிரசங்கங்களில் ஒன்றைக் குறித்து ஏசாயா போதித்தார்: ''கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்'' (ஏசாயா 40:31).

ஏசாயா, தேவனுடைய ஜனங்களிடம், ஒரு கழுகு காத்திருப்பது போல் காத்திருக்க வேண்டும் என்று கூறியபோது, விசுவாசத்தைப் பற்றிய ஒரு விலையேறப்பெற்ற உண்மையை பகிர்ந்து கொண்டிருக்கிறார். கழுகுகள் பறக்காமலிருக்கும் சில நேரங்கள் உண்டு. ஒரு கழுகானது காற்று வீசப்போகிறது என அறிந்து கொள்ளும் போது, தன்னுடைய கூட்டின் விளிம்பில் நீண்டநேரம், மணிக்கணக்காக உட்கார்ந்திருக்கும். காற்றின் வேகமானது மிகவும் அதிகமாகும் வரை அது காத்துக் கொண்டேயிருக்கும். பின்பு, அந்தக் கடுமையான காற்றினூடே ஐந்து மீட்டர் வரை பாய்ந்து சென்று, தன்னுடைய பிரமாண்டமான சிறகுகளை விரித்துக் கொண்டு, தான் மேலே எழும்பிப் பறப்பதற்கு தேவையான காற்றின் சக்தியை அந்தச் சக்திவாய்ந்த காற்றிலிருந்து எடுத்துக் கொள்ளும்.

நீங்கள் அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் அதிகாரத்தை வாசிக்கும் போது, பெந்தெகொஸ்தே நாளன்று வரப்போகும் ஆவியானவரின் வல்லமைக் காக சபையானது, தன்னுடைய கூட்டின் விளிம்பில் அமர்ந்து காத்திருக்கும் கழுகு போல் காத்திருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். இந்தப் புத்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தை வாசிக்கும்போது, தான் வழியில் சந்திக்கவிருக்கும் இடுக்கண்களைத் தாண்டி மேலே எழும்பிப் பறக்கக்கூடிய சக்தியை காற்று தனக்கு கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு, தன்னுடைய கூட்டிலிருந்து பாய்ந்து பறக்கும் கழுகை கற்பனை செய்து கொள்ளுங்கள்.

## சபைக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம்

பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியின் வருகையைக் குறித்து இரண்டாம் அதிகாரம் விளக்குகிறது. தேவ ஜனங்களின் வரலாற்றில் இது மிகவும் முக்கியமான ஒன்றாகும், ஏனெனில், பரிசுத்த ஆவியின் வல்லமை தன் மேல் வரும் வரை, சபையானது தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியாது. தனிப்பட்ட விதத்திலும் இது உண்மையாகும். இயேசு கிறிஸ்துவுக்காக ஒரு சீஷரை உருவாக்க நாம் முயற்சி செய்யும் போது, பரிசுத்த ஆவியின் வல்லமையில்லாமல், சாத்தியமல்லாத ஒன்றை நாம் முயற்சி செய்கிறோம்.

**சபையின் சாதனைகள்**

மலைப்பிரசங்கத்தின் இயேசுவின் உபதேசங்கள், ஒருவர் செய்த வேலையல்ல, அவர் செய்யும் செய்கைகளே முக்கியம் என்பதை வலியுறுத்தியது (மத்தேயு 5-7). இயேசுவைப் பொறுத்தவரை, நாம் என்ன சொல்கிறோமோ அதுவல்ல, நாம் என்ன செய்கிறோமோ அது தான் முக்கியம். அவர் அப்போஸ்தலர்களுக்கு போதித்த போது அதைத்தான் வலியுறுத்தினார். சபையின் செயல்பாட்டைக் கண்டு முதல் நூற்றாண்டில் உலகம் ஆச்சரியப்பட்டதை வாசிக்கும் போது நாம் திகைப்படையக் கூடாது.

சபையின் சாதனையைப் பற்றிய பல காரியங்களை நீங்கள் கவனிக்க வேண்டியுள்ளது. முதலாவதாக, அப்போஸ்தலர்களின் போதனையைக் கவனியுங்கள். இந்த வரலாற்றுப் புத்தகத்தில் பல பெரிய போதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் மகா பெரிய அந்த போதனை பெந்தெகொஸ்தே நாளன்று துவங்குகிறது. பெந்தெகொஸ்தேயின் மிக முக்கியமான விளைவு: பேதுரு போதித்ததன் மூலம் மூவாயிரம் பேர் சீஷர்களாக்கப்பட்டனர், மேலும் பெந்தெகொஸ்தே நாளைத் தொடர்ந்து பேதுரு பிரசங்கித்த போது ஒவ்வொரு முறையும் ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பினார்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலுள்ள, அப்போஸ்தலர்களின் போதனைகள் அபிஷேகிக்கப்பட்ட போதனைகள் ஆகும். அவர்கள் பிரசங்கித்த போது தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்தார் என்பது அதன் அர்த்தமாகும். வேதத்தில் இது ‘அபிஷேகம்’ என்று அழைக்கப்படுகிறது. அதாவது, ஒருவர் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் போதோ அல்லது ஊழியம் செய்து கொண்டிருக்கும் போதோ அதைச் செய்பவர் மேல் இறங்கும் பரிசுத்த ஆவியின் வல்லமையளிக்கும் அபிஷேகம்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலுள்ள பேதுருவின் பிரசங்கங்களைக் கவனமாகப் படியுங்கள். அவற்றைப் பற்றி விசேஷமாக எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியென்றால் பேதுரு பிரசங்கித்த போது எப்படி ஒவ்வொரு முறையும் ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பினார்கள்? பேதுருவின் மேல், அவர் பிரசங்கித்த போது பரிசுத்த ஆவியின் வல்லமையுள்ள அபிஷேகம் இருந்ததால், இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவுகள் நிகழ்ந்தன. எருசலேம் முழுவதையும் தங்கள் போதகத்தால் நிறைத்து விட்டதாக, இயேசுவின் சீஷர்கள் குற்றஞ்சாட்டப்பட்டனர் (5:28). இன்று, கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம், அப்படியாக எப்போதாவது குற்றஞ்சாட்டப்படுகிறோமா?

## எனவே, சபை என்றால் என்ன?

நீங்கள், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை வாசிக்கும்

போதே, இந்த, புதிய ஏற்பாட்டு சபையின் வரலாற்றுப் புத்தகத்தில் ஏறக்குறைய ஐம்பது நபர்களுக்கு நீங்கள் அறிமுகமாகிறீர்கள் என்பதை கவனியுங்கள். “சபை” என்ற வார்த்தை, ‘எக்ளிசியா’ (ecclesia) என்ற கிரேக்க வார்த்தை ஆகும். இதன் அர்த்தம் “கூட்டம்” அல்லது “அழைக்கப்பட்டவர்கள்” ஆகும். இந்த வார்த்தையின் அர்த்தம், “உயிர்த்த, ஜீவிக்கிற கிறிஸ்துவைப் பின்பற்றவும், அவரோடு ஐக்கியம் வைத்துக் கொள்ளவும், ஒருவரோடொருவர் ஐக்கியம் வைத்துக் கொள்ளவும் இந்த உலகத்திலிருந்து வெளியே அழைக்கப்பட்ட ஒரு கூட்ட ஜனங்கள்” என்பதாகும். சுருக்கமாகப் பார்த்தால் “சபை” என்றால் “மக்கள்” என்று அர்த்தம்.

நீங்கள் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை முதல் முறையாக வாசிக்கும் போது, பேதுருவையும், பவுலையும் தவிர இன்னும் ஐம்பது நபர்களோடாவது அறிமுகமாகிக்கொள்ள முயற்சி செய்யுங்கள். தேவனுடைய பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தாலும், அபிஷேகிக்கப்பட்டிருந்தாலும், அசாதாரணமான காரியங்களை செய்த மிகவும் சாதாரண மக்களுடைய வரலாறு தான் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் ஆகும். இன்றும், நாம் அவருடைய பணியைச் செய்ய, அதே தேவனும் அதே வல்லமையும் உங்களுக்கும் எனக்கும் உண்டு (மத்தேயு 28:18-20).

இன்று கர்த்தரை நீங்கள் சேவிக்கும் போது, போவதற்கு முன்னால் நீங்கள் தேவனிடம் வருகிறீர்களா? உங்கள் மேல் வல்லமையளிக்கும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் வரும் வரை அவருடைய பிரசன்னத்தில் நீங்கள் காத்திருக்கிறீர்களா, அல்லது உங்களுடைய சொந்த பெலனைக் கொண்டு அவருடைய பணியைச் செய்ய முயற்சி செய்யும்படி செல்கிறீர்களா? தேவனுடைய உதவியில்லாமல், தேவனுடைய பணியை நம்மால் நிறைவேற்ற முடியாது என்பது அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் செய்திகளில் ஒன்றாகும். எனவே, உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்துவின் பணியை செய்ய முயற்சி செய்வதற்கு முன்பு பரிசுத்த ஆவியின் வல்லமைக்காக நாம் காத்திருக்க வேண்டும்.

## அத்தியாயம் இரண்டு

# கண்ணுக்குப் புலப்படாத சபையின் காணப்படுகிற முன்மாதிரிகள்

சபையின் பிறந்த நாளாகிய பெந்தெகொஸ்தே நாளை விவரிப்பதோடு இரண்டாவது அத்தியாயம் துவங்குகிறது. (அப்போஸ்தலர் 2:1-18). நாம் அப்போஸ்தலருடைய நடபடிகளின் இரண்டாவது அதிகாரத்தை வாசிக்கும் போதே, பெந்தெகொஸ்தே நாள் என்பது யூதர்களின் பரிசுத்த நாள் என்பதை அறிந்து கொள்கிறோம். இது அவர்களுடைய அறுவடையின் கொண்டாட்டமாகும், யூத மக்கள் தங்களுடைய தேவன் கொடுத்த அறுவடைக்காக தேவனுக்கு நன்றி கூறும் ஒரு நாளாகும். அந்தப் பரிசுத்த நாளில் ஒரு பெரிய ஆவிக்குரிய அறுவடை துவங்கயிருந்ததால், இங்கு உவமையாக முக்கியத்துவம் இருக்கிறது. பெந்தெகொஸ்தே நாளன்று, உயிர்த்த கிறிஸ்து, தன்னோடு சேர்ந்து தனக்காக இந்த உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய சபையைக் கட்டத் துவங்கினார்.

அந்த நாளன்று, பரிசுத்த ஆவியானவர் மிகுந்த வல்லமையோடு இறங்கியதால் இது சாத்திமாயிற்று. பரிசுத்த ஆவியானவரின் வருகையோடு சேர்ந்து அடையாளங்களும், அற்புதங்களும் நிகழ்ந்தன. பலத்த காற்று அடிக்கும் போது உண்டாகும் முழக்கம் போல, முழக்கமுண்டாயிற்று. தீர்க்கதரிசனம் சொல்லிக் கொண்டிருந்தவர்களின் தலைகளின் மேல், அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் வந்து அமர்ந்தது. பின்பு அதே ஜனங்கள் “வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்.”

இந்த அற்புதமான சம்பவத்தின் அர்த்தத்தை புரிந்து கொள்வதற்கு ஒரு கேள்வியும் அதன் பதிலும் நமக்கு உதவி செய்யும். இதன் அர்த்தம் என்ன? என்பது தான் கேள்வி. பேதுரு தன்னுடைய பிரசங்கத்தில் இதற்கான பதிலைக் கூறுகிறார்: “தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்ட படியே இது நடந்தேறுகிறது”. கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள் என்று யோவேல் தீர்க்கதரிசனஞ் சொல்லியிருக்கிறார் (யோவேல் 2:28,29).

பெந்தெகொஸ்தேயின் போது, இந்த பாஷைகளின் அற்புதத்தின் மூலம் வந்த செய்தி ''தீர்க்கதரிசனம்'' என்று முத்திரையிடப்பட்டுள்ளது, அல்லது இது மக்களுடைய செவிகளில் சென்றடையும்படியாக தேவனிடத்திலிருந்து வந்த ஒரு செய்தியாகும்.

பவுல், ''அந்நிய பாஷையின் வரம்'' என்று தான் அழைக்கும் ஒரு அற்புதத்தைப் பற்றி எழுதுகிறார். பெந்தெகொஸ்தே நாளன்று பேசப்பட்ட பாஷை, தான் குறிப்பிடும் அந்நிய பாஷையின் வரத்திலிருந்து மிகவும் வித்தியாசமானது என்று அவர் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார். அவர், ''ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்'' (1 கொரிந்தியர் 14:2) என்று எழுதுகிறார்.

ஒரு விசுவாசி அந்நிய பாஷையின் வரத்தை செயல்படுத்தும்போது, அவனுடைய செய்தியானது மனிதனுடைய செவிகள் கேட்க சொல்லப் படுவதில்லை. அவன் தேவனிடத்தில் பேசுகிறான்.

பெந்தெகொஸ்தே நாளன்று பேசியவர்கள் செய்தது போல், அவன் மனுஷரிடத்தில் பேசுவதில்லை. அவன் தேவனிடத்தில் பேசுகிறான். ஆனால், பெந்தெகொஸ்தேவின் போது, நாம் வாசிக்கும் அந்தப் பாஷை ஒரு தீர்க்கதரிசனத்தை, தேவனிடத்திலிருந்து மனிதனுக்கு வந்த ஒரு செய்தியைக் குறிப்பதாகும். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவரின் வருகையோடு வந்த பல அற்புதங்களிலும், அடையாளங்களிலும் அந்த பாஷைகளும் ஒன்றாகும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பல பெந்தெகொஸ்தேக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது, எருசலேமில் நிகழ்ந்த பெந்தெகொஸ்தே. பின்பு, அப்போஸ்தலர்கள் சமாரியாவுக்குள் போன போதும், பின்பு யூதரல்லாத உலகத்திற்குள் ஒவ்வொரு முறை சென்ற போதும், அவர்கள் பெந்தெகொஸ்தே அனுபவத்தைப் பெற்றனர். ஒவ்வொரு முறையும், பெந்தெகொஸ்தே அனுபவம், கொடுக்கப்பட்ட போது, அது சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ள மகா பெரிய பொறுப்பின் நோக்கத்தோடு எப்போதுமே சம்பந்தப்பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்'' (அப்போஸ்தலர் 1:8) என்பதே அந்த மகா பெரிய பொறுப்பாகும்.

## முன்மாதிரிகள்

அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தை வாசிக்கும் போது,

நீங்கள் கவனிக்க வேண்டிய மற்றொரு காரியமும் உண்டு. சபையின் முதல் தலைமுறையில் வெளிப்படுகிற முன்மாதிரிகளைக் கவனியுங்கள். முதலாவதாக சபையின் மாதிரியைக் கவனியுங்கள். இந்த மாதிரிகளை நீங்கள் கண்ணுக்குப் புலப்படாத சபையின் காணப்படுகிற முன்மாதிரிகள் என்று அழைக்கலாம். வேத பண்டிதர்கள் சபையை, கண்ணக்குப் புலப்படுவது, கண்ணுக்குப் புலப்படாதது என்றும், உலகளாவிய சபை மற்றும் உள்ளூர்ச் சபை என்றும் பல்வேறு விதங்களில் கூறுகின்றனர். உங்கள் சமூகத்தில் நீங்கள் பகுதியாயிருக்கும் அந்த விசுவாசிகளின் ஐக்கியம்தான் உயிர்த்த கிறிஸ்து இந்த உலகத்தில் கட்டிக் கொண்டிருக்கும் உலகளாவிய சபையின், கண்ணுக்குப் புலனாகக்கூடிய ஒரு வெளிப்பாடாகும்.

கண்ணுக்குப் புலப்படாத, உலகளாகிய சபையின் வெளிப்பாடு தான், கண்ணுக்குத் தெரியக்கூடிய நம்முடைய சபை என்பது நமக்கு எப்படித் தெரியும்? நாம் எங்கே போயிருக்கிறோம், எதைத் தொட்டு இருக்கிறோம் என்பதை நம்முடைய கைரேகைகள் எப்படி அடையாளம் காட்டுமோ, அப்படியே சபையும் “கை ரேகைகள்” மூலம் அடையாளம் கண்டுகொள்ளலாம். முதல் தலைமுறை சபையைப் பற்றி நீங்கள் வாசிக்கும் போது இந்த “கை ரேகைகள்” இருக்கிறதா என்று சரிபாருங்கள். அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படும் இந்தச் சபையில், உண்மையான, உலகளாவிய, கண்ணுக்குப் புலப்படாத சபையின், கண்ணுக்குப் புலப்படக்கூடிய வெளிப்பாடுகள் – “கை ரேகைகள்” இருந்தன.

பெந்தெகொஸ்தே நாளன்று பிறந்த, சபையின் “பெருவிரல் ரேகை” தான் சுவிசேஷம் அறிவித்தல் ஆகும். அப்போஸ்தலர்கள், தாங்கள் மிஷனரிகளாகவும், சுவிசேஷம் அறிவிப்பவர்களாகவும் செல்ல வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டனர். பெந்தெகொஸ்தே நாளன்று மட்டும் மூவாயிரம் பேர் மனந்திரும்பினர், பின்பு அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த போது பல ஆயிரக்கணக்கான மக்கள் மனந்திரும்பினர்.

சபையின் ஆள்காட்டி விரல் ரேகையாகயிருந்தது உபதேசம் ஆகும். புதிதாக மனந்திரும்பியவர்கள் “அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” (அப்போஸ்தலர் 2:42) என்று நாம் வாசிக்கிறோம்.

கண்ணுக்குப் புலப்படாத சபையின், கண்ணுக்குப் புலப்படக்கூடிய “நடு விரல்” ரேகையாகயிருந்தது ஐக்கியம் ஆகும். தாங்கள் யாருக்கு போதித்தார்களோ, அந்த மக்கள் தங்களோடு பேச வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் நம்பினார்கள். அந்நியோந்நியம் என்பதன் கிரேக்க வார்த்தை “கோய்னோனியா”.

உபதேசிக்கப்படுகிறவர்கள், உபதேசிக்கிறவர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்ற இந்த யோசனையை அப்போஸ்தலர்கள் எங்கிருந்து பெற்றுக்கொண்டனர்? நாம் யோவான் சுவிசேஷத்தின் ஆய்விலிருந்து, அவர்களில் சிலர் இயேசுவை சந்தித்த போது, அவர் எங்கு தங்கியிருக்கிறார் என்று கேட்டது (யோவான் 1:37-39) உங்களுக்கு நினைவிருக்கலாம். இயேசு, அவர்களிடம் 'வந்து பாருங்கள்' என்று சொல்லி பதிலளித்தார். அவர்கள், அவர் தங்கியிருந்த இடத்தை வந்து பார்த்தனர். அவர்கள் அவரோடு மூன்று ஆண்டுகள் வாழ்ந்தனர். எனவே தான் பெந்தெகொஸ்தே நாளன்று மனந்திரும்பிய ஜனங்களுக்கு தங்களுடைய சீஷர்களாக்கியவர்களோடு ஒரு விசேஷித்த ஐக்கிய தன்மையிருந்தது.

"மோதிர விரல் ரேகை" ஆராதனையைக் குறிப்பதாகும் அப்போஸ்தலர்களோடு "அப்பம் பிட்குதலில்" மனந்திரும்பியவர்களும் பங்கெடுத்தனர் (அப்போஸ்தலர் 2:42) என்று நாம் வாசிக்கிறோம். இது நற்கருணைப் பந்தியைக் குறிப்பதாகும். நாம் கர்த்தருடைய பந்தி என்றழைக்கும் காரியத்தை இயேசு உருவாக்கிய போதும், தாம் திரும்பவும் வரும்வரை அந்தப் பந்தியில் பங்கெடுக்குமாறு கூறிய போதும் (1 கொரிந்தியர் 11:26) தன்னுடைய சபை எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதை விரும்புகிறார் எனும் போதனையை மட்டுமே அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்து வந்தார் (லூக்கா 22:14-19). எனவே, ஆதி அப்போஸ்தலர்கள் ஒன்றாகக் கூடியபோது, கர்த்தருடைய பந்தியை அனுசரித்து ஆராதனை செய்தனர்.

அவர் அப்போஸ்தலர்களோடு ஜெபத்திலும் தரித்திருந்தனர் என்றும் நாம் வாசிக்கிறோம். இது கண்களுக்கு புலப்படாத சபையின் கண்களால் காணக்கூடிய "சுண்டு விரல் ரேகையாகும்". நாம் உயிர்த்த கிறிஸ்துவில் நிலைத்திருந்தாலேயொழிய அவருடைய பணியை நம்மால் செய்ய முடியாது, எனவே நாம் தொடர்ந்து ஜெபித்து, உயிர்த்து ஜீவிக்கிற இயேசுவாகிய ஆவிக்குரிய திராட்சைச் செடியிலிருந்து வல்லமையை எடுத்துக் கொள்ள வேண்டும் (யோவான் 15:1-16) இயேசு, அப்போஸ்தலர்களுக்கு தொடர்ந்து விடாமல் கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள் என்று போதித்துள்ளார். ஏனெனில் யாரெல்லாம் கேட்கிறார்களோ அவர்கள் பெற்றுக் கொள்வார்கள், தேடுகிறவர்கள் கண்டடைவார்கள், தட்டுகிறவர்களுக்கு கதவு திறக்கப்படும், பிதாவாகிய தேவன் அவர்களுக்கு பரிசுத்த ஆவியைத் தந்தருளுவார் (லூக்கா 11:9-13; மத்தேயு 7:7-11).

## "அவர் எங்கே?"

ஞானிகள் "அவர் எங்கே?" (மத்தேயு 2:2) என்று கேட்பதோடு புதிய ஏற்பாடு ஆரம்பமாகிறது. இயேசு நம்மிடம், தாம் சபையைக் கட்டப்போவதாகவும், பாதாளத்தின் வல்லமை எதுவும் தம்முடைய சபையைத்

தாம் கட்டுவதைத் தடுக்க முடியாது (மத்தேயு 16:18) என்றும் கூறினார். உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்து தம்முடைய சபைகளுக்கு மத்தியில் நடப்பதை அப்போஸ்தலராகிய யோவான், ஒரு இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடாக பதிவு செய்துள்ளார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:13-2:1). அந்த வெளிப்பாடு ஞானிகளுடைய கேள்விக்குப் பதிலளிக்கிறது: அவர் 'சபைகளின் மத்தியில்' இருக்கிறார். அவர் அங்கு தான் இருக்கிறார். அவர் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் அந்த அற்புதமான பணியைத் துவங்கினார், இன்றும் அந்தப் பணியை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் என்றும் வாசிக்கிறோம். இன்று, நம்முடைய சபைகளின் முக்கியமான அடையாளங்களை அல்லது சபையின் ஆரோக்கியத்தை எப்படி அளிப்பது? முதலாவதாக இந்தக் கைரேகைகளின் சாட்சியங்களை நாம் தேட வேண்டும். நாம் நம்முடைய சபைகளில் இந்த அடையாளங்களைப் பார்க்கும்போது அவற்றிற்கு சுவிசேஷம் அறிவித்தல், உபதேசித்தல், ஐக்கியம், ஆராதனை மற்றும் ஜெபம் என்ற ஊழியங்களுக்கு ஏற்றவாறு, ஒன்றிலிருந்து பத்து வரை ஒரு எண் கொடுத்து, பின்னர் நம்முடைய சபை, முதல் தலைமுறை சபையோடு எப்படி ஒத்துப்போகிறது என்று பார்க்க வேண்டும்.

அதன் பின்பு, உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்து இன்று இந்த உலகத்தில் கட்டிக்கொண்டிருக்கும் சபையின், காணக்கூடிய ஒரு வெளிப்பாடாக நம்முடைய சபை இருக்கிறது என்று நாம் சொல்லக்கூடிய அளவிற்கு நமக்கு ஒரு அளவுகோல் இருக்கும்.

## அத்தியாயம் மூன்று

# கண்ணுக்குப் புலப்படாத சபையின் காணப்படக்கூடிய முன்மாதிரிகள்

புதிய ஏற்பாட்டு சபை, அநேகமாக உடனடியாக அச்சுறுத்தல் களையும், சவால்களையும் சந்தித்தது. இந்தப் பிரச்சனைகளோடு வெளியிலிருந்து வந்த துன்புறுத்தலையும், உள்ளே இருந்த பிரச்சனைகளையும், சபையின் தலைவர்கள் எப்படிச் சமாளித்தார்கள் என்று நாம் பார்க்கும் போது, சில முன்மாதிரிகள் வெளிப்பட ஆரம்பிக்கின்றன. இந்த முன்மாதிரிகள், பவுல் நமக்குக் கூறிய சில உதாரணங்களும் எச்சரிக்கைகளும் ஆகும். இவை நாம் வேத வரலாற்றைப் படிக்கும்போது நம்மை அறிவுறுத்தவும் எச்சரிக்கவும் எழுதப்பட்டவையாகும். (I கொரிந்தியர் 10:11).

உதாரணமாக, சபையின் வரலாற்றில் மிகவும் ஆரம்ப நிலையிலேயே நிலைநாட்டப்பட்ட ஒரு காரியம் கொடுத்தலைக் குறித்த முன்மாதிரியாகும். ஆஸ்திகளை (சொத்து) வைத்திருந்தவர்கள் அதை விற்று அந்தப் பணத்தை அப்போஸ்தலரிடம் கொண்டு வந்து கொடுத்தனர். விசுவாசிகளின் தேவைகளுக்கு ஏற்றவாறு அது பகிர்ந்து கொடுக்கப்படும்படியாக அப்படி செய்யப்பட்டது. அவர்கள் தசமபாகம், காணிக்கை அல்லது பலியை விட அதிகமாகவே கொடுத்தனர், அவர்கள் தங்களிடமிருந்ததையெல்லாம் கொடுத்தனர்.

இயேசு “இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்” (மத்தேயு 22:21). தேவன் இராயனுக்குரியதை கேட்கமாட்டார், ஆனால் தேவனுக்குரியதை இராயன் கேட்கக்கூடிய வாய்ப்புகள் உண்டு. தேவனுக்குரியதை இராயன் கேட்பாரேயாகில், அதை அவருக்கு நம்மால் கொடுக்க முடியாது என்று இந்தப் புதிய ஏற்பாட்டின் உதாரணம், இயேசுவின் உபதேசம் கூறுகிறது.

இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும், சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கவும் உபதேசிக்கவும் அப்போஸ்தலர்களுக்கு இயேசுவால்

கட்டளையிடப்பட்டது. ஆனால் இயேசுவின் நாமத்தைக் குறித்து பேசவே கூடாது என்று அதிகாரிகள் அவர்களுக்குக் கட்டளையிட்டனர் (அப்போஸ்தலர் 4:18). முதல் முறையாக இது நடந்த போது எளிமையான, சாதாரண மனிதர்களாக இருந்த அந்த அப்போஸ்தலர்களால் தேவனுக்கு செவிகொடுப்பதா அல்லது தங்கள் அளுநர்களுக்கு செவிகொடுப்பதா, என்று தீர்மானம் எடுக்க அவர்கள் தகுதி பெறவில்லை. பின்பு அவர்கள் ஒரு ஜெபக்கூட்டத்தை நடத்தினர். அடுத்த முறை, கிறிஸ்துவின் நாமத்தையும் சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கக் கூடாது என்று அதிகாரிகள் தடுத்த போது, அவர்கள் உடனடியாக, "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (அப்போஸ்தலர் 5:29) என்று கூறினர்.

தங்களுடைய அழைப்பிற்கு உண்மையாயிருக்கும் பொருட்டு, மனுஷருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் கீழ்ப்படியும் போது, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் துன்பத்தைச் சந்திக்க வேண்டிய நேரம் உண்டு. பல நூற்றாண்டுகளாக, இன்றும் கூட உலகம் முழுவதிலும், விசுவாசிகள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். சபை வரலாற்றில், வேறு எப்போதும் இல்லாத அளவுக்கு, 1940களிலும், இரண்டாம் உலகப்போரின் இறுதியிலும் தங்கள் விசுவாசத்திற்காக பலர் மரித்திருக்கின்றனர்.

சபையில், சபைக்குரிய ஒழுக்கத்தின் மாதிரியும் வெளிப்படுவதை நாம் பார்க்கிறோம். அனனியா என்ற மனிதனும், அவனுடைய மனைவி சப்பீராளும் தங்கள் நிலத்தை விற்றனர். அந்த விற்பனையில் கிடைத்த பணத்தைப் பற்றி அவர்கள் அப்போஸ்தலரிடம் பொய் பேசினார்கள். இந்தக் கதையில், பேதுரு ஆச்சரியப்படத்தக்க பகுத்துணர்தலைக் காண்பிக்கிறார். அவர், "பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? .....நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்" அப்போஸ்தலர் (5:3,4) என்றார். அவர்களைத் தனித் தனியாக தங்கள் பாவத்தைக் குறித்து விசாரித்த போது அனனியாவும் சப்பீராளும் விழுந்து மரித்தனர்!

இந்தக் கண்டிப்பான சபை ஒழுக்கம் சபையை சுத்தமாகக் காத்துக்கொண்டது. சீஷர்களிடத்தில் தேவனைக் குறித்த ஒரு பரிசுத்தமான பக்தியுள்ள தேவபயத்தை உண்டாக்கியது. கிறிஸ்துவின் சீஷனாகவும், சபையின் அங்கத்தினராகவுமாவது என்பது ஒரு மிகவும் அபாயமான காரியம் என்று எருசலேமிலிருந்த மதசார்பற்ற கலாச்சாரத்தைச் சார்ந்த மக்கள் அறிந்திருந்தனர் (5:11–13).

சபை வளரும் போது பின்பற்றப்படவேண்டிய ஒரு மாதிரி (pattern) அப்போஸ்தலர் நடபடிகள் ஆறாம் அதிகாரத்தில் வருகிறது. பல மக்கள்

ஒன்று சேர்ந்து ஒரே சமூகமாக வாழ்ந்து வந்தனர். சபை மிகவும் வேகமாக வளர்ந்து வந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றாக வாழும்போது, ஒரு நாளில் பல வேளைகள் அவர்களுக்கு உணவளிக்க வேண்டியிருந்ததால், உணவு பற்றிய வேலைக்காக ஒரு திட்டம் தேவையாயிருந்தது (6:1). இந்தக் காரியத்தில் தாங்கள் கவனம் செலுத்த வேண்டியிருப்பதால், தேவனுடைய ஊழியத்திலிருந்து தாங்கள் வெளியே இழுக்கப்படுவதாகவும் அப்போஸ்தலர்கள் கண்டுகொண்டனர். எனவே அப்போஸ்தலர்கள் திரளான மக்கள் நிறைந்த ஒரு கூட்டத்தைக் கூட்டி, அவர்களிடம், "நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்று கூறினார்கள் (6:2-4).

அதைச் செய்து முடித்தபின், அந்தக் காரியத்தைக் கவனிக்கும் படியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அவர்கள் ஜெபிப்பதிலும், தேவனுடைய ஊழியத்திலும் முழுமையாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். இந்தத் தீர்மானம் தேவனால் மிகுதியாக ஆசீர்வதிக்கப்பட்டது, இது சுவிசேஷம் எருசலேம் பட்டணத்தில் வேகமாகப் பாவுவதற்கு உதவி செய்தது. இன்று பல சபைகளால் உதவிக்காரர் (deacons) என்று அழைக்கப்படுபவர்கள் தோன்றியது இப்படித்தான். தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிக்காரர்கள் சபையின் காரியங்களைக் கவனிக்க பொறுப்பெடுத்துக் கொள்ளும் போது, போதிக்கும் வரமுடையவர்கள், போதிக்கும் ஊழியத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும். இந்தக் குறிப்பிட்ட சமயத்தில் சபை காட்டிய முன்மாதிரியானது, கிறிஸ்துவின் சாரீரத்தில் ஒவ்வொரு சீஷருக்கும் இடமுண்டு என்ற கொள்கையை நிலைநிறுத்துகிறது. பரிசுத்த ஆவியின் வல்லமையளிக்கக்கூடிய அபிஷேகம் யாரிடமெல்லாம் உண்டோ, அவர்களிடமெல்லாம் ஆவிக்குரிய வரங்கள் உண்டு. அந்த வரங்களுள் சில போதிக்கக்கூடிய வரங்கள், சில நடைமுறைக்கேற்ற ஆவிக்குரிய வரங்கள்.

புதிய எற்பாடு, உதவி செய்வோர் அல்லது காரியங்களை மேற்பார்ப்பவர்கள் ஆகியவர்களுடைய வரங்கள், போதிப்பவர், உபதேசிப்பவர் அல்லது சுவிசேஷத்தை அறிவிப்பவருடைய வரங்களைப் போலவே ஆவிக்குரியவைதான் என்று கூறுகிறது. இருப்பினும் ஒவ்வொரு சீஷரும், தங்கள் ஸ்தானத்திலிருந்தபடியே தேவன் தங்களுக்குக் கொடுத்துள்ள வரங்களைப் பயன்படுத்த வேண்டும். இந்த முன்மாதிரியை ஏற்றுக் கொண்டு, அதைப் பயன்படுத்தும் சபை எதுவோ, அது ஆசீர்வதிக்கப்படும், அந்தச் சபை வளரும்.

உங்களுடைய ஆவிக்குரிய வரத்தின் முன்மாதிரியை கண்டு பிடித்து விட்டீர்களா? அதைக் கண்டடைந்தவுடன், நீங்கள் கர்த்தருக்கு செய்யக்கூடிய எந்த ஊழியங்களைச் செய்ய உங்களுடைய ஆவிக்குரிய வரங்கள் உங்களுக்கு உதவுகின்றனவோ, அந்த ஊழியங்களில் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள். இந்த மாதிரியில், நடைமுறை ஊழியங்களில் உண்மையாயிருந்த சில சீஷர்கள், பின்பு போதனை ஊழியத்திற்கு வருவதை நாம் பார்க்கிறோம். இதற்கு உதாரணம் இரத்தசாட்சியாக மரித்த ஸ்தேவானும் சுவிசேஷகனாகிய பிலிப்புவும் ஆவார்கள். அவர்கள் உதவிக்காரர்களாக ஆரம்பித்து, அதில் உண்மையாயிருந்ததால் சுவிசேஷகர்களானார்கள்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் வெளிப்படும் மற்றொரு முன்மாதிரி இரத்த சாட்சியாக மரிப்பதாகும். இரத்தசாட்சிகளாக மரித்தவர்களுடைய இரத்தமே, சபையை வளர்ச்சியடையச் செய்யக்கூடிய வித்து என்பது சபை வரலாற்றை எழுதியவர்களின் ஒரு பிரசித்தமான கூற்றாகும். ஸ்தேவான் ஒரு பிரசங்கத்திற்காகத் தன் ஜீவனையே கொடுக்கிறார் (7:52-60). ஸ்தேவான், தன்னுடைய விசுவாசத்தினிமித்தம் மரித்த போது, தர்சுவை சார்ந்த சவுல் என்ற மனிதன் ஸ்தேவானைக் கல்லெறிந்தவர்களுடைய வஸ்திரங்களைப் பிடித்துக்கொண்டிருந்தான். இரத்தசாட்சியாக மரித்த ஸ்தேவானுடைய மரணம், சவுல் என்ற இந்த மனிதனுடைய மனந்திரும்புதலுக்கு உந்துதலளித்திருக்கலாம். மேலே குறிப்பிடப்பட்ட இரத்தசாட்சிகளின் இரத்தம் சபையை வளர்ச்சியடையச் செய்வதைப்பற்றிய கூற்றின் அர்த்தம் இது தான்.

சபையில் காணப்படும் மற்றொரு அழகான, வெளிப்படையான முன்மாதிரி குணமாக்குதல் ஆகும். லூக்காவின் சுவிசேஷத்தில் இருப்பது போலவே, சபையைக் குறித்து அவர் எழுதிய வரலாற்றிலும் குணமாக்குதல் பற்றி அதிகம் வலியுறுத்தப்பட்டுள்ளது. லூக்காவைப் பொறுத்தவரை, உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்து, இந்த குணமாக்குதலின் ஊழியத்தை அப்போஸ்தலர் மூலமாக இன்றும் செயல்படுத்தி வருகிறார்.

தேவாலயத்தின் வாசலில் உட்கார்ந்திருந்த ஒரு மனுஷனை பேதுருவும் யோவானும் சந்திக்கின்றனர். அவன் நாற்பது வயது நிரம்பிய ஒரு திமிர்வாதக்காரன். அவனை வாழ்நாள் முழுவதும், தேவாலயத்தின் வாசலுக்கு, பிச்சைக்கேட்கும்படியாக யாராவது சுமந்து செல்ல வேண்டியிருந்தது. பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்குப் போன போது, அந்த மனிதன் தன் பாத்திரத்தோடு அங்கிருந்தான். பேதுரு அவனிடம், “வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட” (3:6) என்று கூறினார்.

அந்த மனிதன் எழுந்து நடந்தது மட்டுமல்லாமல், குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் என்று நாம் வாசிக்கிறோம். சமீபத்தில் ஒரு பெருமையுள்ள, அந்தஸ்துள்ள சபையின் தலைவர், "என்னிடத்தில் வெள்ளியும் பொன்னுமில்லை" என்று இனிமேலும் சபையால் சொல்ல முடியாது என்றார். அதற்கு கர்த்தருடைய தாழ்மையான ஒரு ஊழியர், "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்றும் சபையால் இன்று கூற முடியாது என்று பதிலளித்தார்.

பெதஸ்தா குளத்தில் ஒரு மனிதனை இயேசு குணமாக்கிய அந்த குணமாக்குதல் போல (யோவான் 5) இதுவும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, அப்போஸ்தலர்களுக்கு ஒரு மிகப்பெரிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. படிப்பறிவில்லாத இந்த மீன்பிடிக்கிறவர்கள் தேவாலயத்தில் பிரசங்கிப்பதைப் பார்த்து, மத அதிகாரிகள் திகைப்படைந்தனர். அவர்கள் அப்போஸ்தலர்களைக் கைது செய்து, பிரசங்கிக்கக்கூடாது என்று தடுத்த போதிலும் சுகமளிப்பின் அற்புதத்தை அப்போஸ்தலர்கள் செய்ததை அவர்கள் கண்டனர்.

இந்த சுகமளிப்பின் ஊழியத்தில் ஏதோ ஒன்று உள்ளது. அது புதிய ஏற்பாட்டு சபையின், இயற்கைக்கு அப்பாற்பட்ட பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் ஆகும். சபைக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தால் தான், சபையானது உலகத்தால் மறுக்கப்படாத இந்த செயல்பாட்டைச் செய்ய முடிந்தது என்ற இந்த முன்மாதிரியை சபையின் இந்த முதல் தலைமுறையில் கவனிக்கத் தவறாதீர்கள்.

## இரத்தசாட்சியெனும் முன்மாதிரி

முதல் உதவிக்காரர்களில் (deacons) ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தேவான், அந்த நடைமுறை ஊழியத்திலிருந்து போதனை ஊழியத்திற்கு சென்று, ஒரு பெரிய போதகரானார். அவர் யூதர்களின் ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக, தன்னுடைய அபாரமான பிரசங்கத்தை, பிரசங்கித்தபோது, பரிசுத்த ஆவியின் வல்லமையால் தான் அதை செய்தார். பிரசங்கித்தல், போதித்தல் என்பது கஷ்டப்பட்டு படிப்பதினாலும் அதை சாமார்த்தியமாக பேசுவதாலும் மட்டும் வந்து விடாது. போதித்தல் என்பது ஒரு ஆவிக்குரிய வரம். அது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடு செயல்படுத்தப்படவேண்டும்.

தன்னுடைய பிரசங்கத்தில், ஸ்தேவான் பழைய ஏற்பாட்டின் முப்பத்து ஒன்பது புத்தகங்களையும் பற்றி ஒரு ஆராய்ச்சியைத் தருகிறார். அவர் வேதாகமத்தை நன்கு விளங்கிக் கொண்டார் என்பது தெரிகிறது. அவர் ஆபிரகாமிலிருந்து ஆரம்பித்து, ஈசாக்கு, யாக்கோபைப் பற்றி குறிப்பிட்டு, யோசேப்பு, மோசே, யோசுவா, தாவீது மற்றும் சாலொமோன் ஆகியவர்களின் ஊழியங்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். பாபிலோனிய சிறையிருப்பு வரையுள்ள எபிரெய வரலாறு முழுவதையும் குறிப்பிடுகிறார்.

ஸ்தேவானின் பிரசங்கம் இறுதியில் ஒரு பயனுள்ள பிரசங்கமா யிருந்தாலும், அது சுவிசேஷத்தைப் பற்றியதல்ல. மதத் தலைவர்கள் தேவனுடைய கிருபை, அன்பு மற்றும் இரட்சிப்பை மறுதலித்துவிட்டனர் என்பதை அவர்களுக்குக் கூறுவதே ஸ்தேவானுடைய பிரசங்கத்தின் நோக்கமாகும். தேவன் அவர்களுக்கு செய்ய முயற்சித்த எல்லா நல்ல காரியங்களையும் அவர்கள் மறுத்திருந்தனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, மேசியாவை மறுதலித்ததுதான் அவர்களுடைய மறுதலிப்பின் உச்சக்கட்டமாகும்.

இந்த எபிரெய வரலாறு முழுவதையும், இந்த மதத்தலைவர் களுக்காக ஸ்தேவான் எடுத்துக் கூறும்போது, அவர்கள் எப்போதுமே தேவனுடைய இரட்சிப்பை மறுத்தனர் என்பதை விளக்கினார்.

ஸ்தேவானுடைய பிரசங்கத்தினால் வரும் விளைவுகள் எதிர் பார்த்ததுதான்.

“அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக்கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி, அவனைக் கல்லெறிந்தார்கள்.” ஆனால் ஸ்தேவான் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான். “இதோ பாருங்கள், வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்” என்றான். அப்போது சாட்சிக்காரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்.

ஸ்தேவான், “கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று ஜெபித்தான். பின்பு முழங்காற்படியிட்டு, “ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்” என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்.

ஸ்தேவான் தன்னுடைய பிரசங்கத்திற்காக மரித்ததன் மூலம், தான் ஆவியானவரால் நிரப்பப்பட்டவன் என்பதை நமக்குக் காண்பிக்கிறான். தேவனையும் இயேசுவையும் பற்றி அவனுக்கு ஒரு மிகப்பெரிய தரிசனம் இருந்தது. அவன் தன்னுடைய கர்த்தர், தான் எப்படி மரிக்க வேண்டும் என்று ஏவுதல் அளித்தாரோ அப்படியே, தன்னுடைய ஜீவனை எடுத்துக்கொண்டிருந்தவர்களின் மன்னிப்புக்காக ஜெபித்தபடியே மரித்தான்.

ஸ்தேவான் கல்லெறியப்பட்டபோது, அங்கு நாம் ஒரு மிகப்பெரிய மிஷனரியை, சபைகளை ஸ்தாபித்தவரை, போதகரை, உபதேசிப்பவரை, இயேசுகிறிஸ்துவின் சபை வரலாற்றை ஆக்கியோனை சந்திக்கிறோம். நாம்

அவரை சந்திக்கும் போது அவர் ஸ்தேவானைக் கல்லெறிந்து கொன்றவர்களுடைய வஸ்திரங்களை வைத்திருப்பவனாக இருக்கிறான். பவுல் அப்போஸ்தலனாக மாறப்போகும் அவன் தர்சுவின் சவுலாக இருந்தான்.

தர்சுவின் சவுலாகிய அந்த வாலிபனைக் குறித்து நாம் அறியும் போது, ஸ்தேவானுடைய பிரசங்கமும், அவருடைய முன்மாதிரியும், தன்னுடைய வாழ்க்கையில் அப்படியொரு சக்திவாய்ந்த பாதிப்பை எப்படி, ஏன் ஏற்படுத்தியது என்பதை நாம் உணர்வோம். சவுல் பரிசேயர்களுக் கெல்லாம் பரிசேயனாயிருந்தான். யூத விசுவாசத்தின் பாரம்பரிய கோட்பாடுகளைக் காத்துக் கொள்வதில் வல்லவனாயிருந்தான். யூத மதத்திற்கு அச்சுறுத்தலாயிருந்த, புதிய விசுவாசத்தை அவன் வெறுத்தான். ஸ்தேவான் செய்தது போல், இயேசு கிறிஸ்துவுக்காக மரிப்பதற்கு நீங்கள் விரும்புவீர்களா? உங்களுடைய எதிரிகளை மன்னிப்பதற்கான கிருபை உங்களுக்கு இருக்கிறதா? இயேசு கிறிஸ்துவுக்காக வாழ்வதற்கு நீங்கள் விரும்புகிறீர்களா? அதைவிட மிகவும் கடினமான ஒரு கேள்வி, ‘‘அதற்கான கிருபை உங்களுக்கு உண்டா?’’ என்பதே.

## அத்தியாயம் நான்கு

## சீஷனாக்குவது எப்படி

நாம் ஒரு சீஷனை உருவாக்குவது எப்படி? இந்த கேள்விக்குப் பதிலை நமக்கு விளக்கும் அழகான ஒரு சம்பவம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இருக்கிறது. (அப்போஸ்தலர் 8:26-40). இங்கு, ஸ்தேவானைப் போலவே, ஆதியிலிருந்த உதவிகாரர்களில் ஒருவராகிய பிலிப்பு, நடைமுறைக்கொத்த ஆவிக்குரிய வரத்தையுடையவராயிருந்து, சுவிசேஷகனானபோது மேய்ப்பருக்குரிய ஊழியத்திற்குச் சென்ற முன்மாதிரிகளில் ஒருவராயிருக்கிறார். அவர் சமாரியாவிற்குச் சென்று, அங்கு மிகவும் பலனுள்ள ஒரு சுவிசேஷ ஊழியத்தைச் செய்தார்.

அவர் இந்த சுவிசேஷ ஊழியத்தைச் செய்து கொண்டிருந்த போது, கர்த்தர் ஒரு தூதனின் மூலமாக அவரிடம்: "நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்தரமார்க்கமாய்ப் போ" என்றான். (அப். 8:26) வழக்கமாக சுவிசேஷகர்கள் பட்டணங்களுக்குத் தான் செல்வர், இருப்பினும், பிலிப்பு கீழ்ப்படிந்து வனாந்தரத்திற்குச் சென்றார்.

பிலிப்பு வனாந்தரத்தைச் சென்றடைந்த போது, இரதங்கள் வரிசையாக வனாந்தரத்தைக் கடந்து செல்வதைக் கண்டார். ஆவியானவர் அவரை, ஒரு குறிப்பிட்ட இரதத்திற்கு நேராக வழிநடத்தினார். கிரேக்க பாஷையில், இந்தப் பகுதியானது, "மற்ற இரதங்களிலிருந்து இந்த இரதம் மிகவும் வேறுபட்டதாகயிருந்தது" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அங்கு ஒரு கூட்ட இரதங்கள் இருந்ததாக நாம் அறிகிறோம். பிலிப்பு அந்த குறிப்பிட்ட இரதத்தை நெருங்கிய போது, எத்தியோப்பிய மந்திரி ஒரு சுருளிலிருந்து ஏசாயா புத்தகத்தின் ஐம்பத்து மூன்றாவது அதிகாரத்தை வாசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.

இந்த எத்தியோப்பியன் ஒரு அரசியல்வாதி, எத்தியோப்பியாவின் பொருளாளர். இவர் ஏசாயாவின் சுருளை வாசித்துக் கொண்டிருக்கிறார். இவருக்கு ஆவிக்குரிய பசியிருந்ததால் தான் எத்தியோப்பியாவிலிருந்து எருசலேம் வரை பயணம் செய்திருக்கிறார். அவர் எருசலேமிற்கு வந்தபோது,

இயேசு விவாதித்துக் கண்டித்த அதே அன்பில்லாத மதத்தை அங்கேயும் கண்டார். அவர் எருசலேமில் ஆவிக்குரிய உண்மைத்தனத்தைப் பார்க்கவில்லை, ஆனால் ஏசாயாவின் புத்தகச்சுருளை மட்டும் வாங்கிக் கொண்டார். அந்தச் சுருளிலிருந்து அவர், "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" என்று சத்தமிட்டு வாசித்துக் கொண்டிருந்தார் (ஏசாயா 53:6).

பிலிப்பு அவரிடம்: "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா" என்று கேட்கிறார். அதற்கு எத்தியோப்பியன், "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்" என்று பதிலளிக்கிறார் (30,31). பின்பு பிலிப்பு அவனோடு இரதத்தில் ஏறிக்கொண்டு, ஏசாயா புத்தகத்தின் அந்தப் பகுதியானது, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை எப்படி அறிவிக்கிறது என்பதை விளக்கியவாறு சென்றார்.

பிலிப்பு அவரிடம் சுவிசேஷத்தைக் கூறி, இயேசுவின் மேலுள்ள விசுவாசம், தண்ணீரில் எடுக்கும ஞானஸ்நானத்தின் மூலம் நிச்சயமாக்கப் படுகிறது என்று கூறி முடிக்கிறார். அப்போது அந்த எத்தியோப்பியன், "இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன," என்று கேட்கிறார், அதற்கு பிலிப்பு: "நீர் விசுவாசித்தால் தடையில்லை," என்றான்.

தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவதற்கு முக்கியமாக வேண்டியது, "முழு இருதயத்தோடும் விசுவாசிக்க" வேண்டியது தான். இதை நாம் விசுவாசிகளின் ஞானஸ்நானம் என்று அழைக்கிறோம். விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் முறைகளில் சபை வெவ்வெறு விதமாகப் பிரிந்துள்ளது. இருப்பினும், ஞானஸ்நானம் எந்த விதமாகக் கொடுக்கப் படுகிறது என்பதைப் பார்க்கிலும் முக்கியமானது ஞானஸ்நானத்தின் அர்த்தம் ஆகும். "போய், பிரசங்கித்து, ஞானஸ்நானங் கொடுத்து, அந்த சீஷர்களுக்கு உபதேசித்து அவர்களை சீஷராக்குங்கள்" என்பதே மிகப் பெரிய கட்டளையாகும்.

ஞானஸ்நானம் ஒரு திருமண சடங்கைப் போன்றதாகும். ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயிடம் தன்னைத் திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்கும்போது, அவள் அதற்கு தன் இசைவைக் கூறுவது, அவர்கள் இருவருக்குமே ஒரு புனிதமான தருணமாகும். அவர்கள் திருமணம் செய்து கொள்ளும் போது, ஏற்கனவே அவர்கள் இருவரும் தனியாக எடுத்திருக்கும் ஒரு முடிவிற்கு, பொதுவாக ஒரு அறிவிப்பைக் கொடுத்து தங்கள் குடும்பத்தினர், உறவினர் மற்றும் நண்பர்களை அந்த வைபவத்திற்கு அழைக்கின்றனர். இந்த எத்தியோப்பியனைப் போல் ஒரு மனிதன் விசுவாசிப்பது – என்பது ஒரு தனிப்பட்ட காரியமாகும், அவன் ஞானஸ்நானம் பெறும்போது அது பொதுவாக அறிவிக்கப்படுகிறது.

இயேசு, தமது பெரிய கட்டளையின் ஒரு பகுதியாக ஞானஸ்நானத்தையாக்கியபோது, அவரைப் பின்பற்றுவதையும், அவர்மேல் நாம் கொண்டுள்ள விசுவாசத்தையும் இரகசியமாக வைக்கக் கூடாதவைகளாக ஆக்கினார். நாம் எப்படி வெளிப்படுத்துவது? நாம் ஒரு சபையில் சேருகிறோமா? சுவிசேஷகனால் கொடுக்கப்படும் அழைப்பிற்கு பதில் கொடுக்கிறோமா? ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதில்லை, ஆனால், ஞானஸ்நானம் என்பது இயேசு கிறிஸ்துவால் கட்டளையிடப்பட்ட விசுவாசத்தை, மற்றவர் காணும்படி அறிவிப்பது தான்.

## பேதுருவைப் பற்றிய ஒரு கதை

தர்சுவின் சவுலைப் பற்றி (அதிகாரம் 9) நாம் பார்ப்பதற்கு முன்பாக பேதுருவைப் பற்றிய ஒரு சம்பவத்தை (அதிகாரங்கள் 10,11) நாம் பார்க்க வேண்டும். இந்தச் சம்பவம் பிலிப்புவின் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தைப் போன்றே சீஷனாக்குவது எப்படி என்று கூறுவதால், இதுவும் அந்தச் சம்பவத்தோடு சேர்ந்து ஆராயப்பட வேண்டும். பேதுரு மேல் வீட்டில் ஏறி சிறிது கண்ணயர்ந்த போது, நான்கு முனைகளிலும் கட்டப்பட்ட ஒரு துப்பட்டியை, தரிசனத்தில் கண்டார். அந்தத் துப்பட்டியில், யூதர்கள் உண்பதற்கு தடைசெய்யப்பட்டிருந்த பல மிருகங்கள் இருந்தன. மூன்று முறை ஒரு குரல் பேதுருவிடம், "பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி" (10:13) என்று கூறியது. ஒவ்வொரு முறையும் பேதுரு, "இப்படிப்பட்ட இறைச்சியை நான் ஒருபோதும் புசித்ததில்லை" என்று கூறுகிறார்.

பின்பு, கீழ் வீட்டின் கதவு தட்டப்படுகிறது. கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் மனிதர்களோடு, எந்தக் கேள்வியையும் கேட்காமல் போக வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் பேதுருவைத் தெரிந்து கொள்ளச் செய்கிறார். இந்த மனிதர்கள் ரோம நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவின் வேலைக்காரர்களாவர். அவர்கள், தங்களுடைய எஜமான் ஜெபித்துக் கொண்டிருந்த போது ஒரு தரிசனம் கண்டதாகவும், அதில் தன்னுடைய மனுஷர்களை தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிற்கு அனுப்பும்படியாகவும், அங்கிருந்து பேதுரு என்னும் பெயருடைய மனிதனை அழைத்துவரச் சொல்லவும், அவர் வந்து அவருடைய வீட்டார் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுவார் என்றும் கூறப்பட்டதாகவும் அவரிடம் கூறுகிறார்கள்.

பேதுருவை எதிர்கொள்ளவேண்டிய தடைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். கொர்நேலியு ஒரு புறஜாதி மனிதன் மட்டுமல்ல. அவன் பேதுருவின் எதிரி. யூதர்கள் புறஜாதியினரை நாய்கள் என்றே குறிப்பிடுவார்கள், ஏனெனில் யூதரல்லாத ஒரு நபருக்கு ஒரு நாய்க்கு இருக்கக்கூடிய ஆவிக்குரிய விழிப்புணர்வு தான் இருக்கும் என்று நம்பினார்கள். யூதரல்லாத ஒரு நபருடைய வீட்டிற்குள் செல்லவும் யூதனுக்கு

விலக்கப்பட்டிருந்தது. இப்போது, ஒரு ரோம நூற்றுக்கு அதிபதியாகிய புறஜாதியாரின் வீட்டிற்கு இரட்சிப்பைப் பிரசங்கிக்கும்படியாக பேதுரு வழி நடத்தப்படுகிறார்.

பேதுரு, கொர்நேலியுவின் வீட்டைச் சென்றடைந்த போது, அங்கு கொர்நேலியு தன் வீட்டாரனைவரையும், பேதுருவின் சுவிசேஷத்தைக் கேட்கும்படியாக ஒன்று சேர்த்திருந்ததைக் கண்டார். பேதுரு, தான் கண்ட தரிசனத்தின் அர்த்தத்தை இப்போது புரிந்து கொள்வதாக விளக்கிக் கூறினார். அந்த அசுத்தமான மிருகங்கள் அசுத்தமான மக்களாகிய புறஜாதியைக் குறிக்கும். பேதுருவின் முதல் வார்த்தைகள், "எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்" (28) என்பதாகும்.

பேதுரு சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த சம்பவத்தைப் போன்ற ஒரு சம்பவம் நடைபெறுகிறது. பேதுரு பேசிக்கொண்டிருக்கும் போது வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் (44) என்று நாம் வாசிக்கிறோம். அடுத்த அதிகாரத்தில், கொர்நேலியுவின் வீட்டார்மேல் பரிசுத்த ஆவியானவர் எப்படி இறங்கினார் என்று அப்போஸ்தலர்களிடமும் மற்ற விசுவாசிகளிடமும் விளக்கிக் கூறும் போது, பேதுரு, ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே (11:15) என்று கூறுகிறார். உயிர்த்த கிறிஸ்து, தம்முடைய சபையைக் கட்டியெழுப்பும் போது, யூத உலகத்திற்கும், புறஜாதி உலகத்திற்குமிடையே உள்ள தவறான எண்ணங்களின் எல்லைகளை யெல்லாம் தாண்டும் போது இந்த பெந்தெகொஸ்தே நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

### மூன்று இணைப்புகளுள்ள சங்கிலி

பிலிப்பு மற்றும் பேதுருவைப் பற்றிய இந்தச் சம்பவங்களிலிருந்து ஒரு சீஷனை உருவாக்குவது எப்படி என்று நமக்கு காண்பிக்கும் ஒரு முறையை நாம் காண்கிறோம். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஒரு 'மூன்று இணைப்புகளையுடைய சங்கிலி இருப்பது போல' இந்த உதாரணங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. முதல் இணைப்பு பரிசுத்த ஆவியானவர், இரண்டாவது இணைப்பு தேவனுடைய வார்த்தை மற்றும் மூன்றாவது இணைப்பு தேவனுடைய ஊழியக்காரன் – சீஷனாக்குகிறவன்.

ஒரு சீஷனை உருவாக்குவதற்கு, சீஷனாக்குகிறவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து, ஒரு தனி நபருக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூற அவனைத் தூண்ட வேண்டும். அந்தத் தொலைந்து போன நபரிடமும் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்து, அந்த எத்தியோப்பியனிடமும் ரோம நூற்றுக்கு அதிபதியிடமும் ஏற்படுத்திய அந்த ஆவிக்குரிய பசியை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு சீஷனை உருவாக்குவதற்கு தேவன் பயன்படுத்தப்போவதாக வாக்களிக்கும் ஒரு ஆயுதமாக தேவனுடைய வார்த்தை அல்லது சுவிசேஷம் இருக்க வேண்டும். ஒரு விசுவாச இருதயத்திற்குள் தேவனுடைய வார்த்தையாகிய வித்து சென்றடையும் போது, ஒரு ஆவிக்குரிய உருவாக்குதல் நடைபெறுகிறது (I பேதுரு 1:22, 23).

பின்பு, கர்த்தருடைய ஊழியக்காரன் அல்லது சீஷனாக்குபவனும் அங்கு இருக்க வேண்டும். பிலிப்பு அல்லது பேதுருவைப் போன்ற எப்போதும் தயாராயிருக்கிற, விசுவாசமுள்ள சீஷனாக்குகிறவன் தேவனுக்கும், இழந்து போன மக்களுக்குமிடையே மூன்றாவது முக்கியமான இணைப்பாக இருக்க வேண்டும். இழந்து போனவர்களோடு நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளும்படியாக, உங்களையும் என்னையும் போன்றவர்களைத் தேவன் தம்முடைய பணியாளர்களாகத் தேர்ந்தெடுக்கிறார் என்பதை நினைக்கும் போது ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

சுவிசேஷத்தைப்பற்றிக் கேள்வியேபட்டிராத அல்லது ஏற்றுக் கொள்ளாத தொலைந்து போன மக்களுடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார் என்பதற்கான ஆதாரங்கள் என்ன? லூக்கா கொடுக்கிற இந்த இரண்டு உதாரணங்களில் ஆவிக்குரிய செயல்பாட்டின் ஆதாரங்கள் முற்றிலும் வெளிப்படையாக இருக்கின்றன. இழந்து போன ஜனங்களோடு நாம் இடைபடும் போது அது வெளிப்படையாக இருக்காது, ஆனால் நாம் ஜெபித்து இப்படிப்பட்ட ஆதாரங்களைத் தேடினோமானால் அதைப் பார்க்க முடியும்.

நாம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு உரையாடலுக்கு நேராக நம்மை வழிநடத்தக்கூடிய ஒரு நல்ல கேள்வி உண்டு – அது "ஆவிக்குரிய காரியங்களில் உங்களுக்கு ஈடுபாடு உண்டா?" என்பது தான். அவர்களில் சிலர் "இல்லை" என்று சொல்லலாம். இந்தக் கேள்வியை கேட்பதற்கான விசுவாசமும், தைரியமும் உங்களுக்கு இருந்தால், பலர் இந்த ஆவிக்குரிய காரியங்களில் தங்களுக்கு நாட்டமுண்டு என்று கூறுவதைக் கண்டு கொள்வீர்கள். தொலைந்து போன ஜனங்களுடன், அவர்களுடைய இரதத்தில் ஏறி, அவர்களோடு அமர்ந்து, அவர்களுடைய நித்திய இரட்சிப்பிற்குத் தேவையான தேவனுடைய வார்த்தையை அவர்கள் புரிந்து கொள்வதற்கு உதவி செய்யக்கூடிய ஒரு தேவனுடைய ஊழியக்காரர் அவர்களுக்குத் தேவை.

ஒரு தொலைந்து போன நபருடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார் என்பதற்கான அடையாளங்களை நீங்கள் காணும் போது, அவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் உங்களை வழிநடத்தும்போது, தேவனுக்கும் தொலைந்து போன அந்த நபருக்குமிடையே மூன்றாவது இணைப்பாக இருக்க நீங்கள்

தயாராயிருக்கிறீர்களா? அந்த ரோம நூற்றுக்கு அதிபதியைப் போலவும், எத்தியோப்பியனைப் போலவும் பல மக்களைச் சந்திக்க மாட்டோம் என்று நினைத்துக்கொண்டு, கர்த்தரிடம் நான் அந்த இணைப்பாயிருக்கிறேன் என்று கூறினேன்.

ஆனால் அது தவறு. 1957ல் நான் தேவனிடம் அந்தப் பொறுத்தனை செய்ததிலிருந்து நான் அப்படிப்பட்ட பல மக்களை சந்தித்திருக்கிறேன். பலர் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து புதிய பிறப்பை அனுபவிக்க வந்துள்ளதை நான் பார்த்திருக்கிறேன்.

நான் விசுவாசத்தில் வளர்ச்சியடையாமலிருந்த போது, மிகவும் கூச்ச சுபாவமுள்ளவனாக, தன்னம்பிக்கையில்லாதவனாயிருந்தேன். தனி நபர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள பரிசுத்த ஆவியானவர் வழிநடத்தியபோது மூன்றாவது சங்கிலியாக இருக்க நினைத்தேன். அப்போது முதல் இரு சங்கிலிகளும் அதிக வல்லமையுடையவைகளாயிருப்பதால், ஒருவரது இரட்சிப்பு, ஒரு மனிதனுடைய கெட்டிக்காரத்தனத்திலோ, அவரைத் தொடர்ந்து செல்வதிலோ அல்ல என்று உணர்ந்தேன்.

இந்த சங்கிலியில் மிகவும் பெலவீனமான இணைப்பு நாம் தான். நாம் இல்லாமலேயே தேவனால் இந்த அற்புதத்தைச் செய்ய முடியும், சில நேரங்களில் செய்திருக்கிறார். இருப்பினும் இழந்து போன ஜனங்களை விசுவாசத்திற்கும் இரட்சிப்பிற்கும் கொண்டுவர, மனிதர்களாகிய இந்த பெலவீனமான இணைப்பை தேவன் ஏன் தெரிந்தெடுத்துள்ளார் என்று எனக்கு ஏதோ காரணத்தால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்து திராட்சச் செடியாயிருக்கிறார். “நிலைத்திருக்கக் கூடிய கனிகளை” (யோவான் 15:16) தான் உருவாக்கக் கூடிய கிளைகளை அவர் தேடுகிறார்.

நீங்கள் எப்போதாவது நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டுள்ளீர்களா? கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டுள்ள அந்தப் பெரிய பொறுப்பிற்கு நீங்கள் கீழ்ப்படிதலுள்ளவர்களாக இருக்கிறீர்களா? அப்படி இல்லை என்றால், உங்களைச் சுற்றியுள்ளவர்களுடைய வாழ்வில் அவர் ஏற்கனவே எப்படி கிரியை செய்து கொண்டிருக்கிறார் என்பதை தேவன் உங்களுக்குக் காண்பிக்கும்படியாக அவரிடம் கேட்கும்படியாக உங்களுக்குச் சவாலிடுகிறேன். பின்பு அவர்களோடு அவருடைய கிருபை மற்றும் இரக்கத்தின் செய்தியை பகிர்ந்து கொள்ள பேதுருவிடமும், பிலிப்புவிடமும் இருந்த தைரியத்தை உங்களுக்கும் கொடுக்குமாறு தேவனிடம் கேளுங்கள்.

நீங்கள் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் போது தேவனுக்கு கீழ்ப்படிவதிலும், அவரால் பயன்படுத்தப்படுவதிலுமுள்ள சந்தோஷத்தை அனுபவிப்பீர்கள். நாம் இழந்து போனவர்களிடம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை

அறிவிக்கும்போது, அவர்களுடைய வாழ்வில் ஒரு நித்திய வித்தியாசத்தைக் கொண்டு வருகிறோம். இந்த அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தை வாசிக்கும்போதே நீங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் அபிஷேகிக்கப்பட்டு பேதுரு, பிலிப்பு, பவுல் மற்றும் நாம் இன்னும் படிக்கப் போகிறவர்களைப் போல் தைரியமாக சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே எனது ஜெபம்.

---

## அத்தியாயம் ஐந்து

# பவுலின் தனிப்பட்ட பெந்தெகொஸ்தே

சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்; இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு வரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். அவன் பிரயாணமாய்ப் போய், தமஸ்குவுக்குச் சமீபித்த போது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது; அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப் படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் : நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். (அப்போஸ்தலர் 9:1-16)

சில ஜனங்களுக்கு மிகவும் தெரிந்த இந்த வார்த்தைகள் தர்சுவில் சவுலுடைய மனமாற்றத்தை விவரிக்கும் பகுதியாகும். இது “தமஸ்கு சாலை அனுபவம்” என்று அழைக்கப்படுகிறது.

அனுபவம் என்ற வார்த்தையைத் தவிர்த்து இந்த மனிதனை வேறு எப்படியும் விவரிக்க முடியாது. நாம் முதன் முதலாக இவனை சந்திக்கும் போது, இவன் ‘கிறிஸ்துவை மிகவும் வெறுப்பவனாக’ இருக்கிறான் என்பதைப் பார்த்தோம். ஆனால் தமஸ்குவின் அனுபவம் அவரை கிறிஸ்துவின் சபை வரலாற்றில் பெரிய அப்போஸ்தலனாக மாற்றியது.

இந்த முதல் அனுபவத்தைப் பற்றிப் பவுல் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். அதாவது ரோம அதிபதிகளுக்கு முன்பாக, ஒரு ராஜாவுக்கும் ராணிக்கும் முன்பாக, சமய நீதிஸ்தலம் மற்றும் தன்னுடைய நிருபங்களிலும் அவர், ‘நான் ஒரு அனுபவத்தைப் பெற்றேன்’ என்று கூறுகிறார்.

சபை வரலாற்றில் தன்னை மிகவும் பயனுள்ள ஒரு அப்போஸ்தலனாக மாற்றிய மூன்று அனுபவங்களைப் பற்றிப் பவுல் கூறுகிறார். அவருடைய முதல் அனுபவம், தமஸ்குவின் சாலையில் அவர் மனமாற்றமடைந்தது. “அரேபிய பாலைவன அனுபவம்” பற்றி அவர் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் தெளிவாக விளக்கிக் கூறுகிறார் (I கொரி. 12:1-4).

தன்னுடைய வாழ்க்கையில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்திய பரலோக அனுபவமும் அவருக்கு ஏற்பட்டது. அவர் அந்த அனுபவத்தை கொரிந்தியர்களோடும் நம்மோடும் பகிர்ந்து கொள்கிறார் அவர் லிஸ்திராவில் கல்லெறியப்பட்டபோது இது நடந்திருக்கக்கூடும் (14:19, 20).

நாம் பரலோகத்தில் வாழவேண்டும் என்றால் சாகும்வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை அவருடைய பரலோக அனுபவம் கூறுகிறது. அவர் எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் கருப்பொருள் “உன்னதங்களில்” என்பதாகும், இதன் அர்த்தம் நாம் இங்கு பூமியில் வாழும் போதே உன்னதங்களில் வாழ முடியும் என்கிறார் பவுல் (எபேசியர் 1:3).

இந்த மூன்று அனுபவங்களில்லாமல், நம்மால் இந்த அசாதாரண அப்போஸ்தலரை விவரிக்க முடியாது.

கிறிஸ்துவை வெறுத்து பின்பு மனமாறியவராகிய பவுலின் முதல் அனுபவத்திலிருந்து நாம் சில மிகவும் முக்கியமான காரியங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது, சவுல் தன்னைப் பெயர் சொல்லி அழைக்கும் ஒரு குரலையும், அந்தக் குரல், “நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?” என்று கேட்பதையும் கேட்கிறான். இங்கு உயிர்த்த கிறிஸ்து தன் சபையிடமிருந்து பிரிக்கப்படாதவராகக் குறிக்கப்படுகிறார். சவுல் சபையைத் தான் துன்புறுத்தி வந்தான், ஆனால் உயிர்த்த கிறிஸ்துவின் கேள்வி, “நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?” என்பதாகும். “நீ என்னுடைய சபையைத் துன்பப்படுத்தும் போது என்னையே துன்பப்படுத்துகிறாய்” என்பதே தெளிவான செய்தியாகும்.

சவுல், “ஆண்டவரே, நீர் யார்?” என்று கேட்கிறார். தான் யாரிடம் பேசுகிறோம் என்பதே சவுலுக்குத் தெரியாது, ஆனால் தான் யாரிடம் பேசுகிறோமோ அவர் தன்னுடைய ஆண்டவர் தான் என்று அவர் அறிந்திருந்தார்.

சவுலின் மனமாற்றத்தில், ‘தாழ்மையைப்’ பற்றி நாம் புரிந்து கொள்ள, நமக்கு உதவி செய்யக் கூடிய ஒரு உருவகம் உள்ளது. இந்தக் கதையிலிருந்து தாழ்மை என்பது “அடக்கம்” என்று நாம் கற்றுக்

கொள்கிறோம். ஒரு குதிரை மூர்க்கமானதாகவும், தன்னுடைய வாயிலே கடிவாளமே போட்டிராததாகவும், தன்னுடைய தலையில் கட்டப்படாததாகவும், தன்னுடைய முதுகில் சேணம் பூட்டப்படாததாகவும் இருந்தால், அந்தக் குதிரை அடக்கப்பட வேண்டும். குதிரை அடக்கப்படும்போது, அது கடிவாளத்தை எதிர்த்து இழுக்காமல் கடிவாளத்தின் திசையை பின்பற்றிச் செல்லும். அது அடங்கிவிட்டதால் அந்த மிருகம் பெலவீனமானது என்று கூற முடியாது. அடக்கப்பட்ட மிருகம், தாழ்மையுள்ள மிருகமாகும்.

உயிர்த்த கிறிஸ்து சவுலிடம், “முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்” என்று கூறும்போது, கடிவாளத்தை எதிர்த்து நீ ஏன் இழுக்கிறாய்? என்று தான் அர்த்தங்கொள்கிறார். அது உன் வாயைக் கிழித்துக் கொள்ளும், அது உனக்கு மிகவும் கடினமாயிருக்கும். அந்த தமஸ்குவின் அனுபவத்திற்கு முன்பே, சவுலோடு பரிசுத்த ஆவியானவர் இடைப்பட்டு கொண்டிருந்தார், அவர் துன்புறுத்தப்பட்ட சாட்சிகளாகிய ஸ்தேவான் மற்றும் மற்ற விசுவாசிகளின் மூலம் சவுலோடு பேசிக்கொண்டிருந்தார் என்று இந்த உருவகம் நமக்கு உணர்த்துகிறது. சவுல், “ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?” (6) என்ற கேள்வியைக் கேட்கும் போது, தான் கடிவாளத்தால் கட்டுப்படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்வதாகவும், தாழ்மையாக மாறுவதை ஏற்றுக்கொள்வதாகவும் நமக்குக் காண்பிக்கிறார்.

மற்ற யார் கூறியதைக் காட்டிலும், பவுல் தன்னுடைய நிருபங்களில், கிறிஸ்துவின் மூலமாக நமக்கு இரட்சிப்பைத் தருவதற்கு தேவன் நமக்கு எல்லாவற்றையும் செய்துள்ளதைப்பற்றி அதிகமாகக் கூறியுள்ளார். ஆனால், அவர் இயேசுவை சந்திக்கும் போது, “நீர் எனக்கு என்ன செய்யப் போகிறீர்?” என்று கேட்கவில்லை, மாறாக, ஆண்டவரே, நான் உமக்கு என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?” என்று கேட்கிறார்.

பவுல், மனமாறியதன் விளைவாக, வாழ்க்கையைப் பற்றிய அவருடைய நோக்கு முற்றிலுமாக மாறியது, மற்ற காரியங்களோடே அவர் தன்னுடைய பெயரையும் மாற்றிக் கொண்டார். பவுலுடைய எபிரெய பெயராகிய சவுல் என்பதற்கு “பெரியவன்” மகத்துவமானவன் என்று அர்த்தமாகும். அவர் மனமாற்றமடைந்த போது தன்னுடைய ரோம பெயராகிய பவுல் என்ற பெயரைப் பயன்படுத்தத் தீர்மானித்தான். ரோம சாம்ராஜ்ஜியம் முழுவதிலுமுள்ள யூதரல்லாத விசுவாசிகளிடம் தான் சுவிசேஷத்தைப் பரப்ப வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருந்ததால் அவர் தன்னுடைய பெயரை இப்படி மாற்றியிருக்கக்கூடும். அவர் ஒரு ரோம குடிமகனாக பிறந்திருந்தாலும், எல்லா மனுஷருக்கும் எல்லாமுமாக மாற அவர் விரும்பியதாலும், இந்த ரோம பெயரைப் பயன்படுத்துவதற்கு அவர் அந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கக்கூடும். சவுல் என்றால் மகத்துவமானவன்

அல்லது பெரியவன் என்று அர்த்தம். ஆனால், பவுல் என்றால் “சிறியவன்” அல்லது “யாருமில்லை” என்று அர்த்தம். இதுவும் அவர் தன் பெயரை மாற்றியதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். சவுல் பவுலாக மாறியபோது, “ஆவியில் எளிமையுள்ளவனாக” (மத்தேயு 5:3) இருப்பதென்றால் என்ன என்பதை அவன் அனுபவித்தான்.

பின்பு அவர் பிலிப்பியருக்கு: “எனக்கு மிகவும் அவசியமாகத் தோன்றிய சில காரியங்களுக்குப் பின்னே நான் போய்க் கொண்டிருந்தேன். ஆனால் நான் இயேசுவை சந்தித்தப் பிறகு அக்காரியங்கள் எனக்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போனது,” என்று எழுதுகிறார்.

அனுபவத்தைப் பொறுத்தவரை, முக்கியமான காரியம், நம் அனுபவத்தின் விவரங்கள் அல்ல. மாறாக: என்னுடைய அனுபவத்தின் விளைவுகள் என்ன என்பதே. அனுபவம் என்பது ஒரு முடிவு ஆகாது, முடிவிற்கான ஒரு வழி தான் நம்மை கிறிஸ்துவின் நல்ல ஊழியக்காரர்களாக மாற்றும். நாம் நடந்து செல்லக்கூடிய ஒரு வழிதான் அனுபவம் ஆகும். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில், பவுல் தன்னுடைய தமஸ்குவின் அனுபவத்தைப் பற்றிய விவரங்களை பல முறை கூறுகிறார். பிலிப்பியருக்கு தான் எழுதியதில், தமஸ்குவின் அனுபவத்தைப் பற்றிய விளைவுகளைக் குறித்து வலியுறுத்துகிறார்.

சில விசுவாசிகளை நான் “உபயோகிக்கும் விசுவாசிகள்” என்று அழைக்கிறேன். உபயோகம் என்பது நாம் பயன்படுத்தும் ஒரு காரியத்தைக் குறிக்கும். நாம் தண்ணீரை, மெழுகு வர்த்தியை, மின்சாரத்தை, மிதிவண்டியை அல்லது பேருந்தைப் பயன்படுத்துவதைப் போல விசுவாசிகள் தேவனைப் பயன்படுத்த முடியும். அதை உணராமலேயே, கிறிஸ்து நம்முடைய பிரச்சனைகளை எல்லாம் தீர்த்து வைப்பார் என்று நாம் விசுவாசிப்பதால் நாம் அவருடைய சீஷர்களாக மாறி விடுவோம். நாம் கிறிஸ்துவைப் பின்பற்றும் போது, அவர் நம்முடைய பிரச்சனைகளில் மிகவும் பெரிய பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பார் என்பது உண்மைதான். ஆனால் நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன்: நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றும்போது, அவர் உங்களுக்கு என்ன செய்யப் போகிறார் என்று கேட்பீர்களா அல்லது பவுலைப் போல, உங்கள் ஆண்டவரும் இரட்சகருமானவரிடம், அவருக்காக நீங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்பீர்களா?

பவுல் மனந்திரும்பிய பின்பு, அந்த மனந்திரும்புதலைத் தொடர்ந்து வந்த காரியங்களைக் குறித்து நாம் வாசிக்கிறோம். தேவன் அனனியா என்ற வயதான மனிதனிடம் போய், “நீ போய், தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்னும் பேருள்ள ஒருவனுக்கு ஞானஸ்நானங் கொடுக்க வேண்டும்” என்று கூறுகிறார். தர்சு பட்டணத்தின் ‘சவுல்’ என்ற இந்த பெயரைக் கேட்டவுடன் அந்த முதியவரின் இருதயத்தில் பயம் உண்டானது. அவர்,

“ஆண்டவரே, இந்த மனுஷன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று அவனைக் குறித்து அநேகரால் கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற யாவரையுங் கட்டும்படி அவன் பிரதான ஆசாரியர்களால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான் (அப்போஸ்தலர் 9:13,14). தேவன், “நீ போ, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்” (15) என்று கூறுகிறார்.

சரியாகக் கூறினால், தேவன் ஒரு காகிதச் சுருளைத் திறந்து, தர்சு பட்டணத்தானாகிய சவுலின் வாழ்வில் தன்னுடைய திட்டத்தை அனனியாவிற்கு காண்பிக்கிறார். தேவன் அதை சவுலுக்குச் செய்யவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர் சவுலிடம் “நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்” (6) என்று மட்டுமே கூறுகிறார். தேவன் விரும்பினால், நம்முடைய வாழ்வில் அவர் வைத்துள்ள முழுமையான சித்தத்தையும் காண்பிக்க முடியும் என்பதே நாம் அறிந்து கொள்ள வேண்டியது. ஆனால் அவர் அதை வழக்கமாக செய்வதில்லை. அவர் சவுலுக்குச் செய்தது போலவே தம்முடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். ஒரு நாளில் ஒவ்வொன்றாக, அல்லது சித்தம் போல் நடத்துகிறார்.

தர்சு பட்டணத்தானாகிய சவுல் தனக்காகக் காத்திருக்கும் அந்த வீட்டிற்குள் போகும் போது அனனியா, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் காணப்படும் மிகவும் அழகான இரண்டு வார்த்தைகளைப் பேசுகிறார். சபையின் மிகவும் பெரிய எதிரியாயிருந்தவன் மனந்திரும்பிவிட்டான் என்று அனனியா புரிந்து கொண்டவுடன், “சகோதரனாகிய சவுலே” என்று கூறுகிறார். நாம் இங்கு பார்ப்பது தான் இயேசு கிறிஸ்துவின் சபையிலுள்ள காரியத்தைப் பற்றியதாகும். தேவனுடைய கிருபை வாழ்க்கையை மாற்றியமைக்க வல்லது.

**பவுலுடைய பாலைவன அனுபவம்**

பவுலுடைய மனமாற்றத்தின் அனுபவத்தை நாம் வாசிக்கும் போது எந்தெந்த நிகழ்வுகள் எப்போது நடந்தது என்று காண ஆவலாயுள்ளோம். பவுல் மனமாற்றமடைந்தவுடன், இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தமஸ்குவிலும் எருசலேமிலும் தைரியமாகப் பிரசங்கிக்க ஆரம்பிக்கிறான் என்ற எண்ணம் தான் நமக்கு கிடைக்கிறது. இருப்பினும் பவுலின் மனந்திரும்புதலுக்கும் அவருடைய பிரசங்கிக்கும் ஊழியத்திற்குமிடையே ஒரு பெரிய இடைவெளியைப் புகுத்த வேண்டும். தான் மனந்திரும்பியவுடன் அரேபியாவிற்கு போனதைப் பற்றி பவுல் கலாத்தியருக்கு கூறுவதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் (கலாத்தியர் 1:11-21).

அரேபியாவில் பவுலுடைய பாலைவன அனுவத்தின் கால அளவைப் பற்றி வேத பண்டிதர்கள் ஒத்துக் கொள்வதில்லை, ஆனால் குறைந்தது மூன்று வருடங்களாவது அவர் அங்கே இருந்திருப்பார் என்பதை அவர் கூறுகிறார் என்று பலரும் ஒத்துக்கொள்கின்றனர். பவுல், உயிர்த்த கிறிஸ்து தன்னோடு மூன்று ஆண்டுகள் கூடவே இருந்து தான் நிருபங்களில் எழுதிய புதிய ஏற்பாட்டின் பாதிக்கும் மேலான எல்லா காரியங்களையும் கற்றுக் கொடுத்தார் என்று கூறுகிறார். அதற்குப் பின்பு அவர் தமஸ்குவுக்குத் திரும்பிப் போனதாகவும், இறுதியில் தன்னுடைய சொந்த ஊராகிய தர்சுவுக்குப் போனதாகவும் பார்க்கிறோம்.

பவுல், தான் மனந்திரும்பி பதினான்கு வருடங்களுக்குப் பின், எருசலேமுக்குப் போய், மற்ற எல்லா அப்போஸ்தலர்களையும் முதல் முறையாக சந்தித்ததாகக் கூறுகிறார் (கலாத்தியர் 2:1-10). பவுல் அவர்களிடம், அவர்கள் இயேசுவோடு மூன்று ஆண்டுகள் இருந்தது போலவே தானும் இயேசுவோடு மூன்றாண்டுகள் இருந்ததாகக் கூறி அவர்களை நம்பச் செய்கிறார். இயேசுவோடு இருந்தவர்களுக்கு மட்டுமே தெரியக் கூடிய சில காரியங்களை பவுல் அப்போஸ்தலர்களிடம் கூறியிருப்பார். அதற்குப் பின்பு தான், பவுல் சுவிசேஷத்தைப் புறஜாதி உலகத்திற்கும், மற்ற அப்போஸ்தலர்கள் யூதர்களுக்கும் பிரசங்கிக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர்.

நானாக இருந்திருந்தால் அப்படிச் செய்திருக்க மாட்டேன். மனந்திரும்பிய போதகராகிய, பண்டிதராகிய பவுலை யூதர்களிடத்திற்கும், படிப்பறிவில்லாத மீன்பிடிப்பவர்களாகிய பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானை, காட்டு மிராண்டிகளாகிய புறஜாதிகளிடத்திற்கும் அனுப்பியிருப்பேன். ஆனால் நாம் செய்வது போல் தேவன் காரியங்களை செய்வதில்லை. சாதாரண மக்களை, அசாதாரண காரியங்களைச் செய்ய பயன்படுத்துவதில் அவர் களிப்படைகிறவராக காணப்படுகிறார். அவர் மனந்திரும்பிய போதகரும் வேத பண்டிதனுமாகிய பவுலை புறஜாதிகளான நாகரிகமற்றவர்களிடையேயும், படிப்பறிவில்லாத அப்போஸ்தலர்களான பேதுருவை, பண்டிதர்களிடத்திற்கும் அனுப்புகிறார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் முதல் பாதி பகுதி பேதுருவை ஒரு முக்கியமான அப்போஸ்தலராகவும் மற்ற பாதி பகுதி அப்போஸ்தலராகிய பவுலின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் பற்றி கூறுகிறது. இந்த வரலாற்றுப் புத்தகத்தில் பவுலுடைய மனந்திரும்புதலைப் பற்றி படிக்கும்போதே, கலாத்தியருக்கு அவர் எழுதியுள்ள நிருபத்தின் முதல் இரண்டு அதிகாரங்களில், தன்னுடைய வனாந்திர அனுபவம் பற்றி அவர் கூறுவதையும் படிக்கத் தவறாதீர்கள். அவர் கலாத்தியரில் அந்த அனுபவம் பற்றி கூறும் போது, “நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்கு முன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்” என்று எழுதுகிறார்.

நீங்கள் பவுலைப் பற்றி ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். ஒன்று, பவுல் பொய்யனாயிருக்கவேண்டும் அல்லது அப்போஸ்தலராயிருக்க வேண்டும். மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் தான் அதிகமாகப் பிரயாசப்பட்டதாக அவர் உரிமைபாராட்டுகிறார் (I கொரிந்தியர் 15:9,10) மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் அவர் மிகுந்த பயனுள்ளவராகயிருந்தார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய பாதி புத்தகங்களை ஆக்கியோன் அவர் தான். அவருடைய நிருபங்களின் ஆழ்ந்த பொருளடக்கத்தைப் படித்து முடிக்கும் வரை பவுலைப் பற்றிய உங்கள் தீர்ப்பைத் தள்ளிவையுங்கள்.

1949 ஆம் ஆண்டில், நான், பவுலுடைய எல்லா நிருபங்களையும் பற்றி ஒரு ஆராய்ச்சி செய்வதற்காக தயார் செய்து கொண்டிருந்த போது, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தின் இரண்டாம் பாதியை படித்துவிட்டு வேதத்தைப் படிக்க ஆரம்பித்தேன். பவுலுடைய ஏவுதலளிக்கப்பட்ட நிருபங்களைத் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் படித்துக் கொண்டிருந்த போது, இந்த மேலான சத்தியத்தை, இந்த அசாதாரணமான தேவனுடைய மனிதனுக்கு வெளிப்படுத்தியது உயிர்த்த கிறிஸ்துவாக மட்டுமே இருக்க முடியும் என்பதை முற்றிலும் நம்பினேன்.

**பர்னபாவை சந்தியுங்கள்**

லூக்கா, சபையின் முதல் தலைமுறையின் வரலாற்றை எழுதும் போது, பேதுரு மற்றும் பவுலுடைய ஊழியங்களைப் பற்றி முதலில் குறிப்பிடுகிறார். இருப்பினும், இந்த இரண்டு பெருந்தலைவர்களோடு கூட, உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்துவின் சபையின் ஆரம்ப காலங்களின் மதிப்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் இன்னும் பல மக்களைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று லூக்கா எண்ணுகிறார். அவர்களில் ஒருவர் பர்னபா, இதன் அர்த்தம் "ஆறுதலின் மகன்" (4:36).

இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, அப்போஸ்தலர்கள் இவருடைய பெயரை யோசேப்பிலிருந்து பர்னபாவாக மாற்றினார். இது அவருடைய ஆவிக்குரிய வரத்தின் தன்மையையும் அவருடைய ஊழியத்தையும் விவரிக்கிறது. அவர் எப்போதுமே, இந்தப் புதிய பெயருக்கு ஏற்றவாறு, மற்றவர்களை உண்மையாகத் தாங்குவதிலும், உயிர்த்த ஆண்டவர் எதைச் செய்யும்படி தங்களை அழைத்தாரோ அதைச் செய்யும்படியும் மற்றவர்களை உற்சாகப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தார். பவுலை, அவருடைய அற்புதமான மிஷனரி ஊழியத்தில் ஈடுபடுத்தியதற்கு காரணமாயிருந்தவர் பர்னபா என்ற மனிதன் தான்.

அவர் அந்தியோகியா சபையில், புதிதாக மனந்திரும்பியவர்களை சீஷர்களாக்குவதற்காகப் பணி புரிந்து கொண்டிருந்தார். சபையில் பரிசுத்த ஆவியானவர் மகத்துவமாகக் கிரியை செய்து கொண்டிருந்ததால்,

விசுவாசிகளின் எண்ணிக்கையில் அந்தச் சபை மிகுந்த வளர்ச்சி யடைந்திருந்தது. அங்கு புதிதாக மனந்திரும்பியவர்கள் மிகவும் அதிகமானதால், சவுலின் அசாதாரணமான போதிக்கும் வரங்கள் அந்தச் சபைக்கு தேவையாயிருந்ததை பர்னபா உணர்ந்தார். எனவே, அவர் தர்சுவுக்குப் போய், பவுலைக் கண்டடையும் வரை தேடினார். பின்பு அவரை அந்தியோகியாவிற்கு அழைத்து வந்து, அந்த உபதேச ஊழியத்தில் அவரை நிலைநிறுத்தினார். பவுலை அந்தியோகியாவிற்கு அழைத்து வந்ததைக் குறித்து பயந்திருந்த சில விசுவாசிகளிடம், முன்பு சபையின் எதிரி யாயிருந்திருந்த பவுலைப்பற்றி பர்னபா பரிந்து பேசினார் என்று நாம் வாசிக்கிறோம். (அப்போஸ்தலர் 9:26, 27).

அந்திரேயா என்ற ஒரு மனிதன் இல்லாதிருந்தால், பேதுரு என்ற அப்போஸ்தலர் இருந்திருக்கமாட்டார் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். தன்னுடைய சகோதரனாகிய சீமோனை அழைத்து வந்து, அவரை இயேசுவுக்கு அறிமுகப்படுத்தியது அந்திரேயாதான். மக்களை, ஒருவர் ஒருவராக இயேசுவிடம் அழைத்து வந்த மனிதனாக அந்திரேயா திகழ்கிறார். தன்னுடைய மதிய உணவாகிய ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்து, பசியாயிருந்த கூட்டத்தினரை பசியாற்றிய அந்தச் சிறு பையனை கண்டுபிடித்ததும் இந்த அந்திரேயா தான். அதே போல், இந்த "ஆறுதலின் மகனாகிய" பர்னபா இல்லாதிருந்தால், பவுலால் இந்தப் பெரிய ஊழியத்திலிருந்திருக்க முடியாது என்றே நாம் சொல்லலாம்.

பவுலும் பர்னபாவும், தங்களுடைய பயனுள்ள மிஷனரி பயணத்தை ஒன்று சேர்ந்து துவங்கும்படி, அந்தியோகிய சபையால் அனுப்பப்படுகின்றனர் (அப்போஸ்தலர் 13:1-3). இருப்பினும், அவர்கள் தங்களுடைய இரண்டாவது மிஷனரி பயணத்திற்காக கப்பலேறயிருந்த போது அவர்களுக்குள் ஒரு பெரிய கருத்து வேற்றுமை வருகிறது. கிறிஸ்துவோடும், தங்களுக்குள் ஒருவர் ஒருவரோடும் ஒரு குழுவாக இணைக்கப்பட்டிருந்த இவர்களுடைய ஊழியம், அந்தக் கருத்து வேற்றுமையால் தடைபட்டு விடுகிறது. பர்னபா அந்த இரண்டாவது மிஷனரி பயணத்திற்கு தன் உறவுக்காரனாகிய மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானை அழைத்துச் செல்ல விரும்பினான். இந்த யோவான் இவர்களுடைய முதல் மிஷனரிப் பணியில் இவர்களோடிருந்தவர், ஆனால் சீடர்களைத் துன்புறுத்த ஆரம்பித்தவுடன் இவர்களை விட்டு விட்டுப் போய் விட்டார். எனவே இந்த மாற்கு என்னும் யோவானை அழைத்துச் செல்வதில் பவுலுக்கு உடன்பாடில்லை.

இந்தக் குறிப்பிட்ட காரியத்தில் பவுலுக்கும் பர்னபாவுக்கு மிடையேயிருந்த கருத்து வேற்றுமை மிகவும் ஆழமாயிருந்ததால், அவர்கள் பிரிந்து விடுகின்றனர். பவுல், சீலாவை அழைத்துக்கொண்டு ஒரு திசையில் போகிறார். பர்னபா, மாற்கு என்னும் யோவானை அழைத்துக் கொண்டு

வேறு திசையில் செல்கிறார். சபை வரலாற்றை நாம் பார்க்கும்போது, மிஷனரிகளுக்கு பெரிய பிரச்சனையாக இருப்பவர்கள் மற்ற மிஷனரிகள் தான் என்ற உணர்வு வருகிறது. நாம் ஒருவரையொருவர் இழந்து விட்டால் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது என்பதை சத்துரு அறிந்திருக்கிறான். எனவே தான் நம்முடைய சகோதரரோடு உள்ள உறவுகளைப் பற்றி இயேசு அவ்வளவு அதிகமாக வலியுறுத்தியுள்ளார். (மத்தேயு 5:23,24; 18:15-17).

இருப்பினும், ரோம பட்டணத்திலுள்ள சிறையில், ஒரு பயங்கரமான இருட்டறையில் சிறைபட்டிருந்த போது அப்போஸ்தலராகிய பவுல் எழுதிய கடைசி சில வார்த்தைகளைப் படிப்பது முக்கியமாகும். அவை தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்டன: மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானை உன்னோடு அழைத்து வா, அவன் ஒரு பிரயோஜனமுள்ள ஊழியக்காரன். இந்த வாலிபன் பிரயோஜனமுள்ள ஊழியக்காரனாக மாறிய சம்பவம் என்ன? பவுல் அவனைக் கைவிட்ட பின்பு, பர்னபா தொடர்ந்து மாற்கு என்னும் யோவானுக்குப் பயிற்சி கொடுத்திருப்பார் என்று வேத பண்டிதர்கள் நம்புகின்றனர். பர்னபா 'ஆறுதலின் மகனாக' இருந்து, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானை உற்சாகப்படுத்தியதால் அவரால் இரண்டாம் சுவிசேஷத்தை எழுத முடிந்தது.

மக்களை, உற்சாகப்படுத்துவதற்கும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதற்கும் சபையில் எப்போதுமே பல மக்கள் இருந்து வந்திருக்கின்றனர், இப்போதும் இருக்கின்றனர், இனிமேலும் இருப்பார்கள். இப்படிப்பட்ட ஒருவராக இருப்பதற்கு உங்களுக்கு விருப்பமுண்டா? நீங்கள் ஒரு இளம் விசுவாசியாயிருந்தால், உங்களுக்கு ஒரு பர்னபா தேவை. நீங்கள் ஒரு முதிர்ந்த விசுவாசியாயிருந்தால், ஒரு மாற்கு யோவானை உற்சாகப் படுத்துபவராகவும், ஆலோசனையளிப்பவராகவும் இருக்க வேண்டும்.

உங்களுக்கு வாய்ப்பு இருப்பதாலும், உங்களை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துவதாலும், எப்போதுமே பர்னபாவின் முன்மாதிரியைப் பின்பற்றுங்கள், உங்களைச் சுற்றியுள்ளவர்களை குறிப்பாக, புதிய விசுவாசிகளை, அவர்களுடைய கர்த்தரும் இரட்சகருமானவர், அவர்கள் எப்படியிருக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ, அப்படியெல்லாம் இருப்பதற்கு அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

## அத்தியாயம் ஆறு

# பெந்தெகொஸ்தேயின் முன்மாதிரிகள் சபையை ஸ்தாபிக்கிறது

சுவிசேஷத்தை பரப்புவதில் கஷ்டமான வேளைகள் உண்டு என்று லூக்கா கூறுகிறார். அப்படிப்பட்ட ஒரு துன்பமான சூழ்நிலையை நாம் பதினாறாம் அதிகாரத்தில் படிக்கிறோம். பவுல் தன்னுடைய இரண்டாவது மிஷனரி பயணத்தின் போது, ஆசியாவிற்குள் நுழைந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறார். இருப்பினும் ஆசியாவிற்குள் அவரும், அவரைச் சார்ந்தவர்களும் செல்வதற்கு பரிசுத்த ஆவியானவர் தடை செய்தார் என்று நாம் வாசிக்கிறோம். இராத்திரியில் பவுல் தன்னுடைய தரிசனத்தில், "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று" ஒரு மனிதன் தன்னிடம் கெஞ்சுவதைப் பார்க்கிறான்.

பவுல் இந்தத் தரிசனத்தைக் கண்டவுடன், இந்த மிஷனரிக் குழுவோடு லூக்காவும் இணைந்து கொண்டதை நாம் வாசிக்கிறோம்: "அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணி" (அப். 16:7-10). பவுலும் அவருடைய கூட்டாளிகளும் சீக்கிரமே ஆசியாவிற்குள் பிரயாணம் செய்யவிருந்தாலும், அவர்கள் ஆசியாவிற்கு செல்லும் முன்பு மக்கெதோனியாவிற்குச் செல்ல வேண்டும் என்பது ஆவியானவருக்கு மிகவும் முக்கியமானதாயிருந்தது.

இந்த சமயத்தில் தான் பவுல், கலாத்தியரிடம் தன்னுடைய முதல் ஊழியத்தைத் தொடங்கினார். பவுல், இந்த நாட்களில் அனுபவித்துக் கொண்டிருந்த உடல் நலக் குறைவு பற்றி கலாத்தியருக்கு எழுதியுள்ளதைப் படிக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் பவுலுடைய உடல் நலக் குறைவைப் பயன்படுத்தி, அவரை ஆசியாவிற்கு செல்ல விடாமல் தடுத்திருக்கிறார் என்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம் (கலாத்தியர் 4:13-15). பவுலுக்கு

பிரியமான மருத்துவராகிய லூக்காவும் இந்த நேரத்தில் அவரோடு இணைந்து கொண்டதால் இந்த யூகம் மிகச் சரியானதாக உள்ளது.

அவர்கள் மக்கெதோனியாவிற்குள் நுழைந்து முதல் முதலாக சந்திக்கும் பட்டணம் பிலிப்பு பட்டணமாகும். "நீர் வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்," என்று பவுலுடைய தரிசனத்தில் கேட்டது ஒரு மனிதனாகையால், சுவிசேஷத்தைக் கேட்பதற்காக நூற்றுக்கணக்கான புருஷர் காத்துக் கொண்டிருந்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக்கக் கூடும். அதற்கு மாறாக, ஒரு ஆற்றினருகே தங்களுடைய ஜெபக் கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்த ஒரு சிறிய பெண்கள் குழுவைத் தான் அவர் பார்க்கிறார். பவுல், கர்த்தர் தனக்குக் கொடுத்திருந்ததை வைத்து, இந்த யூதஸ்திரீகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆரம்பிக்கிறார்.

இவர்களில் ஒருத்தி "இரத்தாம்பரம் விற்கிறவளாகிய" லீதியாள் ஆவாள் (14). அப்படியென்றால், ராஜ குடும்பங்களுக்கு வஸ்திரங்களைச் செய்து கொடுக்கும் ஒரு தையல்காரியாக அவள் இருந்தாள். பவுல், தேவனுடைய வார்த்தையைக் கூறிய போது, "கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்" (14) என்று நாம் வாசிக்கிறோம். பின்பு அவள் பவுலுக்கும், அவருடைய மிஷனரி குழுவிற்கும் தன்னுடைய வீட்டைத் திறந்து கொடுத்தாள். அதனால் லீதியாளின் வீடு தான், ஐரோப்பாவின் முதல் சபையாக மாறியது. ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான பிரம்மாண்டமான சபைகள் இருந்திருக்கின்றன, இப்போதும் இருக்கின்றன, ஆனால், பரலோகத்தில், இந்த எளிய யூத தையல்காரி, தன்னுடைய வீடு தான் ஐரோப்பாவின் முதல் சபையாயிருந்தது என்று உரிமை பாராட்டிக் கொள்ள முடியும்.

இந்த பிலிப்பு பட்டணத்தில் தான், பவுலும் சீலாவும் கைது செய்யப்பட்டு, கொடுமையாக அடிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர் (22-24). இந்தத் தண்டனைக்கு மத்தியிலும், நடுராத்திரியில் பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள் என்றும், காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும் நாம் வாசிக்கிறோம். திடீரென்று, நடுராத்திரியில் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறந்து கொண்டது, எல்லோருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. இது ஒரு விநோதமான பூமியதிர்ச்சி ஆகும்!

சிறைச்சாலைக்காரன், நடுராத்திரியில் விழித்து, சிறைச் சாலைக் கதவுகள் திறந்திருப்பதைக் கண்டு, தன்னுடைய பட்டயத்தை உருவி, தன்னை கொலை செய்து கொள்ளப் போன போது, பவுல் அவனிடம், "நீ உனக்கு கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே", நாங்கள் எல்லாரும் இங்கே தான் இருக்கிறோம் என்றான். சிறைச்சாலைக்காரன், "ஆண்டவரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்" என்ற அந்த மிகப்

பெரிய கேள்வியைக் கேட்கிறான். பவுல், “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்” என்ற அந்த மிகச் சிறந்த பதிலைக் கொடுக்கிறார்.

நாம் அடுத்ததாகப் படிக்கும் வார்த்தைகள்: “அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு போய், அவர்களுக்குப் போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்” (28-34). பவுல், மக்கெதோனியாவுக்குத் தன்னை வழிநடத்திய, அந்த தரிசனத்தில் தான் கண்ட மனிதனை இப்போது சந்தித்துள்ளான் என்று நான் நம்புகிறேன்.

“கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்,” என்ற இந்த வார்த்தைகளிலுள்ளது போல, இவ்வளவு தெளிவாக வேறு எங்குமே இரட்சிக்கப்படுவதற்கான வழி குறிப்பிடப்படவில்லை. நான் இந்த வார்த்தைகள் முதன் முதலாக பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்டபோது, 1949ல் இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் சீஷனாக மாறினேன்.

சிறைச்சாலைக்காரன் மனந்திரும்பிய பிறகு, பவுலை விடுவிக்கும்படியாகவும், அவனைப் பட்டணத்தை விட்டு போகும்படியாகவும் அதிகாரிகள் செய்தியனுப்புகின்றனர் (35, 36). ஆனால், அந்த விதத்தில், அந்த நேரத்தில் போவதற்கு பவுல் மறுப்புத் தெரிவிக்கிறார். அவர் ஒரு ரோம குடிமகனாக இருக்கையில், நியாயம் விசாரியாமல், அடிக்கப்பட்டபடியால், அதிகாரிகளே நேரில் வந்து தங்களை வெளியே அழைத்து அனுப்பி விட வேண்டும் என்று பவுல் கேட்டுக் கொண்டார். பவுல் தான் விரும்பிய விதத்தில், தான் விரும்பிய நேரத்தில் பிலிப்பு பட்டணத்தை விட்டு வெளியேறினார்.

பவுல், கிறிஸ்து பிலிப்பு பட்டணம் மிகவும் மாற்றப்பட்டதை பார்த்ததுமட்டுமல்லாமல், பிலிப்பு பட்டணத்தில், தனக்குப் பிரியமுள்ள சபை ஸ்தாபிக்கப்பட்டதையும் பார்த்தார். பவுல், கொரிந்து, எபேசு மற்றும் தெசலோனிக்கேயா பட்டணங்களிலிருந்த சபைகளையெல்லாம் சென்றடைவதற்கு, அடிப்படை ஆதாரமாயிருந்தது இந்த பிலிப்பு சபையாகும். அவர் பிலிப்பியருடைய உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாயிருந்த அந்த மாதிரிகளை, மற்ற சபைகளுக்கெல்லாம் முன்மாதிரியாகப் பயன்படுத்தினார் (I கொரிந்தியர் 8,9). தங்களுடைய நோக்கங்களில் முதிர்ச்சியில்லாமல்

இருந்த விசவாசிகளிடமும், தன்னை ஒரு அப்போஸ்தலன் என்று தான் அழைத்து கொண்டதைக் கேள்வி கேட்டவர்களிடமும், தன்னுடைய ஊழியத்தில், உடன் வேலையாட்களாகயிருப்பதற்கு தகுதியில்லாதவர் களிடமும் உதவியைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும், தானே, கூடாரம் பண்ணும் தொழிலை செய்து வருவதையே விரும்பி, அதைச் செய்தும்வந்தார்.

பிலிப்பு பட்டணத்தில் பவுலுடைய கதையை நீங்கள் வாசிக்கும் போது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்ற இந்த மிகச் சிறந்த வார்த்தைகளை மறந்து விடாதீர்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நாம் விசுவாசிப்பதற்கு, இந்த வார்த்தைகள் நமக்கு சவாலாக அமைகின்றன என்பதைக் கவனியுங்கள். இயேசு என்றால், அவர் நம்முடைய இரட்சகர் என்று நாம் விசுவாசிக்கிறோம் என்று அர்த்தம். கிறிஸ்து என்றால், நம்முடைய இரட்சகர் மேசியா என்று நாம் விசுவாசிக்கிறோம் என்று அர்த்தம். கர்த்தர் என்றால், நம்முடைய மேசியாவாகிய இரட்சகரை நாம் நம்முடைய ஆண்டவராகவும், எஜமானராகவும் கொண்டுள்ளோம் என்று அர்த்தம்.

இயேசு உங்களுடைய இரட்சகர் என்றும் மேசியா என்றும் நீங்கள் தனிப்பட்ட விதத்தில் விசுவாசிக்கிறீர்களா? அவரை உங்களுடைய ஆண்டவராக ஏற்றுக் கொண்டுள்ளீர்களா? அதை இதுவரை செய்திராவிட்டால், ‘‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது, நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்’’, என்பதை செயல்படுத்துங்கள்.

## அத்தியாயம் ஏழு

## பவுல் பிரசங்கித்தல்

பவுல் அத்தேனே பட்டணத்திற்கு வந்த போது, அங்கு எங்கு பார்த்தாலும் மக்கள் விக்கிரகங்களை ஆராதித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து, ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்தார் (அப்போஸ்தலர் 17:16). பவுல் சென்று பார்த்த அந்த அத்தேனே பட்டணத்தில் ஒரு மனிதனைப் பார்ப்பதைக் காட்டிலும் விக்கிரகத்தைப் பார்ப்பது தான் எளிதாகயிருந்தது என்று ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார். இந்த விக்கிரகங்கள் தேவர்கள் அல்ல என்றும் இந்த விக்கிரகங்கள் மூலமாக மக்கள் உண்மையான தேவனை அறிந்து கொள்ள மாட்டார்கள் என்றும் பவுல் அறிந்திருந்தபடியால், இந்த விக்கிரக ஆராதனை அவரை ஆழமாக வருத்தத்திற்குள்ளாக்கியது.

பவுலிடம் ஒரு அபாரமான எண்ணம் இருந்தது. அது அவர் சுவிசேஷத்தை அறிவித்த பட்டணங்களிலெல்லாம் தன்னுடைய சுவிசேஷ உபாயத்தின் மாதிரியை நிலைநாட்டியது. அவர் எப்போதுமே, முதலாவதாக தேவாலயத்திற்குச் சென்று, “இயேசுவே கிறிஸ்து ” என்று யூதர்களுக்கு அறிவிக்கிறார். அவர் ஒரு போதகராயிருந்தார், அதை நிரூபிப்பதற்கான அறிமுகக் கடிதமும் அவரிடமிருந்தது. எனவே அவர் நேராக தேவாலயத்திற்குச் சென்று, அனுமதி பெற்றுக் கொண்டு பின் யூதர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், உபதேசிக்கவும் செய்வார். “முதலாவது யூதருக்கு, பின்பு கிரேக்கருக்கும் கூட” (ரோமர் 1:16) – இது தான் எப்போதும் பவுலுடைய உபாயமாயிருந்தது. யூதரல்லாத மக்களுக்கு ஊழியம் செய்வதற்காக பவுல் அழைக்கப்பட்டிருந்த போதும், யூத ஜனங்களைக் குறித்து அவருக்கு மிகுந்த பாரமிருந்தது, எனவே அவர் எப்போதுமே யூத மக்களுக்குத் தான் முதலாவதாக பிரசங்கித்தார். ரோமருக்கு அவர் எழுதிய நிருபத்தில் (ரோமர் 9:1-5) யூதர்களைக் குறித்து தனக்குள்ள பாரத்தை விவரிப்பதை, நாம் படிக்கும்போது, அவர் எப்போதுமே, முதலாவதாக யூதர்களிடத்திற்கு ஏன் சென்றார் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

அவருடைய உபாயத்தின் இரண்டாவது பகுதி என்னவென்றால், மக்கள் அதிகமான எண்ணிக்கையில் கூடி வரக்கூடிய சந்தை வெளிகளுக்கோ, கடைத்தெருவிற்கோ சென்று சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதாகும். “அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமே

யொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை'' (அப்போஸ்தலர் **17–21**), என்று நாம் வாசிக்கிறோம். கிரேக்கர்கள் தத்துவ ஞானி களாயிருந்தனர். அவர்கள் ஆழ்ந்த அறிவு சார்ந்த காரியங்களைப் பற்றி விவாதிக்கவும் வாதாடவும் விருப்பமுள்ளவர்களாயிருந்தனர். குறிப்பாக, புதிதாக ஏதாவது ஒரு காரியத்தைக் குறித்து கேட்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். எனவே, பவுல் தினமும் சந்தைவெளிக்குச் சென்று, யார் தான் பேசுவதை கவனிக்கத் தயாராயிருந்தாலும் அவர்களிடம் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டார்.

செல்வாக்கு நிறைந்த சமூகத் தலைவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது பவுலுடைய உபாயத்தின் மூன்றாவது பரிமாணமாகயிருந்தது. பவுல், தன்னுடைய தலைமுறையினரில் மிகப்பெரிய அறிவுள்ளவர்களில் ஒருவராயிருந்ததால், இப்படிப்பட்ட தலைவர்களைச் சென்றடைவதில் மிகுந்த சாமார்த்தியமுள்ளவராயிருந்தார். அவர் அத்தேனே பட்டணத்தில், தன்னுடைய உபாயத்தை செயல்படுத்திக்கெண்டிருந்தபோது, கடைசியாக, மார்ஸ் மலையின் உச்சியிலிருந்த ஏரோபேகஸ் என்றழைக்கப்பட்ட ஒரு அழகான அந்தஸ்துள்ள இடத்திற்கு அழைக்கப்பட்டார். இந்த ஏரோபேகஸ் இடத்திற்கு, விவாதம் செய்யும்படி மிகவும் பிரபலமான மக்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள். அது வழக்குமன்ற அறையாகவும் பயன்படுத்தப் பட்டு வந்தது. அது அத்தேனே பட்டணத்தை நோக்கியிருந்தது. பவுல், இந்த மார்ஸ் மேடை மேல் பேசுவதற்காக அழைக்கப்பட்டபோது, அவர் மிகவும் சொல்வன்மை மிக்க ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்கிறார். அவர் "அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்'' (22,23) என்று ஆரம்பிக்கிறார்.

இது உண்மையிலேயே மிகவும் சாமார்த்தியமுள்ள பேச்சுத் தான். அத்தேனே பட்டணத்து மக்கள் தேவ பக்தியுள்ளவர்களாயிருந்ததற்காக, பவுல் அவர்களைப் புகழ்கிறார். அதன் பின்பு அவர், "அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்'' என்று கூறுகிறார்.

பின்பு பவுல், நாம் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனுடைய சந்ததியாராயிருக்கிறோம், தேவன் பொன், வெள்ளிகள் மற்றும் மரம் போன்றவற்றால் செய்யப்படுகிறவர் அல்ல என்றும் பிரசங்கிக்கிறார். அவர்களுடைய கிரேக்க கவிஞர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். ஏனெனில் அந்தக் கவிஞர்களும், நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதைக் கூறியுள்ளார்கள். அவர், அவர்களுடைய தத்துவ ஞானிகள் கூறியதையும்

குறிப்பிடுகிறார். தன்னுடைய பிரசங்கத்தின் இறுதியில், அவர் இயேசுகிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி அறிவிக்கிறார். பவுல் உயிர்த்தெழுதலைப் பிரசங்கிக்கும் போது: "மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்கள் கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள், சிலர்: "நீ சொல்லுகிறதை இன்னொரு வேளை கேட்போம்" என்றார்கள். இப்படியிருக்க, பவுல் அவர்களை விட்டுப் போய்விட்டான். சிலர் அவனைப் பற்றிக்கொண்டு, விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ் மேடையின் நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு என்பவனும், தாமரி என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயும், இவர்களுடனே வேறு சிலரும் இருந்தார்கள்" (32-34) என்று நாம் வாசிக்கிறோம்.

பவுல் மார்ஸ் மேடையில் செய்த பிரசங்கத்தைப் பற்றிய கருத்துகளில் வேத வல்லுநர்கள் ஒத்துப் போகவில்லை. சில வல்லுநர்கள், பவுல் கிரேக்கர்களுடைய தத்துவ ஞானிகள் மற்றும் கவிஞர்களைப் பற்றிக் குறிப்பிட்டபோது, கிரேக்கரின் அறிவுப்பூர்வமான கலாச்சார அழுத்தத்திற்கு இணங்கிப் போனார், எனவே சுவிசேஷத்தின் அழுத்தம் மிகவும் குறையாகவே இருந்தது என்று நம்புகின்றனர். அத்தேனே மக்களுக்கு பவுல் எழுதிய நிருபம் ஏதுமில்லை, மட்டுமின்றி கொரிந்து, எபேசு போன்ற மற்ற பட்டணங்களில் உள்ளது போல், ஒரு சபை அத்தேனே பட்டணத்தில் ஸ்தாபிக்கப்பட்டதற்கான எந்தக் குறிப்பையும் பவுல் குறிப்பிடவுமில்லை என்றனர். மற்ற வேத வல்லுநர்கள் இந்தக் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால், பவுல், தான் அத்தேனே பட்டணத்தில் பெற்ற அனுபவத்தின் விளைவாக, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலுள்ள தத்துவத்தில் வளர்ந்தார் என்பதை நான் தனிப்பட்ட விதத்தில் நம்புகிறேன்.

### சுவிசேஷம் கொரிந்துவிற்குச் செல்கிறது

அத்தேனேயிலிருந்து பவுல் நேராகக் கொரிந்துவிற்குச் செல்கிறார். கொரிந்து பட்டணம் நல்ல நடத்தையில் ஒரு வீழ்ச்சியுள்ள தாழ்வுள்ள பட்டணமாகும். முதல் நூற்றாண்டு உலகத்தில், யாரையாவது "கொரிந்தியர்" என்று அழைப்பதென்பது, அவர்களை நடத்தையில் கெட்டவர் என்று குற்றம் சாட்டுவதாகும். பவுல், கொரிந்து போன்ற பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று நினைத்தபோது, அவர் திகிலடைந்தார் (I கொரிந்தியர் 2:3). ஆனால், தேவன் ஒரு தரிசனத்தில் பவுலிடம், "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" (அப்போஸ்தலர் 18:9,10) என்று மீண்டும் நிச்சயப்படுத்தினார்.

பவுல் கொரிந்து பட்டணத்தில் தன்னுடைய ஊழியத்திற்காக தன்னைத் தயார் செய்து கொள்வதற்கு தனிப்பட்ட ஒரு பெந்தெகொஸ்தேயை பெற்றார். அவரை, கலாத்தியருக்கும், எபேசியருக்கும், பிலிப்பியருக்கும், கொரிந்தியருக்கும் ஊழியங்களைச் செய்யும்படி

தயார்படுத்திய ஒரு அனுவத்தை அவர் பெற்றார் என்றும் நாம் கூறலாம். இந்த முக்கியமான பட்டணங்களில் அவர் சுவிசேஷத்தை அறிவிக்கச் செல்லும் போது, உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்து அவரோடு இருக்கிறார் என்ற உண்மையின் நிச்சயத்தைப் பவுலுக்குத் தருவதாக இந்த அனுபவங்கள் அமைந்திருந்தன. பெந்தெகொஸ்தே நாளன்று நடந்த அடையாளங்களும் அற்புதங்களும், தொடர்ந்து நடைபெற்றன. சபை வரலாற்றின் முதல் தலைமுறையில், பெந்தெகொஸ்தேயின் முன்மாதிரிகள் சபையை ஸ்தாபித்தன.

பவுல் அத்தேனேயில் பிரசங்கித்த அந்த பிரசங்கத்தைப் பற்றி நான் உங்களோடு பகிர்ந்து கொண்ட அந்தக் கருத்து பவுல் கொரிந்துவிலுள்ள விசுவாசிகளோடு தாமே பகிர்ந்து கொண்ட கருத்தோடு சம்பந்த முள்ளதாகயிருக்க வேண்டும். அவர், அவர்களுக்கு எழுதும்போது, தான் கொரிந்துவிற்கு வந்த போது, “மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள” வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும், ஆவியினாலும் பெலத்தினாலும் ஆன காரியங்களை மட்டும் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று தான் உறுதியாகயிருந்ததாக எழுதுகிறார். (I கொரிந்தியர் 2:1-5). பவுல் மார்ஸ் மேடையில் பேசிய போது, மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள வார்த்தைகளைப் பயன்படுத்தினார். அவர்களுடைய புலவர்களையும், தத்துவ சாஸ்திரிகளையும் பற்றி குறிப்பிட்டு ஒரு சாமார்த்தியமுள்ள பிரசங்கத்தை அங்கு பிரசங்கித்தார்.

பிரசங்கித்தல் என்ற கிரேக்க வார்த்தைக்கு, ஒரு அறிவிப்பைக் கொடுப்பது என்பது தான் அர்த்தம். ஒரு ராஜாவுடைய கட்டளையை, அவனுடைய ராஜ்யத்திலுள்ள கிராமங்களிலும், பட்டணங்களிலுமிருக்கும் மக்களுக்கு அறிவிப்பது போன்றதாகும். இந்த வரலாற்றுப் புத்தகத்தின் அடுத்த ஆறு அதிகாரத்தில் பவுலின் பிரசங்கித்தலைப் படிக்கும் போது, பவுல் அத்தேனேவிற்கும் கொரிந்துவிற்குமிடையே கற்றுக் கொண்டது, அவரை சுவிசேஷத்தை பிரசங்கிப்பதற்கும் அதற்கான திட்டத்தை உருவாக்கவும் உதவியது என்பதைக் கவனியுங்கள். அவருடைய அத்தேனே பட்டணத்தின் ஊழியத்திற்கும், கொரிந்து பட்டணத்தின் ஊழியத்திற்குமிடையே பவுல் ஒரு நெருக்கடியான அனுபவத்தைப் பெற்றார். சுவிசேஷத்தை பிரசங்கிப்பதில் அவருடைய திட்டத்தை அது மிகவும் பாதித்தது என்று நான் நம்புகிறேன். பிரசிங்கித்தல் என்பது ஒரு ஆவிக்குரிய ஊழியம் என்றும், அதற்கு தான் செய்ய வேண்டியதெல்லாம், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷ உண்மைகளை அறிவிக்க வேண்டியது தான் என்று பவுல் உறுதியாக அறிந்திருந்தார். பவுல் கொரிந்து பட்டணத்திற்குச் சென்ற போது தான் பிரசங்கித்த சுவிசேஷத்தைப் பற்றிய மற்றொரு கூற்றோடு, அவர் தான் கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தை முடிக்கிறார். (15:1-4) அவர் ரோமருக்கு: “கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்

விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது” (ரோமர் 1:16) என்று எழுதினார்.

அத்தேனே மற்றும் கொரிந்துவிற்குப் பின், பவுல், சுவிசேஷ செய்தியை மட்டுமே அறிவித்து, அந்த சுவிசேஷத்தை எப்படி தான் விசுவாசிக்க ஆரம்பித்தார், என்ற தன்னுடைய தனிப்பட்ட சொந்த அனுபவத்தைப் பற்றி அடிக்கடி கூறுகிறார்.

**எபேசுவில் பவுல்**

ஆசியாவிற்கு சுவிசேஷத்தோடு செல்ல வேண்டும் என்ற பவுலுடைய விருப்பத்தின் நிறைவேறுதல் தான், எபேசு பட்டணத்தில் அவர் செய்த மகா பெரிய ஊழியமாகும். எபேசுவில் பவுல், மிகவும் பலனுள்ள சபை ஸ்தாபிக்கும் ஒரு ஊழியத்தில் நுழைகிறார். எபேசுவில் ஸ்தாபிக்கப்பட்ட சபை தான் தாய்சபையாக மாறியது என்றும் அதிலிருந்து, வெளிப்படுத்தல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் ஆறு சபைகள் பிறந்தன என்றும் வேத வல்லுநர்கள் நம்புகின்றனர். பெர்கமு, தியத்திரா, சிமிர்னா, பிலதெல்பியா, லவோதிக்கேயா மற்றும் சர்தையிலுள்ள சபைகள் எபேசுவிலிருந்த சபையைத் தொடர்ந்து வந்த சபைகளாயிருக்கும். பவுல் கொலோசெயருக்கு எழுதிய நிருபம் எபேசு சபையின் மகள் சபையாகயிருந்த ஒரு சபைக்கும் எழுதப்பட்டிருக்கும்.

எபேசுவில் ஸ்தாபிக்கப்பட்ட சபை மிகவும் பலனுள்ளதாக இருந்ததற்கான காரணங்களுள் ஒன்று, பவுலுக்கு அங்கு ஒரு பாடசாலை இருந்தது தான். அவர், திறன்னு என்னும் ஒருவனுடைய வித்தியா சாலையில், “இரண்டு வருஷகாலம்” போதித்து வந்தார் (அப்போஸ்தலர் 19:9,10) என்று நாம் வாசிக்கிறோம். பாடசாலை பயன்படுத்தப்படாத நாட்களில் தினமும் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை பவுல் இந்த இடத்தை கேட்டுப் பெற்றுக் கொண்டு அங்கு போதித்து வந்தார் என்று ஒரு பழைய கையெழுத்துப் பிரதி நமக்குக் கூறுகிறது. அந்தப் பட்டணத்தில் அதிக வெப்பத்தினால் வேலை செய்யவோ அல்லது வகுப்புகள் நடத்தவோ முடியாத போது ஒரு பணி நாளில் (working day) பல மணி நேரங்கள் பாடசாலைகளில் எதுவும் நடைபெறாது, அந்த நேரத்தைப் பவுல் பயன்படுத்தினார்.

பவுல் இந்த மற்ற சபைகளின் போதகர்களுக்கு அந்தப் பள்ளியில் தான் பயிற்சி கொடுத்திருப்பார். பவுல் தான் சபைகளை ஸ்தாபித்த மற்ற பட்டணங்களைக் காட்டிலும், எபேசுவில் மட்டும் அதிகமான காலம், மூன்றாண்டுகளுக்கும் மேலாக தங்கியிருந்தது ஏன் என்பதை இந்தப் “பாடசாலை”யே நமக்கு விவரிக்கும். இந்த போதகராலும், மேய்ப்பராலும் எபேசு சபை மிகவும் தெளிவாகவும், சம்பூரணமாகவும் போதிக்கப்பட்டது. அவர்களுக்கு எழுதிய அருமையான நிருபத்தின் முதல் பாதி பகுதியில், தான் அவர்களுக்குக் கற்பித்ததை “நினைவுகூருமாறு” அவர் அடிக்கடி புத்தி சொல்கிறார்.

இந்த சரித்திரப் புத்தகத்தில், பவுலையும் அவருடைய ஊழியத்தையும் குறித்த நம்மை மனதளவில் பாதிக்கக்கூடிய காரியத்தை நாம் இருபதாவது அதிகாரத்தில் பார்க்க முடியும். அவர் எருசலேமிற்கு செல்லும் வழியிலிருந்த போது, அவர் கைது செய்யப்பட்டு, கட்டப்பட்டு, அடிக்கப்படுவார் என்று பரிசுத்த ஆவியானவர் அவரை அறியச் செய்கிறார் (அப்போஸ்தலர் 20:22-24). எபேசுவுக்கு அருகிலிருந்த மிலேத்து என்ற இடத்திற்கு சென்ற போது, தன்னுடைய ஊழியத்தில் பெரும்பாலானதை தான் மூலதனமாகக் கொடுத்திருந்த இந்த விசுவாசிகளிடம் தான் மீண்டும் வரவே முடியாது என்பதை அறிந்து கொள்கிறார். எனவே அவர் சபை மூப்பர்களுக்கெல்லாம் சொல்லியனுப்பி, அங்கு மிலேத்து கடற்கரையில் அவர் வழியனுப்புதல் செய்தியைக் கொடுக்கிறார். இந்த மூப்பர்களுக்கு பவுலுடைய கடைசி வார்த்தைகள்: "இப்பொழுதும் சகோதரரே, நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன். ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது. இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன்." (அப்போஸ்தலர் 20:32-35).

பவுல் எபேசுவிலிருந்த போது, தன்னைத் தானே தாங்கி வந்ததால், அவர்களிடமிருந்து பரிசுகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு பிரசங்கிக்கவும், உபதேசிக்கவும் செய்தார் என்று யாரும் அவரை குற்றஞ்சாட்ட முடியாது. பவுல் தன்னை மாத்திரமல்லாமல், தன்னுடைய மிஷனரி குழு முழுவதையும் தாங்கி வந்தார். ஏனெனில், "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்ற இயேசுவின் வார்த்தைகளிலிருந்த உண்மையை அவர்களும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார். இயேசுவின் அந்தக் கூற்று, கடின உழைப்பிற்கு நமக்கு உந்துதலளிக்க வேண்டும். நாம் கஷ்டப்பட்டு உழைத்து பணத்தை சம்பாதித்தால், கொடுப்பதற்கு நம்மிடம் ஏதாவது இருக்கும். அப்போது இயேசுவின் இந்த ஒன்பதாவது பாக்கியவசனத்தைக் கற்றுக்கொள்வோம்.

பவுல் இந்த மூப்பர்களிடம், அவர்கள் இனிமேல் தன்னுடைய முகத்தைக் காணப்போவதில்லை என்று கூறிய போது, "அவர்களெல்லாரும் மிகவும் அழுது,.....அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்து" (37) வழியனுப்பினார்கள். சபையின் முதல் தலைமுறையிலிருந்த ஆழ்ந்த ஐக்கியத்தின் அழகான ஒரு காட்சி அது.

அத்தியாயம் எட்டு

# பவுல் பின்பற்றிய முறைகள்

இருபத்தோறாம் அதிகாரத்தில், பவுல் எருசலேமிற்கு வந்து பிரசங்கிக்க ஆரமபிக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம். அவருடைய பிரசங்கத்தின் விளைவால் அவர் ஒரு பெரிய கூட்டத்தால் தாக்கப்படுகிறார். அவர்கள் பவுலை உயிர் போகும்படி அடிக்கின்றனர். அப்பொழுது ஒரு ரோம அதிபதி போர்ச்சேவகர்களோடு அந்த கூட்டத்திற்குள் வந்து அவரை விடுவிக்கிறார். போர்ச்சேவகர்கள் பவுலை சுமந்து கொண்டு கோட்டைக்குள் செல்கின்றனர், அங்கு அவர் ரோம கைதியாக இருக்க வேண்டும். அப்போது பவுல் சேனாபதியை நோக்கி, தன்னைக் கீழே இறக்கிவிடுமாறும், தன்னைப் பிரசங்கிக்க அனுமதிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். ஏனென்றால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க இது ஒரு பெரிய சந்தர்ப்பம் என்று கண்டு கொண்டார். அங்கே, அவர் ஒரு அற்புதமான பிரசங்கத்தைத் தருகிறார். இது பின்வரும் அத்தியாயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது அவர் மார்ஸ் மேடையில் செய்த பிரசங்கம் போல் அல்ல. பவுல் கவிஞர்களையோ, தத்துவ ஞானிகளையோ இங்கு குறிப்பிடவில்லை, மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள வார்த்தைகளை அவன் பயன்படுத்தவுமில்லை. அவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தன்னுடைய அனுபவ சாட்சியைக் குறித்து கூறுகிறார். அங்கே இருந்தவர்கள் “அவனுக்குச் செவிகொடுத்தார்கள், ஆனால் அதன் பின்பு, எல்லாருமாக இப்படிப்பட்டவனை பூமியிலிருந்து அகற்ற வேண்டும்; இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்லவென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னார்கள்” (22:22). கூட்டத்தினரின் கோபம் மீண்டும் பொங்கியெழுந்த போது பவுல் கோட்டைக்குள் எடுத்துச் செல்லப்படுகிறார்.

ரோமர்கள் யாரையாவது கைது செய்தால், அவரை ஒரு தூணில் சங்கிலியால் கட்டி வைத்து அடிப்பது பொதுவான வழக்கமாகயிருந்தது. அதை அவர்கள், "கசையாலடித்து சோதிப்பது" என்று அழைத்தனர். இந்த சோதனைக்காக அவர்கள் பவுலை சங்கிலிகளால் கட்டயிருந்தபோது, பவுல் தான் ஒரு ரோம குடிமகன் என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கிறார். இதை அவர்கள் அறிந்து கொண்டவுடன், தங்கள் சேனாபதியிடம் அவரை அடிக்கக்கூடாது என்று கூறுகின்றனர் (29). பவுலும் சீலாவும் கைது செய்யப்பட்டு பிலிப்பு பட்டணத்தில் அடிக்கப்பட்டபோது தான் ரோமன் என்ற அந்தக் குடியுரிமையை அவர் ஏன் கூறவில்லை என்று நான் வியப்படைகிறேன். அந்தப் பட்டணத்தின் அதிபதிகளின் மேல் பிற்காலத்தில் அந்த நன்மையை பயன்படுத்த விரும்பியதென்பதால் ஒருவேளை தான் அடிக்கப்படுவதற்கு அங்கே அவர் அனுமதித்திருக்கக்கூடும்.

ரோமர்கள் அவரை அடிக்க முடியாது என்று தீர்மானித்த போது, அவரை சிறையில் அவர்கள் போடுகின்றனர். அடுத்த நாள் பிரதான ஆசாரியர்களுக்கு முன்பாகவும், ஆலோசனை சங்கத்திற்கு முன்பாகவும் விசாரிக்கவேண்டும் என்று தீர்மானிக்கின்றனர். அந்தக் கூட்டத்திலிருந்த, பவுலைக் குற்றஞ்சாட்டின தேவபக்தியுள்ள மக்கள், அவருக்கு எதிராக தங்கள் குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தில் வந்து சொல்லும்படி அழைக்கப்படுகின்றனர்.

நீண்ட தொடர் விசாரணைகளுக்குப் பின்பு இறுதியில் பவுல் இராயனுக்கு முன்பாக நிறுத்தப்படுவது இருபத்து மூன்றாம் அதிகாரத்தில் துவங்குகிறது. இந்த விசாரணை ஆரம்பிக்கும் போது, நாம் பவுலுடைய மனிதத்தன்மையைப் பார்க்கிறோம். அவர் நீதிமன்ற அறையை உற்றுப்பார்த்தபோது, அதில் சதுசேயர் ஒரு பாதியும், பரிசேயர் மறுபாதியுமாயிருப்பதைப் பார்த்தார். பரிசேயர் வைதீக (orthodox) யூதர்களாயிருந்தனர், சதுசேயர் உதாரமான மனமுடைய (liberal) யூதர்களாயிருந்தனர். சதுசேயர் உயிர்த்தெழுதலையோ இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களையோ நம்ப மாட்டார்கள். எனவே சரிசமமாகப் பிரிக்கப்பட்டிருந்த இந்த நீதிமன்ற அறையிலிருந்து கூட்டத்திற்கு பவுல் ஒரு சாதுரியமான கூற்றைக் கூறுகிறார். அவர் கம்பீரமாக "சகோதரரே, நான் பரிசேயனும் பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன்" என்று அறிவிக்கிறார். (அப்போஸ்தலர் 23:6).

மரித்தோரின் உயிர்த்தெழுதலை அவர் சாமார்த்தியமாக அறிவித்தவுடன், பரிசேயருக்கும் சதுசேயருக்குமிடையே ஒரு காரசாரமான விவாதம் எழும்புகிறது, இதில் பரிசேயர்கள் பவுலின் பக்கம் சேர்ந்து கொள்கின்றனர். பவுல், தான் ஒரு நியாயமற்ற, போலியான விசாரணைக்குள்ளாக தள்ளப்பட்டிருப்பதை அறிந்து கொண்டார். எனவே,

தான் பிலிப்பு பட்டணத்தில் செய்தது போல், நீதிமன்ற அறையை குழப்பி விட வேண்டும் என்று தீர்மானித்தார். பின்னர் போர்ச்சேவகர்கள் அவரை மீண்டும் விடுவித்து அவனுடைய பாதுகாப்பிற்காக திரும்பவும் சிறைக்கு அழைத்துப் போக வேண்டியிருந்தது.

இந்த யூதர்களில் நாற்பது பேர் ஒன்றாக சேர்ந்து கொண்டு பவுல் மரிக்கும் வரை தாங்கள் புசிப்பதில்லை என்று சபதம் பண்ணிக்கொண்டார்கள், பதுங்கிக் காத்திருந்து, பவுல் இன்னும் அதிக கேள்வி கேட்கப்படும்படி வெளியே கொண்டு வரப் படும்போது, அவனைக் கொன்று விட வேண்டும் என்பதே அவர்களது திட்டமாயிருந்தது. (12) யூதர்களுடைய இந்த சதித்திட்டத்தை பவுலுடைய சகோதரியின் மகன் ஒட்டுக் கேட்டுவிடுகிறான். எனவே அவன் சிறைச்சாலைக்குள் வந்து இரகசியத் திட்டத்தைப் பற்றி பவுலிடம் கூறுகிறான். பின்பு, அந்தப் பையன், இந்த நாற்பது யூதர்களின் திட்டத்தை சேனாபதியிடத்தில் கூறுகிறான்.

சேனாபதி, பவுலின் காரியத்தை தன் கைகளை விட்டு கழுவிவிட வேண்டுமென்று தீர்மானித்தான். அவருக்கு பவுல் என்ன தவறு செய்திருக்கிறார் என்றும் தெரியவில்லை, பவுலோடு யூதர்களுக்குள்ள பிரச்சனை என்னவென்றும் புரியவில்லை, ஆனால், இந்த மனிதன், பிரச்சனையைத் தவிர வேறொன்றையும் தனக்கு கொண்டுவரமாட்டான் என்று மட்டும் அறிந்திருந்தான். அவர் இரண்டு நூற்றுக்கு அதிபதிகளை அழைத்து, அவர்களிடம், “செசரியா பட்டணத்திற்குப் போகும்படி இருநூறு காலாட்களையும், எழுபது குதிரைவீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம் மணி வேளையிலே ஆயத்தம்பண்ணுங்களென்றும், பவுலை ஏற்றி, தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்திற்குப் பத்திரமாயக் கொண்டுபோகும்படிக்குக் குதிரைகளை ஆயத்தப்படுத்துங்களென்றும் (23,24) கூறினான்.

இது ஒரு சுவாரஸ்யமான காட்சியாகயிருக்கிறதல்லவா? இருள் சூழ்ந்துகொண்டிருக்க, ஒரு விநோத மனப்பாங்குள்ள, சிறிய யூதன், நானூற்று எழுபது ரோம போர்ச்சேவகர்கள் சூழ அழைத்துச் செல்லப்படுகிறான். அவர்கள் அவரை கோட்டைக்குள்ளிருந்து இரகசியமாக வெளியே கொண்டு வந்து எருசலேமிலிருந்து பாலஸ்தீனாவிலுள்ள செசரியாவிற்கு மத்திய தரைக்கடல் வழியாக மெய்க்காப்பாளர்களாகயிருந்து அழைத்துச் செல்கின்றனர்.

## இரண்டு தேசாதிபதிகளுக்கு முன்பு

பவுல் செசரியாவை அடைந்தவுடன் தேசாதிபதியாகிய பேலிக்ஸினிடத்தில் ஒப்புவிக்கப்படுகிறான். அப்போது பேலிக்ஸ் யூதர்களை வரச்சொல்லி, பவுல் செய்த குற்றங்களை முறையாகக் குற்றஞ்சாட்டும்படி கூறுகிறார். இங்கு மீண்டும், அப்போஸ்தலராகிய பவுலால் ஒரு பெரிய

செய்தி நமக்குக் கிடைக்கிறது. இந்தத் தருணத்தில், பவுல் தேசாதிபதிக்கு முன்பாகவும் அவருடைய நீதிமன்றத்திற்கு முன்பாகவும் பிரசங்கிக்கும் போது, அவர் தன்னுடைய சாட்சியை மீண்டும் கூறுகிறார். பவுல் பேசியதைக் கேட்டு, அவரை ஒரு குற்றவாளியாகக் கருதுவதற்கு, அவர்மேல், உண்மையிலேயே எந்த ஒரு காரணமும் இல்லை என்று பேலிக்ஸ் தீர்மானிக்கிறார். இருப்பினும், இந்த வித்தியாசமான தன்னுடைய கைதியை என்ன செய்வது என்று தான் தீர்மானிக்கும் வரை, அவரை சிறையில் வைப்பது என்று தீர்மானித்தார் (அப்போஸ்தலர் 24:22,23).

தேசாதிபதியாகிய பேலிக்ஸ் மற்றும் அவருடைய மனைவியாகிய யூத ஸ்தீரியாகிய துருசில்லாள், பவுலால் மிகவும் கவரப்பட்டவர்களாக, அவரைத் தனியாக விசாரிக்கும்படி வருவதற்கு அவரிடம் கேட்டுக் கொள்கின்றனர். இதைச் செய்வதற்கு பவுல் மிகவும் சந்தோஷப்பட்டார் என்றும், ஆனால் அவருடைய செய்தி தொந்தரவு கொடுப்பதாயுமிருந்தது என்றும் நாம் வாசிக்கிறோம், "அவன் நீதியையும், இச்சையடக்கத்தையும் இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன்" என்றான் (24,25).

பவுல் பகிரங்கமாகவும் தனிப்பட்ட விதத்திலும் பிரசங்கித்த போது தேசாதிபதி, பரிசுத்த ஆவியால் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டது போல் தெரிகிறது. அவன் பவுலை அடிக்கடி அழைப்பித்தான், ஆனால், பவுல் விடுவிக்கப்படுவதற்கு அவனிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வது தான் அவருடைய நோக்கமாயிருந்தது என்று நமக்குக் கூறப்படுகிறது. யூதர்களுடைய தயவைப் பெறும் பொருட்டும் அவர் பவுலை சிறையில் வைத்திருந்தார் என்று நாம் வாசிக்கிறோம்.

இரண்டு வருடங்களுக்குப் பின்பு பேலிக்ஸ் மரித்துப் போனார், பின் அவருடைய இடத்திற்கு பெஸ்து என்பவர் அதிபதியாக வந்தார். தேசாதிபதியாகிய பெஸ்து, தன்னுடைய கைகளில் ஒரு புகழ்பெற்ற, தேவபக்தியுள்ள, அரசியல் சிறைக்கைதியிருக்கிறார் என்று கண்டு கொண்டு, மற்றொரு விசாரணையை மேற்கொள்கிறார். எருசலேமின் யூதர்களால் செல்வாக்குப் பெற்ற நீதிமன்றத்தில் தனக்கு எந்த நீதியும் கிடைக்காது என்று பவுல் அறிந்திருந்தார். எனவே, அந்த விசாரணையின் போது, ஒரு ரோம குடிமகனாக தனக்கிருந்த உரிமையை இராயருக்கு முன்பாக தான் விசாரிக்கப்படவேண்டும் என்று உரிமையைக் கேட்டுக் கொள்கிறான். (அப்போஸ்தலர் 25:10). தேசாதிபதி, நீ இராயருக்கு அபயமிட்டாயே; இராயரிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்" (12).

**அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக**

பவுல், ரோமாபுரிக்கு நாடு கடத்தப்படும்படி காத்திருந்த போது,

தேசாதிபதியாகிய பெஸ்துவை சந்திக்க, ராஜாவாகிய அகிரிப்பாவும், அவருடைய ராணியாகிய பெர்னீக்கேயாளும் வந்திருந்தனர். அவர்கள் பவுலைப் பற்றி கேள்விப்பட்டவுடன், தாங்கள் அவரை சந்திக்க விரும்புவதாகக் கூறுகின்றனர் (22). கர்த்தர், பவுலைக் குறித்த தம் திட்டத்தை அனனியாவிடம் கூறிய போது, அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான் (அப்போஸ்தலர் 9:15) என்று கூறியது நினைவிருக்கிறதா? பவுல் அகிரிப்பா ராஜாவை சந்திக்கும் போது அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது.

அகிரிப்பாவிற்கும் பெர்னீக்கேயாளுக்கும் முன்பாக அழைத்து வரப்பட்ட பவுல், இன்னொரு அற்புதமான பிரசங்கத்தைக் கொடுக்கிறார். மீண்டும் ஒரு முறை, அவர், தான் தமஸ்கு செல்லும் வழியில் மனந்திருப்பப்பட்ட சம்பவத்தைக் கூறுகிறார். இந்தப் பிரசங்கத்தின் முடிவிற்கு பவுல் வரும்போது, தேசாதிபதி பொறுக்க முடியாமல், "பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது" (அப்போஸ்தலர் 26:24) என்றான்.

"நீ பிதற்றுகிறாய்" என்ற இந்த பதத்திற்கு கிரேக்க பாஷையில், "விநோத மனப்பாங்குள்ளவர் அல்லது ஒரே மையத்தில்/மனநிலையில் இல்லாதவன்" என்று அர்த்தமாகும். ஆம், பவுல் மையத்தைவிட்டுப் போனவன் தான் – ஏனெனில் அவருடைய வாழ்வு கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த மையத்தைச் சுற்றியும் வருவதற்கு அவருக்கு வேறு எந்த மையமும் இருக்கவில்லை. அவர் தமஸ்கு செல்லும் வழியில் சந்தித்திருந்த உயிர்த்த கிறிஸ்து தான் அவருடைய மையமாயிருந்தது. பெலிக்ஸைப் போலவே, தேசாதிபதியாகிய பெஸ்துவும், பவுலுடைய வார்த்தைகளால் அசைக்கப்பட்டார்.

பின்பு பவுல் ராஜாவிடம் திரும்புகிறார். அகிரிப்பா ராஜா ஒரு யூதர், எனவே பவுல் அவரிடம், "அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான்" (27). அகிரிப்பா பவுலிடம், "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்" என்றான் (28).

இந்த வசனங்களின் அர்த்தத்தைப் பற்றி வேத வல்லுநர்கள் ஒத்துக்கொள்வதில்லை. சிலர், அகிரிப்பா, உண்மையிலேயே தான் ஒரு கிறிஸ்தவனாவதைப் பற்றிப் பேசவில்லை, மாறாக ஒரு பரிகாசமாகத்தான் அப்படிக் கூறினார் என்று கூறுகின்றனர். நான் இதை ஒத்துக்கொள்ள மாட்டேன். அகிரிப்பாவுக்கு பவுல் கூறிய மறுமொழி உண்மையாயிருந்ததால், அகிரிப்பாவும் உண்மையைத்தான் கூறினார் என்று நான் நம்புகிறேன். பவுல் அவரிடம், "நீர்மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்த கட்டுகள் தவிர, முழுவதும்

என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்றான் (29).

பவுல் பேசிய பின்பு, ராஜா ராணி மற்றும் தேசாதிபதியின் மறுமொழியைப் பற்றி நாம் படிப்பதை வைத்து அகிரிப்பா உண்மையுள்ளவர் என்று நான் நம்புவதற்கு அது மற்றொரு காரணமாயிருக்கிறது, "இவைகளை அவன் சொன்ன போது, ராஜாவும் தேசாதிபதியும் பெர்னீக்கேயாளும் அவர்களுடனே கூட உட்கார்ந்திருந்தவர்களும் எழுந்து, தனியே போய்: இந்த மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்காவது பாத்திரமான தொன்றையும் செய்யவில்லையென்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள். அகிரிப்பா பெஸ்துவை நோக்கி: இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலை பண்ணலாகும் என்றான்'' (30-32)

## பவுல் ரோமாபுரிக்கு பயணம் செய்தல்

இந்த ஏவப்பட்ட வரலாற்றுப் புத்தகத்திலுள்ள சம்பவங்களில் மிகவும் சுவராஸ்யமான சம்பவம் பவுல் ரோம பட்டணத்திற்கு கப்பலில் பயணம் செய்ததைப் பற்றி லூக்கா கூறும் சம்பவமாகும் (அப்போஸ்தலர் 27). பவுல் ஒரு அசாதாரணமான தலைமைத்துவத்தை மெய்ப்பிக்கிறார். இந்தப் பயணத்தில் தன்னோடு பிழைத்தவர்கள் அனைவருக்கும் அவர் ஒரு அற்புதமான சாட்சியாயிருக்கிறார். அச்சுறுத்தக்கூடிய இயற்கை சூழ் நிலையின் காரணமாக, கிரேத்தா தீவிலிருந்து கப்பல் செல்ல முடியாது என்று பவுல் கர்த்தரிடத்திலிருந்து வார்த்தையைப் பெற்றுக் கொள்கிறார். ஆனால் ஒரு கைதியின் ஆலோசனையைக் கேட்பதற்கு ரோம அதிபதிகள் தயாராயிருக்கவில்லை.

பவுல், வருமுன் கூறிய அந்தக் காற்று அடித்த போது, சுடுங்காற்றினால் அதன் போக்கில் தள்ளப்பட்டு, உணவு உண்ண முடியாமல் இருக்கையில், பயந்துபோயிருந்த தன்னோடிருந்த மற்றவர்களுக்குப் பவுல் பிரசங்கிக்கிறார் (20-26). பவுல் அவர்களிடம், கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது என்று தேவன் தனக்கு உறுதி கூறியதாக கூறுகிறார்.

பவுல் கர்த்தரிடத்திலிருந்து பெற்ற இந்த தீர்க்கதரிசன வார்த்தை சரியாக நிறைவேறியவுடன், கப்பலிலிருந்தவர்கள் மெலித்தா என்ற தீவை அடைகின்றனர். அவர்கள் தங்களுடைய ஈரமான குளிராயிருந்த தங்கள் உடலுக்கு சூடு உண்டாக்க நெருப்பை மூட்டினார்கள். அப்பொழுது ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக் கொண்டது. மெலித்தா தீவில் வாழ்ந்தவர்கள், பவுல் பயங்கரமான குற்றங்களை செய்திருப்பார் போலும், எனவே தேவன் இப்போது அவரை தண்டிக்கிறார் என்றும் நம்பினார்கள். பவுல் அந்தப் பூச்சியை தீயிலே

உதறிப்போட்டு ஒரு தீங்கும் அடையாதிருந்ததால், அவர் ஒரு தேவனென்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டனர்.

ரோமாபுரி பயணம் முடிவடைந்த போது, ரோமாபுரியிலிருந்த, உயிர்த்த ஜீவனுள்ள கிறிஸ்துவின் சபையைக் குறித்து – அங்கிருந்த ஆவிக்குரிய சமூகத்தினரைப் பற்றி லூக்கா ஒரு அழகான வர்ணனையைக் கொடுக்கிறார். பவுல் வரப்போகிறார் என்பதை எப்படியோ அறிந்துகொண்ட ரோமாபுரியிலிருந்த விசுவாசிகள், அவர் ரோமாபுரியின் சிறைக் கைதியாக, அந்தப் பட்டணத்தில் நுழைந்த போது, அவரை சந்திக்க வந்த போது, அது அவருக்கு எவ்வளவு ஆறுதலாகவும் அவருடைய இருதயத்தை மிகவும் உற்சாகப்படுத்துவதாகவும் இருந்தது என்று காண்கிறோம்.

ரோம சிறை அதிகாரிகளிடம் சிறைக்கைதிகள் ஒப்புவிக்கப்பட்டனர். பவுல், ஒரு வாடகை வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார். அங்கு இரண்டு வருடங்கள் வீட்டுக்காவலின் கீழ் தங்குகிறார். அவர் ரோமாபுரியிலிருந்து தேவபக்தியுள்ள யூதத் தலைவர்களை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துப் பேச அனுமதிக்கப்படுகிறார். அவர் தன்னுடைய திட்டத்தின்படியே முதலாவது யூதர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து, இயேசுவே கிறிஸ்து என்ற தன்னுடைய வாதத்தை அவர்கள் முன் வைக்கிறார். சிலர் விசுவாசிக்கின்றனர், ஆனால் அவர்களில் பலர் பவுலின் விரோதிகளாகிறார்கள்.

இந்த வாடகை வீட்டில் தான் பவுல் தன்னுடைய சிறை நிருபங்கள் என்று அழைக்கப்படும் நிருபங்களான – கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர் மற்றும் பிலெமோன் ஆகிய நிருபங்களை எழுதுகிறார். விருந்தினர்களை அந்த வீட்டிற்கு அழைப்பதற்கு அவர் அனுமதிக்கப்படுகிறார். இந்த அன்பான அப்போஸ்தலரைக் குறித்து லூக்கா, பவுல் தன்னை வந்து சந்தித்த எல்லோருக்கும், தனக்கு செவிசாய்த்த அனைவருக்கும் தேவனுடைய ராஜ்யத்தைப் பிரசங்கித்தார் (28:30,31) என்று கூறுகிறார்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய கடைசி நிருபத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளும் காரியங்களைத் தவிர்த்து, பவுலுடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் கதையை முடிப்பதற்கு நாம் சபை வரலாற்றைத் தான் சார்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

பவுல் இராயனுக்கு முன்பாக விசாரிக்கப்பட்டு, விடுதலை யாக்கப்பட்டார் என்றும், பின்பு தன்னுடைய மிஷனரி ஊழியத்தை ஸ்பெயின் நாட்டிற்கு கொண்டு செல்ல ரோமாபுரியிலிருந்த சபையினர் அவரைத் தாங்கினார்கள் என்றும் வேத வல்லுனர்கள் நம்புகின்றனர்.

நீரோ ரோமாபுரியை எரித்துப்போட்டு, அந்தப் பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் போட்ட போது, சபைக்கு எதிராக கடுமையான

துன்புறுத்துதல் ஆரம்பமாகி, அது மூன்று நூற்றாண்டுகள் தொடர்ந்தது. எல்லா விசுவாசிகளும் வெறுக்கப்பட்டு, ரோம அரசாங்கத்திற்கும் ரோமாபுரியின் மக்களுக்கும் கசப்பான எதிரிகளானார்கள். பேதுருவும், பவுலும் எல்லோரைக் காட்டிலும் மிகவும் வெறுக்கப்பட்டவர்களானார்கள். பவுல் மீண்டும் கைது செய்யப்பட்டார். அவர் ரோமாபுரியிலுள்ள பயங்கரமான மாமர்டைன் என்ற சிறையில் வைக்கப்பட்டு, சிரச்சேதம் பண்ணப்படுவதற்கு முன்பு, தீமோத்தேயுவுக்கு தன்னுடைய கடைசி வார்த்தைகளை எழுதினார் என்று வேத வல்லுநர்கள் நம்புகின்றனர்.

இந்த மகா பெரிய அற்புதமான அப்போஸ்தலரைப் பற்றி நன்கு அறிந்து கொண்டீர்களா? நாம் ஆராயப்போகும் புதிய ஏற்பாட்டின் அடுத்த பதின்மூன்று புத்தகங்களை இவர் தான் ஆக்கியோன் ஆவார். நாம் யாவரும் பின்பற்ற விசுவாசத் தலைவர்களும் முன்மாதிரிகளும் தேவை. நாம் இப்போது ஆராய்ந்துள்ள இந்தப் புத்தகங்களின் அதிகாரங்களைப் படிக்கும் போது நீங்களும் பவுலை நேசிக்கிறவர்களாக வேண்டும் என்பது தான் என்னுடைய ஜெபமாகும்.

இந்த சரித்திரப் புத்தகத்தின் கடைசி அதிகாரங்களில் பவுல் ரோம சாம்ராஜ்ஜியத்தின் தலைநகருக்குள் வருவதிலும், இராயனுக்கு முன்பாக விசாரிக்கப்படுவதிலும், முடிவு வந்துவிடும் என்ற ஒரு உணர்வு நமக்கு ஏற்படுகிறது. ஆனால் இந்தப் புத்தகம் முடிவடையாமல் திடீரென்று நின்றுவிடுவது நமக்கு சற்று ஏமாற்றமாகவே உள்ளது. இந்தப் புத்தகம் திடீரென்று இப்படியே நின்று விடுவதற்கு காரணம் "துன்புறுத்தலாக" இருக்கக்கூடும் என்று வேத பண்டிதர்கள் நம்புகின்றனர். கடைசி இரண்டு அதிகாரங்களில் "நாங்கள்" என்று வருவதை நீங்கள் கவனித்தால், அந்த பயங்கரமான கடல் பயணத்திலும், அவர் ரோமாபுரிக்குள் சென்ற போதும், லூக்காவும் பவுலோடு இருந்தார் என்பது தெளிவாகிறது. ஒருவேளை லூக்கா கைது செய்யப்பட்டதால், சபையின் முதல் தலைமுறையின் இந்த அருமையான வரலாற்றை முடிக்க முடியாமல் போயிருக்கலாம்.

இந்தச் சிறிய புத்தகத்தின் ஆரம்பத்திலேயே நான் குறிப்பிட்டது போல, தேவனுடைய திட்டத்தின்படிக் கூட இந்தச் சபை வரலாற்றுப் புத்தகம் முடிவடையாமல் போயிருக்கலாம், ஏனெனில், பெந்தெகொஸ்தே நாளிலிருந்து – உயிர்த்த கிறிஸ்துவின் சபை பிறந்த நாளிலிருந்து அப்போஸ்தலர் பணியின் இருபத்து ஒன்பதாவது அதிகாரத்தை நாம் எழுதிக் கொண்டிருக்கிறோமே!

# பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் சுருக்கமான ஆய்வு

## அத்தியாயம் ஒன்று

## பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தைப் பற்றிய ஒரு பொதுவான கண்ணோட்டம்

புதிய ஏற்பாட்டின் இருபத்து ஏழு புத்தகங்களில் பதின்மூன்று புத்தகங்களை எழுதியவர் பவுல் அப்போஸ்தலர். இதில் முதல் நிருபம் அவர் ரோமருக்கு எழுதிய நிருபமாகும். புதிய ஏற்பாட்டில் காணப்படும் வரிசைப்பிரகாரமாக பவுல் தன்னுடைய நிருபங்களை எழுதவில்லை. பவுல் இந்த நிருபத்தை, தன் ஊழியத்தின் கடைசி நேரத்தில், தான் உலகம் முழுவதும் பிரசங்கித்த சுவிசேஷத்தைப் பற்றிய உண்மைகளை நன்கு அறிந்து கொண்டு தம் விசுவாச வாழ்வில் முதிர்ச்சியடைந்தப் பின்பு எழுதினார் என்று வேத பண்டிதர்கள் நம்புகின்றனர்.

ரோமர் நிருபத்தைக் குறித்த இந்தச் சுருக்கமான விளக்கவுரையில், நம்முடைய சுருக்கமான ஆய்வைக் குறித்து வானொலியில் பவுலின் இந்த நிருபத்தைப் பற்றி கேட்டிருப்பவர்களுக்கு நான் சில குறிப்புகளை வழங்குகிறேன். பவுல், தான் அறிவித்த விளக்கமான சுவிசேஷத்தின் ஒரு சுருக்கமான பாடம் தான் இந்தச் சிறிய புத்தகம்.

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம் அவருடைய சாஸ்திர இறையியல் சாதனையாகும். இந்த நிருபத்தில், ரோமாபுரியிலிருந்த சபைக்கென்று குறிப்பாக, அதிகமான அளவில் எதையும் கூறவில்லை. பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது இந்த உலகத்தின் தலைநகராக ரோமாபுரியிருந்ததால், சுவிசேஷத்தின் இந்த ஆழ்ந்த ஆய்வை ரோமாபுரியிலிருந்த விசுவாசிகளுக்கு எழுதினார் என்று வேத வல்லுநர்கள் நம்புகின்றனர்.

வேதத்தின் 'நீதிமானாக்கப்படுதல்' என்ற வார்த்தையைப் பற்றி விவரமாக விளக்குவது தான் இந்த நிருபமாகும். பரிசேயன் மற்றும் ஆயக்காரனைப் பற்றிய இயேசுவின் உவமையில், பாவிகளின் ஜெபத்தை – நம்முடைய பாவங்களுக்காக, மரித்து அடக்கம் செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்த இயேசுகிறிஸ்துவின் இரட்சிக்கும் வல்லமையில் விசுவாசம் கொண்டு ஜெபிக்கும் மனந்திரும்புதலின் ஜெபத்தை ஜெபிக்கும் எந்த மனுஷனும்/மனுஷியும், "நீதிமானாக்கப்பட்டவர்களாக" தங்களுடைய வீட்டிற்குப் போவார்கள் (லூக்கா 18:14) என்ற நற்செய்தியை அவர் அறிவிக்கிறார். புதிய ஏற்பாட்டில் இந்த அழகான வார்த்தையை நாம் முதல் முதலாக இங்குதான் பார்க்கிறோம். பவுல், ரோமருக்கு எழுதிய இந்த நிருபத்தில், நீதிமானாக்கப்பட்ட ஒவ்வொரு ஆணிடத்திலும்,

பெண்ணிடத்திலும் நீதிமானாக்கப்படுதல் என்ற இந்த அருமையான அற்புதத்தை தேவன் எப்படி செயல்படுத்துகிறார் என்பதை விளக்குகிறார். நீதிமானாக்கப்படுதல் பற்றி வேதத்தில் இருக்கும் மிகவும் பரந்த கூற்று இந்த நிருபமாகும்.

நீதிமானாக்கப்படுதல் என்பது மன்னிக்கப்படுதல் என்பதற்கும் மேலானது. நான் பாவமே செய்யாதது போல், தேவன் என்னைக் குறித்து அறிவித்து விட்டார் என்றும், நான் நீதிமானாயிருக்கிறேன் என்று அறிவித்துவிட்டார் என்றும் இதற்கு அர்த்தமாகும். தாவீது அறிக்கையிடுதல் மற்றும் மனந்திரும்புதல் குறித்த தனது சங்கீதத்தில், தன்னுடைய மீறுதல்கள் நீங்க தன்னைச் சுத்திகரிக்குமாறு தேவனிடம் கேட்கையில் இந்த வார்த்தையை தீர்க்கதரிசனமாக அறிமுகப்படுத்துகிறார் (சங்கீதம் 51:1).

ஒருமுறை, ஒரே சமயம் தொடர்ந்து ரோமருக்கு எழுதிய நிருபத்தை வாசித்து, இந்தப் புத்தகத்திலுள்ள பகுத்தறியும் விவாதத்தை நிச்சயித்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். இந்த நிருபத்தில் துவக்கத்திலிருந்து முடிவு வரை முரணற்ற ஒரு விவாதம் இருப்பதால் இதை நீங்கள் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நீதிமானாக்கப்படுதல் பாவியோடு எப்படி சம்பந்தப்படுகிறது என்று இந்த நிருபத்தின் முதல் நான்கு அதிகாரங்கள் நமக்குக் காண்பிக்கின்றன. நாம் அநீதியுள்ள பாவிகள் என்று அறிந்துகொள்ளும்வரை, நீதிமானாக்கப்பட்டோம் என்று அறிவிக்கப்படுவதில் அவ்வளவு முக்கியத்துவம் இருக்காது. நாம் அனைவரும் பாவிகள் என்ற துர்ச் செய்தியை நாம் நம்பும்படி செய்த பிறகு, பவுல் நாம் நீதிமான்களாக்கப்படுவ தற்கு தேவன் ஒரு திட்டம் வைத்துள்ளார் என்ற நற்செய்தியை அறிவிக்கிறார்.

## நீதிமான்களாக்கப்படுதலுக்கு தேவனுடைய திட்டம்

பவுலைப் பொறுத்தவரை, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு ஆரம்ப இடம் கிருபை ஆகும் (3:24). நாம் நீதிமான்களாக்கப்பட்டதற்கான அடிப்படை ஆதாரம் இயேசு கிறிஸ்துவின் சிலுவையாகும், நாம் நீதிமான்களாக்கப் பட்டுவிட்டோம் என்பதற்கான உத்திரவாதம் இயேசுவின் உயிர்த்தெழுதலாகும் (3:25; 4:24,25). அவர், “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்” (5:1) என்ற இந்த வார்த்தைகளோடு தன்னுடைய வாதத்தின் இந்தப் பகுதியை முடிக்கிறார். எனவே, நம்முடைய பாவத்திற்கு இந்த அற்புதத்தை நாம் தனிப்பட்ட விதத்தில் பயன்படுத்தி, தேவனால் நீதிமான்களாக்கப்பட்டோம் என்று அறிவிக்கப்படுவதற்கான கொள்கை/நியமம் விசுவாசமாகும். பின்னர், அவருடைய விவாதத்தில், தேவனே, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்கு காரணம் ஆவார் என்று அவர் கூறுவார் (8:33).

நீதிமானாக்கப்படுதல் என்ற இந்தக் காரியம் கற்றுக்

கொடுக்கப்படும்போது, பல வார்த்தைகளைக் கொண்ட ஒரு தொகுதி நூற்றைம்பது முறை வேதத்தில் வந்துள்ளதை நான் குறிப்பிடவேண்டும். அந்த வார்த்தைகள், "அவருடைய பார்வையில்" நீதிமானாக்கப்படுதலில், செங்குத்தான மற்றும் கிடைநிலையிலுள்ள பரிமாணம் உள்ளது. நாம் கொலை செய்துவிட்டோமானால், விசுவாசம், அறிக்கையிடுதல் மற்றும் மனந்திரும்புதல் மூலமாக தேவனுடைய பார்வையில் நீதிமானாக அறிவிக்கப்படலாம், ஆனால் இந்தச் சமுதாயத்தின் பார்வையில் நாம் நீதி மானாக்கப்படாததால், அல்லது மனிதனுக்கு முன்பாக நீதிமானாக்கப் படுதலின் அந்த கிடைநிலையிலுள்ள காரியத்தில் நாம் நீதிமானாக்கப் படாததால், நாம் சிறையிலிருந்து விடுதலை செய்யப்படமாட்டோம்.

ஜுரிகள் இல்லாமல் ஒரு விசாரணை நீதிபதிக்கு முன்பாக நடக்கும் போது, பிரதிவாதி நன்றாகப் பேசுகிறார் என்று அந்த விசாரணைக்கு வந்திருக்கும் மக்கள் நினைக்கக்கூடும், ஆனால் பிரதிவாதி குற்றமுள்ளவன் என்று நீதிபதி நினைத்தாரானால், அவர்கள் சிறைக்குப் போவார்கள் அல்லது தங்களுடைய வாழ்க்கையை இழந்து போவார்கள். பிரதிவாதி ஒரு பயங்கரமான நபர் என்று மக்கள் நினைக்கலாம், ஆனால் அவர்கள் குற்றமற்றவர்கள் என்று நீதிபதி நம்பினாரானால், அவர்கள் விடுதலையாக்கப் படுவர். இதைப் போலவே, நம்முடைய குற்றமனப்பான்மையைக் குறித்தோ குற்றமில்லாதத் தன்மையைக் குறித்தோ இந்த உலக நீதிபதி என்ன நினைக்கிறாரோ அது தான் முக்கியம் என்பதை நாம் ஒரு நாள் உணர்வோம். எனவே தான் நாம் அவருடைய பார்வையில் பாவம் செய்யாதவர்கள் போலவே இருப்போம் என்று நமக்குக் கூறப்படுவது ஒரு மிக நல்ல நற்செய்தியாகும்.

அடுத்த நான்கு அதிகாரங்கள், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படும் அந்த நபரோடு நீதிமானாக்கப்படுதல் எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைக் காண்பிக்கிறது. நம்மை நீதிமான்களாகத் தீர்க்கும் போது, நாம் சரியானவர்களாக, சரியானவற்றைச் செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் (I யோவான் 3:7). இந்த நிருபத்தின் இரண்டாவதாக உள்ள நான்கு அதிகாரங்களில் (5-8), நீதிமானாக அறிவிக்கப்பட்ட ஒரு நபர், அந்த நீதிமானாக்கப்படுதலின் வாழ்வை வாழ்வதற்கு வல்லமையை பரிசுத்த ஆவியானவரிடம் கண்டு கொள்ள அவன் எதிர்நோக்கும் போராட்டங்களைப் பற்றிப் பவுல் கூறுகிறார்.

அடுத்த மூன்று அதிகாரங்களில் (9-11), நீதிமான்களாக்கப்படுதல் என்பது இந்த உலகம் முழுவதற்கும் குறிப்பாக இஸ்ரவேலுக்கும் எப்படியாக சம்பந்தப்பட்டுள்ளது என்பதை பவுல் கூறுகிறார். வேதத்தின் தீர்க்கதரிசனத்தைக் குறித்த காரியத்தில் இந்த மூன்று அதிகாரங்கள் தான் மிகவும் முக்கியமானவை ஆகும். இந்த மூன்று அதிகாரங்களிலும், இந்த உலகத்தில் நடக்கப்போகும் காரியங்களில் இஸ்ரவேல் ஈடுபட்டிருக்கும் என்று பவுல் முன்னறிவிக்கிறார்.

பவுலைப் பொறுத்தவரை, இஸ்ரவேல் மக்கள், தேவனுடைய

தெரிந்துகொள்ளப்பட்ட மக்கள் – தேவன் இரட்சிப்பிற்காக மக்களைத் தேர்ந்தெடுக்கிறார் என்பதற்கு அவர்கள் மிகப்பெரிய உதாரணமாவார்கள். இருப்பினும், இதே மூன்று அதிகாரங்களில், தேவன் மனிதனை, தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு சிருஷ்டியாகவே சிருஷ்டித்திருக்கிறார் என்ற வேதத்தின் உண்மையை விளக்க, யூதர்களும் மிகப்பெரிய எடுத்துக்காட்டாவார்கள் என்று பவுல் எழுதுகிறார். யூதர்கள், தாங்கள் தேர்ந்தெடுக்கக் கூடாததைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று நமக்கு கூறும்போது அந்தக் கருத்தைக் குறிப்பிடுகிறார். அவர்கள் இயேசு கிறிஸ்துவையும், இரட்சிப்பையும் ஏற்க மறுத்துவிட்டார்கள்.

மேசியாவை ஏற்க மறுத்ததற்காக யூதர்களைத் தண்டிப்பதற்காக, தேவன் யூதரல்லாத உலகத்தின் பக்கமாகத் திரும்பினார். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்க மறுத்த நாளிலிருந்து தேவன் யூதரல்லாத ஜனத்தை இரட்சித்துக் கொண்டிருக்கிறார் என்று பவுல் எழுதுகிறார். தன்னை ஏற்க மறுத்ததற்காக இஸ்ரவேலை போதுமான அளவு தண்டிப்பதற்காக, தேவன் போதுமான புறஜாதியினரை இரட்சித்து விட்டார், தேவன் யூதர் பக்கமாக மீண்டும் திரும்பப் போகிறார், அப்போது “இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்” (ரோமர் 11:26).

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் சிதறடிக்கப்பட்ட யூதர்கள், மீண்டும் இஸ்ரவேல் தேசமாவதற்கு, திரும்பவும் வருவார்கள் என்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலை நாம் பார்த்துவிட்டோம். யூதர்கள் தேவனிடம் ஆவிக்குரிய விதத்தில் திரும்பப்போகிறார்கள் என்று முன்னறிவிப்பதால், பவுலும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து கொள்கிறார். அந்த ஆவிக்குரிய திரும்புதல் இன்னும் தெளிவாக நடைபெறவில்லை. இந்த மூன்று அதிகாரங்களில், அவர்கள் தேவனிடம் அந்த ஆவிக்குரிய திரும்புதலை அனுபவிக்கும் போது அவர், இஸ்ரவேலின் மூலமாக இந்த உலகம் முழுவதற்கும் தன்னுடைய நீதிமானாக்குதலின் திட்டத்தைச் சம்பந்தப்படுத்தப்போகிறார்.

கடைசி நான்கு அதிகாரங்கள் (12-16), இந்த அருமையான நிருபத்தை அப்படியே நடைமுறைப்படுத்தக்கூடிய பகுதியாகும். பவுலுடைய ஒவ்வொரு நிருபமும் இரண்டு பகுதிகளாக பிரிகிறது. முதலாவது, நிருபத்தின், உபதேசப் பகுதியாகும், அடுத்தது, நிருபத்தை அப்படியே நடைமுறைப்படுத்தும் பகுதியாகும். எனவே பவுலுடைய நிருபங்களில், எப்பொழுதுமே இந்த உபதேசித்தல் பகுதியைப் பாருங்கள்.

இந்த நிருபத்தின் முதல் பதினோறு அதிகாரங்கள் பவுல் சபைக்குக் கொடுத்துள்ள சுவிசேஷத்தின் மிகப்பெரிய கூற்றாகவும், அடுத்த மூன்று அதிகாரங்கள், புரிந்து கொள்வதற்குக் கடினமான, இறையியல் மற்றும் தீர்க்கதரிசனம் பற்றிய கூற்றாக இருக்கும்போதிலும், கடைசி நான்கு அதிகாரங்கள் மிகவும் நடைமுறைக்கேற்ற, எளிதில் அப்பியாசிக்கக்கூடிய சுவிசேஷ சத்தியங்களாகும்.

## அத்தியாயம் இரண்டு

# இருந்தது போலவே - இருக்கிறது

பவுல் ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முதல் அதிகாரம், ஆதியாகமம் புத்தகத்தின் முதல் அதிகாரம் போலவே இருக்கிறது. துவக்கங்களைப் பற்றிக் கூறும் வேத வாக்கியங்கள், காரியங்கள் எப்படியாக இருந்தது என்று நமக்கு கூறுவதில்லை, ஆனால் அவை இன்று இருப்பது போலவே நாம் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். பவுல், நீதிமானாக்கப்படுதல் என்ற காரியத்தை பாவியோடு சம்பந்தப்படுத்தும்போது, நாம் அனைவரும் பாவிகள் என்ற கருத்தைக் கூறிவிட்டு, பின்பு, நாம் அனைவரும், தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கீழ் இருக்கிறோம் என்கிறார்.

அதன் பின்பு அன்று இருந்தது போலவும், இன்று இருப்பது போலவும் அவர், தேவனுக்கும் மனிதனுக்குமிடையேயுள்ள உறவைப் பற்றிக் கூறுகிறார். நாம் சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிறவர்களாயிருக்கிறோம் (ரோமர் 1:18) என்று தேவன் குற்றஞ்சாட்டுகிறார். பாவிகள் தங்களுடைய அநீதியுள்ள வாழ்க்கை முறையை நியாயப்படுத்த விரும்புவதால், அவர்கள் வேண்டுமென்றே சத்தியத்தை அடக்கி வைக்கிறார்கள். தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்த விரும்பும் வாழ்வை எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றிய சத்தியத்தை அவர்கள் பார்க்க விரும்புவதில்லை. எந்த மனிதனாகிலும் செய்ய மனதுள்ளவனாயிருந்தால் அவன் அந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதா அல்லது சுயமாய்ப் பேசுகிறானா என அறிந்து கொள்வான் (யோவான் 7:17) என்று இயேசு கற்பித்தார். இதை அப்படியே மாற்றிப்போட்டால் அதுவும் உண்மையாகும். எந்த மனிதனாவது, தேவ சித்தத்தைச் செய்ய மனதுள்ளவனாக இல்லாவிட்டால், அவன் எதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அதை அறிந்து கொள்ள மாட்டான்.

தேவன் இன்னும் அதிகமாகக் குற்றஞ்சாட்டுகிறார்: அவர்கள் நன்றியுள்ளவர்களாக இல்லை, அவர்கள் எப்போதும் சத்தியத்தைப்

பொய்யாக மாற்றுகிறார்கள். அவர்கள் உருவாக்கியவரை ஆராதிக்காமல், உருவாக்கப்பட்டவனை ஆராதிக்கிறார்கள். அவர்கள் இயற்கையான காரியங்களை இயற்கையல்லாத காரியங்களாக (ஓரினச்சேர்க்கை) மாற்றுகிறார்கள். அவர்கள் தங்களுடைய மனதில் தேவனை வைத்துக் கொள்ளக்கூட விரும்பவில்லை, அவர்கள் பாவம் செய்வதில் சந்தோஷப்படுவது மட்டுமல்லாமல், மற்ற ஜனங்கள் பாவம் செய்வதைப் பார்ப்பதிலும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறார்கள்.

பின்னர் பவுல், தேவன் மனிதனுக்கு கொடுத்த மறுமொழிகள் சிலவற்றை வழங்குகிறார். "தேவன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்" என்று மூன்று முறை (24,26,28) பவுல் எழுதுகிறார். தேவன் மனிதனை அன்று ஒப்புக்கொடுத்தார் என்றோ, அல்லது தேவன் இன்று மனிதனை ஒப்புக் கொடுக்கிறார் என்றோ அவர் அர்த்தம் கொள்ளவில்லை. தேவன் அன்று அவர்களை ஒப்புக்கொடுத்தார், இன்றும் நாம் விரும்புவதற்கு நம்மை ஒப்புக்கொடுக்கிறார். தேவன், நம் விருப்பப்படி தேர்ந்தெடுக்கக்கூடிய சிருஷ்டிகளாக உருவாக்கியுள்ளார் என்ற உண்மையை தேவன் மீற மாட்டார். நம் வாழ்க்கையை ஒரு புத்தகமாக நினைத்துக் கொள்ளுங்கள். இந்த புத்தகத்தை எழுத வேண்டும் என்பது தேவனுடைய எண்ணமாகும், இந்தப் புத்தகம் எப்படி எழுதப்பட வேண்டும் என்பதைக் குறித்து அவர் ஒரு திட்டம் வைத்திருக்கிறார். ஆனால், ஒரு குறிப்பிட்ட தருணத்தில் அவர் பேனாவை நம்மிடம் கொடுத்து, "இதோ, நீ எப்படி விரும்புகிறாயோ அப்படியே கதையை முடித்துக்கொள். நீ தான் அதன் பலனை அனுபவிக்க வேண்டும், அதைத் தான் நீ விரும்புகிறாய் என்றால், அப்படியே உன் கதையை எழுதிக் கொள்" என்று கூறுகிறார்.

### மனிதனுடைய குணம்

தங்களுடைய கதையை தாங்கள் விரும்பியபடியே முடிக்க தீர்மானிக்கிறவர்களுக்கு என்ன நேரிடுகிறது என்பதைக் குறித்து பவுல் துக்ககரமான காரியங்களைக் கூறுகிறார். தேவன் அவர்களை ஒப்புக்கொடுக்கும்போது, அவர்கள் தங்கள் சிந்தனைகளில் வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது என்றும் எழுதுகிறார். பின் அவர்களுடைய துக்ககரமான வாழ்க்கையை இரண்டே வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறுகிறார்: "எல்லா அநீதியும்". அவர்களுடைய அநீதத்தைப் பற்றிக் கூறும் போது, மனிதனுடைய குணத்தைப் பற்றி – அது எப்படியிருந்தது என்றும் இன்று எப்படி இருக்கிறது என்றும் ஒரு உண்மையான நிலையைப் பற்றி நமக்குக் கூறுகிறார் (29-32). இந்த துக்ககரமான, பாவத்தின் நீண்ட பட்டியல், நாமெல்லாரும் "ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம்" (ஏசாயா 53:6) என்று ஏசாயா எழுதிய போது எதைக் குறிப்பிட்டாரோ அதையே இதுவும் விவரிக்கிறது.

## தேவனுடைய குணம் – அது இருந்ததுபோல – இருக்கிறதுபோல

நம்முடைய குணத்தைக் குறித்து பவுல் இந்த ஊக்கமளிக்கக்கூடிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டு, இந்த நிருபத்தின் சிறந்த விவாதத்தைத் துவங்குகிறார். தேவன் நீதியுள்ளவராயிருக்கிறார் என்றும், தேவநீதியானது, அநீதியுள்ளவர்கள் மேல் தேவனுடைய கோபாக்கினையை வெளிப்படுத்தும் என்றும் பவுல் கூறும் போது (1:17), மனிதனுடைய குணத்திலிருந்து தேவனுடைய குணத்திற்கு செல்கிறார். வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால், நீதியானது எது என்பதற்குப் பூரணமான முன்மாதிரி தேவன் தான், எனவே தன்னுடைய சிருஷ்டிகளும் நீதியுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார். தன்னுடைய சிருஷ்டிப்பில் அநீதியுள்ளவர்களை தேவன் கண்டிக்கிறார்.

இந்த முக்கியமான வசனத்தில், தேவனுடைய குணத்தின் இரண்டு குணாதிசயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒன்று தேவநீதி, மற்றொன்று தேவ கோபாக்கினை. பவுல் இப்போது தன் வாதத்தைத் தொடர்ந்து கட்டுகிறார். நம்முடைய குணத்தினால் மட்டும் நமக்குப் பிரச்சனைகள் வருவதில்லை. தேவனுடைய குணத்தின் காரணமாகவும் நமக்கு ஒரு பிரச்சனையுண்டு. நாம் பாவிகள் மட்டுமல்ல, ஆனால் நாம் பாவிகளாக தீர்க்கப்பட்டுள்ளோம். நம்மால் தீர்க்க முடியாத இரண்டு பிரச்சனைகள் நமக்குண்டு. இந்த இரண்டு பிரச்சனைகளையுமே தேவன் தீர்த்துவிட்டார் என்பதே இந்த நிருபத்தின் நற்செய்தியாகும்.

ஏசாயா, நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம் என்ற துர்ச்செய்தியை அறிவித்தப் பின், “கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்” (ஏசாயா 53:6) என்ற நற்செய்தியையும் பிரசங்கித்தார். இந்த சுவிசேஷத்தின் கூற்றிலும் பவுல் அதே காரியத்தைத் தான் செய்கிறார்.

தேவனுடைய கோபாக்கினையை, “பரிசுத்தமல்லாதவற்றைக் குறித்து, பரிசுத்தத்தின், நிரந்தரமான, உறுதியான மனப்பாங்கு ஆகும்” என்று கூறலாம், அல்லது தம்முடைய அன்புக்குரியவர்களை அழிக்கக்கூடிய காரியத்தின் மேல், அன்புள்ள தேவனுடைய நிரந்தரமான உறுதியான மனப்பாங்கு ஆகும், என்றும் விவரிக்கலாம். தேவனுடைய சாராம்சமே அன்பாகும் என்று வேத வாக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. ஆனால் தான் அன்பு செய்கிறவர்கள், பாவத்தால் அழிக்கப்படும் நிலையிலிருக்கும் போது, நம்முடைய அன்பான தேவன் கோபாக்கினை நிறைந்தவராகவும் மாறுவார். தேவன் அன்பு செய்வதை பாவம் அழித்து விடுவதால், தேவன் பாவத்தை வெறுக்கிறார், கண்டிக்கிறார்.

## அத்தியாயம் மூன்று

# நான்கு ராஜாக்களும் நான்கு சட்டங்களும்

பவுல், முதல் நான்கு அதிகாரங்களைப் பற்றிய தன்னுடைய விவாதத்தைச் சுருக்கி, ஐந்தாம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் கொடுக்கிறார். அவர், "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1) என்று சுருக்கமாக தன் விவாதத்தை எழுதுகிறார். தன்னுடைய விவாதத்தின் இரண்டாவது நான்கு அதிகாரங்களை அறிமுகப்படுத்தும் போது, அடுத்த வசனத்தில், "அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினாலே பெற்று நிலை கொண்டிருந்து தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" (5:2) என்று தொடர்ந்து எழுதுகிறார். கிறிஸ்துவின் சிலுவையின் மேலுள்ள நம் விசுவாசம் நம்மை நீதிமான்களாக்கி, தேவனோடு நமக்கு சமாதானத்தைக் கொடுக்கிறது. நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவுக்காக நிற்கவும், இயேசுவை உயர்த்தி, தேவனை மகிமைப் படுத்தக்கூடிய ஒரு வாழ்வை வாழவும் சாத்தியமாக்குவதற்கு கிருபைக்குள் பிரவேசிக்க விசுவாசம் நமக்கு உதவுகிறது.

**நான்கு ராஜாக்கள்**

விசுவாசத்தினால் இப்போது நீதிமான்களாக்கப்பட்டுள்ள நாம், நீதிமான்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ள மக்களைப் போல் எப்படி வாழ்வது? "நான்கு ராஜாக்கள்" என்று அழைக்கப்படக்கூடிய ஒரு உபதேசத்தின் மூலம் (5:12-21), பவுல் இந்தக் கேள்விக்கான பதிலைக் கொடுக்க ஆரம்பிக்கிறார். நாம் முதல் ராஜாவை "பாவம் என்ற ராஜா" என்று அழைக்கலாம். இந்தப் பாவம் என்ற ராஜா உலகத்திற்குள் பிரவேசித்து "எல்லா மனுஷருக்குள்ளும்" பரவியது (12) என்று நாம் வாசிக்கிறோம். பாவம் இந்த உலகத்திற்குள் எப்படி பிரவேசித்தது, ஏன் பிரவேசித்தது என்ற தத்துவரீதியான விவாதத்திற்குள் பவுல் செல்லவில்லை. அவர், பாவம் பிரவேசித்து, பரவி ஆட்சி செய்தது என்று மட்டுமே எழுதுகிறார்.

பாவம் என்ற ராஜாவுக்குப் பின், மரணம் என்ற ராஜா தொடர்ந்து வந்தது. பவுல் பின்னர், "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று கூறுகிறார் (6:23). பாவத்திற்கு எப்போதுமே விளைவுகள் உண்டு, அந்த விளைவுகள் நல்ல விளைவுகள் அல்ல. அந்த விளைவுகளில் ஒன்று மரணம் ஆகும். மரணம் ஒரு உருவகமாகவும் இருக்கிறது – பாவம் எப்போதும் மோசமான விளைவையே ஏற்படுத்தும் என்ற அர்த்தத்தில் அது ஒரு உருவகமாக இருக்கிறது. சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ நாம் அனைவரும் நம் பாவத்தின் விளைவுகளைச் சந்திக்க வேண்டும். பாவம் என்ற ராஜாவைத் தொடர்ந்து மரணம் என்ற ராஜா எப்போதும் வரும்.

முதல் இரண்டு ராஜாக்களும் கெட்ட செய்திகளாகும், ஆனால் அடுத்த இரண்டு ராஜாக்களும் நற்செய்திகளாகும். மூன்றாவதாக ஒரு ராஜா பிரவேசித்து, பரவி, வாழ்க்கையில் ஆட்சி செய்தார் என்றும், அவருடைய பெயர் இயேசு கிறிஸ்து என்றும் பவுல் எழுதுகிறார். இயேசுவாகிய ராஜா சிலுவையில் பாவம் என்ற ராஜாவின் மேல் வெற்றி கொண்டார். மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தபோது மரணம் என்ற ராஜாவின் மேல் வெற்றிகொண்டார்.

பவுல் இன்னும் அதிகமான நற்செய்தியை வைத்திருக்கிறார். நான்காவது ராஜா, ராஜாவாகிய நீங்கள் தான். விசுவாசத்தின் மூலம், நீங்கள் கிறிஸ்துவிலுள்ள வாழ்விற்குள் பிரவேசிக்கிறீர்கள். விசுவாசத்தினால், நீங்கள் கிறிஸ்துவில் நிறைந்திருக்கலாம். கிறிஸ்துவிற்குள் உள்ள ஜீவனில் பிரவேசித்து, நீதி என்ற ஈவை, கிருபை மற்றும் விசுவாசத்தால் பெற்றுக் கொள்பவர்கள் "இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்கள்". வேறு வார்த்தைகளில் கூற வேண்டுமென்றால், நாம் அவராலே ஜீவனை அடைந்து ஆளும்படியாக, நீஙகளும் நானும் விசுவாசத்தினால் கிறிஸ்துவிற்குள் பிரவேசிப்பதற்கு முடியும் (5:17). இயேசு கிறிஸ்து, "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" (யோவான் 10:10) என்று கூறினார். அந்த இயேசுவின் பரிபூரண ஜீவனிற்குள் எப்படி பிரவேசிப்பது என்பதைத் தான் பவுல் நமக்குக் கூறுகிறார்.

இந்த நான்கு ராஜாக்களும் வெற்றி கொள்பவர்கள். நாம் இனிமேலும் பாவத்தோடு ஜீவிக்க முடியாது, அது கொடிய புற்றுநோயோடு ஜீவிப்பது போலாகும். மரணமாகிய ராஜாவை நம்மிடம் அனுப்பி பாவமாகிய ராஜா நம்மை தோற்கடித்துவிடும். ஆனால் விசுவாசம் மற்றும் கிருபையினால், கிறிஸ்துவிற்குள்ள பரிபூரண ஜீவனில் நாம் பிரவேசித்தால், நாம் பாவத்தை ஜெயிக்கிறவர்களாக, பரிபூரண ஜீவனைப் பெறுவோம். தன்னுடைய விவாதத்தின் இந்தப் பகுதியை, எட்டாம் அதிகாரத்தில் பவுல் முடிக்கும் போது, நாம் பாவத்தின் மேலும், நம்முடைய வாழ்விலும் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருப்போம் (8:37) என்று பவுல் அறிவிக்கிறார்.

**நான்கு சட்டங்கள்**

இந்த நிருபத்தின், இரண்டாவது நான்கு அதிகாரங்களைத் தொடங்குவது நான்கு ராஜாக்களைக் குறித்த உருவகமாகும். பவுல் தன்னுடைய நிருபத்தின் இந்த இரண்டாவது பிரிவின் கடைசி இரண்டு அதிகாரங்களில் கூறும் நான்கு ஆவிக்குரிய சட்டங்களைப் பற்றி நாம் கேட்பதற்கு இந்த நான்கு ராஜாக்களும் நம்மைத் தயார் செய்கின்றனர் (5-8). நாம் கிறிஸ்துவின் மூலமாக ஜெயங்கொள்ளுகிறவர்களாகயிருக்க கற்றுக் கொள்ள வேண்டுமானால், இந்த நான்கு ஆவிக்குரிய சட்டங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

முதல் சட்டம், "தேவனுடைய நியாயப்பிரமாணம்" (7:1-6). தேவனுடைய நியாயப்பிரமாணம், தேவனுடைய வார்த்தையாகும் (சங்கீதம் 1:1,2). தேவனுடைய வார்த்தை ஒரு மிகப்பெரிய அற்புதமாகும். தேவனுடைய வார்த்தையைக் கேட்பதால் விசுவாசம் வருகிறது, தேவனுடைய வார்த்தையானது நம்மில் ஆவிக்குரிய ஜீவனை உருவாக்கும் அழிவில்லாத வித்தாயிருக்கிறது. (ரோமர் 10:17; I பேதுரு 1:22,23).

இரண்டாவது ஆவிக்குரிய சட்டம், "பாவம் மற்றும் மரணத்தைக் குறித்த நியாயப்பிரமாணம்". இது பாவத்திற்கு எப்போதுமே விளைவுகள் உண்டு என்ற அந்தப் பூரணமான, மறுக்க முடியாத ஆவிக்குரிய சட்டமாகும் (7:7-25). தேவனுடைய வார்த்தை முகம் பார்க்கிற கண்ணாடியைப் போன்றது (யாக்கேயு 1:23) என்று யாக்கோபு கூறுகிறார். ஒரு கண்ணாடியானது, நம்முடைய தோற்றத்திலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டும், எனவே நாம் வெளியே போய், மற்றவர்களை சந்திக்கும் முன்பாக கண்ணாடியைப் பார்த்து நம்முடைய தோற்றத்திலுள்ள குறைகளை, சரி செய்து கொள்ளலாம். அதே போல, மற்றவர்களோடு நாம் பேசுவதற்கு முன்பாக நம்முடைய பாவத்தை நாம் ஜெயிக்கும்படியாக நம்முடைய வாழ்க்கையிலுள்ள பாவங்களை தேவனுடைய வார்த்தையானது நமக்கு காண்பிக்கும். கண்ணாடியைப் பார்ப்பதென்பது எப்போதுமே ஒரு பிரியப்படுத்தும் அனுபவமாக இல்லாவிடினும், நம்மில் எத்தனை பேர் அதற்காக நம்முடைய வீடுகளிலுள்ள கண்ணாடிகளைத் தூர எறிந்து விடுகிறோம்?

நான்கு ராஜாக்களைப் போலவே, நியாயப்பிரமாணங்களிலும், முதல் இரண்டு ஆவிக்குரிய சட்டங்களும் துர்ச்செய்தியை அறிவிக்கின்றன, மூன்றாவது மற்றும் நான்காவது ஆவிக்குரிய சட்டங்கள் நற்செய்தியை அறிவிக்கின்றன. பவுல் இந்த மூன்றாவது ஆவிக்குரிய சட்டத்தை, "இயேசு கிறிஸ்துவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" (8:1-4) என்று அழைக்கிறார். இந்த நியாயப்பிரமாணம் "பாவம் மற்றும் மரணம் என்ற பிரமாணத்தினின்று நம்மை விடுதலையாக்குகிறது" என்ற நற்செய்தியை அவர் நமக்குக் கூறுகிறார்.

எப்படியாக நம்மில் அநேகர் ஆவிக்குரிய நிலையில் அதிகமான நேரத்தை செலவழித்தும், மேலே எழும்பி தூய்மையான நிலையை அடைய முடியாதவர்களாயிருக்கிறோம்? பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருந்தும்கூட, பாவம், மரணம் என்ற பிரமாணத்தை நம்மால் ஏன் மேற்கொள்ளமுடியவில்லை?

இந்தக் கேள்விக்கான பதில் நான்காவது ஆவிக்குரிய நியாயப்பிரமாணமாகிய, "ஆவிக்குரிய சிந்தனையைக் குறித்த பிரமாணம்" என்ற பிரமாணத்திற்கு நம்மை அறிமுகப்படுத்துகிறது. பவுல், "அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக் கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" (8:5-8) என்று எழுதுகிறார். நாம் பாவம், மரணம் என்ற பிரமாணத்தை நம்முடைய வாழ்வில் மேற்கொள்ளாவிட்டால், நாம் மாம்சத்துக்குரியவைகளை சிந்திக்கிறவர்களாயிருக்கிறோம் என்று அர்த்தமாகும். "ஆவிக்குரிய சிந்தனையைக் குறித்த நியாயப்பிரமாணம்" என்று கூட நாம் இயேசுவின் மிகவும் முக்கிய உபதேசங்களில் ஒன்றை அழைக்கலாம். மகிழ்ச்சியினால் நிறைந்த ஒரு வாழ்விற்கும், துக்கத்தினால் நிறைந்த ஒரு வாழ்விற்குமுள்ள வித்தியாசம் நாம் காரியங்களைப் பார்க்கும் விதத்தில் தான் இருக்கிறது என்று இயேசு உபதேசித்தார் (மத்தேயு 6:22,23).

இந்த நான்கு ஆவிக்குரிய பிரமாணங்களை ஜெபத்தோடு சிந்தியுங்கள். பின்பு, "இன்று என்னுடைய சிந்தை எப்படியிருக்கிறது?" என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். "உங்களுடைய வாழ்வை ஆளுகை செய்வது கிறிஸ்துவில் ஜீவனுடைய ஆவியின் பிரமாணமா அல்லது பாவம், மரணம் என்ற பிரமாணமா? என்பதை ஆவிக்குரிய சிந்தையைக் குறித்த பிரமாணம் தீர்மானிக்கும்.

## அத்தியாயம் நான்கு

# சகலமும்

“ஆ, தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்தவன் யார்? தனக்குப் பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென் (11:33-36).

இந்த வேதாந்த சாஸ்திர சாதனையின் உபதேசப் பகுதியை பவுல் இந்த இறையியல் உண்மையோடு தான் முடிக்கிறார். இந்த அருமையான கூற்றின்படி தேவனே சகல காரியங்களுக்கும் ஆதாரமானவர், சகல காரியங்களுக்கும் பின்னே இருக்கிற சக்தி அவரே, எல்லா காரியங்களுக்குமான நோக்கம் அவருடைய மகிமையே என்று பவுல் அறிவிக்கிறார். ‘சகலமும்’ என்ற இந்த வார்த்தையை பவுல் அடிக்கடி பயன்படுத்துகிறார், ஆனால் தற்செயலாக அல்லவே அல்ல (ரோமர் 8:28; II கொரி 9:8), இந்த வார்த்தையை பவுல் இந்தக் கொள்கையில் பயன்படுத்தும்போது அவர் எந்தக் காரியங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இந்த நிருபத்தின் விவாதத்தை ஜெபத்தோடு நீங்கள் பகுத்துணரும் வேளையில், இந்த நிருபத்தின் பதினாறு அதிகாரங்களை நான்காக பிரித்துக் கொள்ளுமாறு நான் உங்களை கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த நிருபத்தில், அப்போஸ்தலராகிய பவுலின் ஊக்கமளிக்கக்கூடிய இந்த விவாதத்தை நீங்கள் புரிந்து கொள்ள முயற்சி செய்யும் வேளையில், அதிகாரங்களையும், வசனங்களையும் குறித்து மறந்துவிடுமாறு நான் இப்போது உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை வேதத்தில் அதிகாரங்களும் வசனங்களும் சேர்க்கப்படவில்லை. சில நேரங்களில் வேதத்தின் புத்தகத்திலுள்ள ஏவப்பட்ட பகுத்தறிவின் உண்மைகளை விட்டு இந்த அதிகாரத்தின் பிரிவுகள் நம் கவனத்தைத் திருப்பிவிடக்கூடும்.

அந்த நான்கு ஆவிக்குரிய நியாயப்பிரமாணங்களைப் பற்றிக் (8:13) கூறி முடித்தவுடன், பவுல் சகலமும் என்ற வார்த்தையை இந்த விளக்கத்தில் பயன்படுத்தத் துவங்குகிறார். பின்பு தேவன் நம்மை இரட்சிப்பிற்குள் எப்படியாகக் கொண்டு வருகிறார் என்பதைப் பற்றிக் கூறுகிறார். நாம் இரட்சிக்கப்படும் செயலில் நடக்கும் எல்லா காரியங்களையும் பின்னிருந்து நடத்துபவர் தேவன் தான் என்று அவர் குறிப்பிடுகிறார். அவர்: "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" என்று எழுதுகிறார் (8:29,30).

இந்தப் பகுதி ஒரு பெரிய சத்தியத்தைக் கூறுகிறது. தேவனை ஏற்றுக்கொண்டவர்களுக்குள் அவர் இருக்கிறார், கீழ்ப்படிதலோடு நடப்பவர்களோடு அவர் இருக்கிறார், அவருடைய திட்டத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்காக அவர் இருக்கிறார். தேவன் நமக்குள்ளும், நம்மோடும், நமக்காகவும் இருக்கையில், நமக்கு எதிராக நிற்பவன் யார், அவருடைய அன்பிலிருந்து எதனால் நம்மைப் பிரிக்க முடியும்? என்று அப்போஸ்தலராகிய பவுல் அறிவிக்கிறார். இந்த கேள்விகளுக்கு பதில் கொடுப்பதோடு பவுல் இந்த எட்டாவது அதிகாரத்தை முடிக்கிறார்.

இந்தத் தூண்டப்பட்ட, ஊக்கமளிக்கக்கூடிய சிந்தனைகளை சுமந்தவர்களாக ஒன்பதாவது அதிகாரத்திற்குச் செல்லுங்கள். இங்கு பவுல், மேலே கூறப்பட்ட ஒரு வார்த்தையை விவரித்துக் கூறுகிறார். அந்த வார்த்தை "முன்குறித்திருக்கிறார்" என்ற வார்த்தையாகும். தேர்ந்தெடுத்தல் என்றும் அழைக்கப்படும் இந்த முன்குறித்தல் என்ற வார்த்தையை பவுல் விவரித்துக் கூறுவதால், இந்த அதிகாரம் வேதத்தில் மிகவும் கடினமானதாக, ஆனால் பக்தியூட்டுவதில் சிறந்த அதிகாரமாகக் காணப்படுகிறது.

இந்த வார்த்தையை விளக்குவதற்கு அவர், தங்கள் தாயின் வயிற்றிலிருந்த இரட்டையர்களாகிய ஏசா மற்றும் யாக்கோபைப் பற்றிக் கூறுகிறார். இந்தக் குழந்தைகள் நல்லதையோ கெட்டதையோ செய்வதற்கு முன்பதாகவே தேவன், "யாக்கோபைச் சிநேகித்து ஏசாவை வெறுத்தேன்" என்றும், "மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ் செய்வான்" என்றும் கூறுகிறார் (9:12,13) இந்த இரட்டையர்கள் பிறப்பதற்கு முன்பாகவே, தேவன் இவர்களுக்கு ஒரு முடிவை, திட்டத்தை வைத்திருக்கிறார். இந்த உபதேசம் விசுவாசிகளுக்குள், ஒரு குடும்ப இரகசியத்தைப் போல் காக்கப்பட வேண்டும் என்று எனக்குப் பிரியமான வேத பண்டிதர்களில் ஒருவர் கூறினார். விசுவாசத்திற்குள் வராமல், பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளாமலிப்பவர்கள் இந்த உபதேசத்தைப் புரிந்துகொள்ளவும்

ஏற்றுக்கொள்ளவும் வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. இது விசுவாசிகளுக்கும் கூட கடினமானது தான், ஏனென்றால் தேவன் அநியாயமானவராக நேர்மையற்றவராக, குறிப்பாக “தேர்ந்தெடுக்கப்படாதவர் களிடம்” நேர்மையற்றவராக காணப்படுவது போல் இது தெரிகிறது.

பெரும்பாலும், முதலில் இந்த உபதேசத்தை வேதத்தில் கண்டுகொள்ளும் விசுவாசிகள், இது உண்மையாக இருக்க முடியாது என்றே நினைக்கின்றனர். அந்த எண்ணத்திற்கு அப்போஸ்தலராகிய பவுலின் மறுமொழி, நம்மை பழைய ஏற்பாட்டைப் படிக்கும்படி சவால்விடுவதாகும். நான் கேட்ட கவிதைகளில் மிகவும் சிறிய கவிதை: “யூதர்களை– தேர்ந்தெடுத்ததில் – தேவன் எவ்வளவு விந்தையுள்ளவர்” (How odd - of God - to choose - the Jews) என்பதாகும்.

இந்த தேர்ந்தெடுத்தல் என்ற உபதேசத்தின் எடுத்துக்காட்டாக பழைய ஏற்பாடு முழுவதும் பல சம்பவங்களுண்டு. பண்டைய வரலாற்றின் எல்லா தேசங்களிலுமிருந்து தேவன் இஸ்ரவேலைத் தேர்ந்தெடுத்தார். நான் முன்பே குறிப்பிட்டது போல, இந்த மூன்று கடினமான அதிகாரங்களும் (9-11) தேர்ந்தெடுத்தல் என்பதற்கு எதிர்மறையான காரியத்தையே தெளிவாக்குகின்றன, ஏனெனில் இஸ்ரவேல் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்பதையே இன்றும் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறது.

நாம் அவருடைய நினைவுகளையும், வழிகளையும் புரிந்து கொள்ள முயற்சி செய்யக் கூடாது என்று ஏசாயாவின் மூலம் தேவன் கூறுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அப்படியே அவருடைய நினைவுகளும், செயலும் நம்முடையதிலிருந்து வேறுபட்டவையாகயிருக்கிறது என்று நம்மை எச்சரிக்கிறார் (ஏசாயா 55:8.9)

இந்த உபதேசத்தை நமக்கு கொடுக்கும்போதே, பவுல், சில பெரிய கேள்விகளால் நமக்கு சவாலிடுகிறார்: “ஒரே களிமண்ணிலிருந்து மோசேயையும், பார்வோனையும் தேவன் ஏன் சிருஷ்டித்தார் என்று சாதாரண மனிதனாகிய நீ தேவனை நோக்கிக் கேட்பதற்கு நீ யார் என்றும், உருவாக்கப்படும் வஸ்து உருவாக்குபவனை நோக்கி என்னை இப்படி உருவாக்கு என சொல்லலாமா?” என்றும் கேட்கிறார் (ரோமர் 9:20,21). தேர்ந்தெடுக்கப்படுதல் என்பது முக்கியமான காரியமல்ல என்று அதற்கான விளக்கத்தையும் அவர் கொடுக்கிறார். நாம் இரட்சிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்றால், நாம் கிருபையால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமேயொழிய, நம்முடைய சொந்த முயற்சியாலான எந்த சாதனையாலும் அல்ல என்பது தான் உண்மை (11).

தேவன் நம்மை உருவாக்கியபோது தம்முடைய ஆலோசகரா யிருக்கும்படி தமக்கு யாரும் அவசியம் என எண்ணவில்லை என்பதை பவுல் ஞாபகப்படுத்துகிறார்.

---

## அத்தியாயம் ஐந்து

# அதனால் என்ன?

இந்தத் துதியின் சத்தியத்தை உங்களோடு சுமந்தவர்களாக பன்னிரெண்டாவது அதிகாரத்திற்குள் செல்லுங்கள். பவுல் 'அப்படியிருக்க' என்ற வார்த்தையை பயன்படுத்தும்போது, அந்த வார்த்தை அங்கு ஏன் இருக்கிறது என்று நாம் எப்போதும் கேட்க வேண்டும். இந்த அப்போஸ்தலரின் விவாதத்தைப் புரிந்து கொள்வதற்கு, நான் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகப் பெற்ற இந்த ஆலோசனை நமக்கு உதவி செய்யும். அவர், தன்னுடைய நிருபத்தின் நடைமுறைப் பகுதிகளை இந்த முறையில் தான் துவங்குகிறார். இந்த நிருபத்தில் நம்மோடு பகிர்ந்து கொண்ட சத்தியத்தை உபயோகிக்க ஆரம்பிக்கும் போது, அவர் இந்த வார்த்தையைப் பயன்படுத்துவதற்குக் காரணம், தன்னுடைய விவாதத்தின் ஆரம்பத்திற்கு நம்மை மீண்டும் கொண்டு செல்ல வேண்டும் என்பது தான் (1:17).

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:1,2).

பல மக்கள், தங்களைத் தாங்கள் தேவனிடம் ஒப்படைத்துவிட்டால், தேவனுடைய சித்தம் தாங்கள் எண்ணிப் பார்க்க முடியாத மோசமான இடத்திற்கு தங்களை நடத்திச் செல்லும் என்று நினைக்கின்றனர். ஆனால் தேவனுடைய சித்தம் நல்லது என்று பவுல் நமக்குக் கூறுகிறார். அது பரிபூரணமானதும் கூட (2). உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை எப்படி அறிந்து கொள்வீர்கள்? தேவனுடைய சித்தத்திற்கு பவுல் ஐந்து படிகளைத் தருகிறார்.

முதலாவதாக, தேவன் மேல் மையம் கொண்டிருங்கள். தேவனே எல்லாக் காரியங்களுக்கும் மூலாதாரம் என்பதாலும், எல்லா வல்லமையுடையவரும் அவர்தான் என்பதாலும், எல்லாக் காரியங்களுக்குமான நோக்கம் அவரே என்பதாலும், உங்களுடைய வாழ்க்கையின் மையமாக தேவனை வைத்திருப்பதே நல்லதாகும். இரண்டாவதாக, தேவனிடம் உங்களையே அர்ப்பணித்தவர்களாக இருங்கள். நம்முடைய சித்தத்தை, தேவனுடைய சித்தத்திற்கு நாம் அர்ப்பணிக்க வேண்டும். இயேசு, "அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்து கொள்வான்" (யோவான் 7:17) என்று கூறியபோது, அந்த வழிகாட்டக் கூடிய உபதேசத்தை நமக்குக் கொடுத்தார். நீங்கள் அவரிடம் உங்களை அர்ப்பணித்துள்ளீர்கள் என்றும் அவருடைய சித்தத்தைச் செய்ய நீங்கள் சித்தமுள்ளவர்களாகயிருக்கிறீர்கள் என்றும் தேவன் அறிந்து கொண்டால், உங்களுடைய வாழ்வில் தாம் வைத்துள்ள சித்தத்தை தேவன் உங்களுக்குக் காண்பிப்பார்.

மூன்றாவது நிலையில் தான் நாம் எதுவும் செய்யாதவர்களாக இருக்கிறோம். நாம் தேவனால் மனந்திருப்பப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என்று பவுல் நமக்குக் கூறுகிறார். உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். நீங்கள் சரீரப்பிரகாரமாக பிறந்த போது அது உங்களுக்கு ஒரு செயலற்ற அனுபவமாகயிருந்தது. நாம் மீண்டும் பிறக்கும் போதும் இது உண்மையாகயிருக்கிறது. தேவன் தான் தன்னுடைய பங்கை செயல்படுத்துகிறார், நம்முடைய மனம் புதிதாகிறபோது நாம் செயலற்றவர் களாயிருக்கிறோம். நம்முடைய "மனம் புதிதாகுகிறதை" நாம் அனுபவித்தவுடன், நமக்காக தேவனுடைய திட்டம் நல்லது என்று நாம் நம் அனுபவத்தில் அதை நிரூபிக்க முடியும், அவருடைய தேவைகளையெல்லாம் சந்தித்து, ஆவிக்குரிய முதிர்ச்சி நிலைக்கு நேராக முன்னேறுவோம்.

பவுல் நான்காவது நிலையை, "இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்" (2) என்று எழுதும் போது கூறுகிறார். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், "மற்றவர்களைப் போல் இருக்காதீர்கள்," அப்படியிருந்தால் தேவன் உங்களுடைய வாழ்வில் வைத்திருக்கும் சித்தத்தை நீங்கள் இழந்துவிடுவீர்கள். நீங்கள் இயேசு கிறிஸ்துவின் சித்தத்தோடு இணைந்திருந்தால் இந்த உலகத்தோடு உங்களை ஈடுபடுத்திக் கொள்ளமாட்டீர்கள். மேலும், உங்களுடைய மதிப்பீடுகள், உங்களைச் சுற்றியுள்ள இந்த உலகத்தின் மதிப்பீடுகளோடு ஒத்திராது.

கடைசியாக, ஐந்தாவது நிலை கிறிஸ்துவில் நீங்கள் உறுதிப்பட்டிருக்க வேண்டியது. அதைச் செய்வதற்காக பரிசுத்த ஆவியானவர் தம்முடைய ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்து, தம் மக்கள் மூலம் கிரியை செய்கிறார் (3-8) என்பதை அறிந்து கொள்வதாகும் என்று பவுல்

கூறுகிறார். இந்த வரங்கள் கிறிஸ்துவிற்குள் நம்முடைய வாழ்வை உறுதி செய்து நம்முடைய ஆவிக்குரிய ஊழியங்களுக்காக நம்மை பயிற்றுவிக்கிறது. தேவன் நம்மில் எந்த வரங்களை மூலதனமாக வைத்திருக்கிறார் என்பதை நாம் கண்டுகொண்டு, அவற்றை அவரிடம் ஒப்புவித்து, அவருக்காக அவற்றைப் பயன்படுத்தினால், அந்த ஆவிக்குரிய வரங்கள், நம்மை தேவனுடைய சித்தத்திற்கு நேராகவும், நம்முடைய இந்த வாழ்வில் நம் இரட்சிப்பின் நோக்கத்திற்கு நேராகவும் நம்மை வழிநடத்தும் (எபேசியர் 2:10).

**உண்மையான நிலையில் இருங்கள்!**

பவுல், தன்னுடைய நடைமுறைக்கேற்ற உபயோகப்படுத்தும் விதத்தைக் குறித்து தொடர்ந்து கூறுகையில், அவர் இந்த நிருபத்தில் நம்மோடு பகிர்ந்து கொண்டுள்ள எல்லா சத்தியங்களையும், நம் சபையோடு பகிர்ந்து கொள்ளுமாறு நம்மை உற்சாகப்படுத்துகிறார். புதிய ஏற்பாட்டின், எனக்குப் பிடித்த மொழிபெயர்ப்பானது, இந்த நிருபம் முழுவதும் "நிஜம்" என்ற இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறது. முதலாவது, அவர்: "தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக் கொண்டிருங்கள்" (12:9) என்று எழுதுகிறார். இங்கு, விசுவாசிகளுக்கு மத்தியில் உண்மையான சுத்தமும், பரிசுத்தமும் இருக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

பவுல், உண்மையான பணிவு இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். "மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மை யானவர்களுக்கு இணங்குங்கள்" (16) என்று கூறுகிறார். தாழ்மை என்பது ஒரு ஆவிக்குரிய நற்பணியாக உள்ளது. இது அப்போஸ்தலர்களுடைய அட்டவணையில் எப்போதுமே மிக உயர்ந்த நிலையில் இருக்கின்ற ஒன்றாகும். பின்பு பவுல் உண்மையான ஒற்றுமையைப் பற்றி வலியுறுத்துகிறார். நாம் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாவோம், அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களாவோம் என்ற உண்மையைச் சார்ந்தது தான் இங்கு பவுல் குறிப்பிடும் ஒற்றுமையாகும்.

பவுல், "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்" என்று எழுதும்போது, நாம் ஒருவர் மேலொருவர் உண்மையான அன்புள்ளவர்களாயிருக்க வேண்டும் என்று கூறுகிறார். கொரிந்தியருக்கு, தான் எழுதிய முதல் நிருபத்தில், உண்மையான அன்பு என்றால் என்ன என்று நமக்குக் காண்பிக்கிறார் (I கொரி. 13:4-7). பவுலுடைய எல்லா நிருபங்களின், நடைமுறைப்படுத்த வேண்டிய பகுதிகளிலும் காணப்படும் மிக முக்கியமான சத்தியமாக இது உள்ளது.

பின்பு பவுல் உண்மையான உக்கிராணக்காரர்களாயிருப்பது பற்றிக் கூறுகிறார். "பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்" (13). மற்றவர்களை உபசரிப்பதை ஆவிக்குரிய வரங்களில்

ஒன்றாக பவுல் பட்டியலிடுகிறார். மூல பாஷையில், பவுல் இங்கு கற்பிப்பது என்னவென்றால், நாம் உபசரிப்பவர்களாக மட்டுமல்லாமல், மக்களை அன்பால் "துன்புறுத்துபவர்களாக" இருக்க வேண்டும் என்று கூறுகிறார். உண்மையான உக்கிராணக்காரர்கள் சபைகளுக்குக் கொடுக்க வேண்டியது, சுவிசேஷத்தைப் பரப்புவதும் விசுவாசிகளின் தேவைகளை சந்திப்பதுமாகும் என்று பவுல் கூறுகிறார்.

பின்பு பவுல் உண்மையான சில செயல்பாடுகளை வலியுறுத்து கிறார். "அசதியாயிராமல், ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" என்று எழுதுகிறார். நாம் சில காரியங்களுக்கு உண்மையாகவே முதலிடம் கொடுக்க வேண்டும் என்று பவுல் சவாலிடுகிறார். பல காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வதால், நம்மில் யாராயிருந்தாலும் "அவசரம் என்ற கொடுமையால்" கட்டுப்படுத்தப்படுபவர்களாக மாறிவிடக்கூடிய வாய்ப்பு உண்டு. நம்முடைய முதன்மையான காரியங்களில், ஜெபத்தோடு நம்மை ஈடுபடுத்திக்கொள்ள நாம் நேரத்தை எடுத்துகொள்வதில்லை.

பவுல் தன்னுடைய முதன்மையான காரியங்கள் எவை என்று அறிந்திருந்தார். நாம் வேதத்தில் படிக்கும் மற்ற தேவனுடைய மனிதர்களும் இந்த முதன்மையான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆவிக்குரிய ஒழுக்கத்தில் பவுலோடு இணைந்து கொள்கின்றனர். தாவீது, "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்" (சங்கீதம் 27:4) என்று எழுதியுள்ளார். பவுலும் தாவீதும் முக்கியமாகக் கருதிய ஒரு காரியம் தேவனோடுள்ள தங்கள் உறவும், தங்களுடைய தினசரி அனுபவத்தில் அவருடைய சித்தத்தை நிரூபிப்பதுமாகும். இயேசு கிறிஸ்துவின் உதாரணத்தைக் காட்டிலும், வேதத்தில் இப்படி முதன்மையான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களில், சிறந்த முன்மாதிரி வேறு யாருமில்லை.

பவுல், நம்மோடு பகிர்ந்து கொண்டுள்ள இந்த அற்புதமான சத்தியத்தை விசுவாசிப்பவர்களுக்கு, உண்மையான சாட்சி, ஜெபம் மற்றும் விசுவாசமுள்ளவர்களாக (14-21) இருக்க வேண்டும் என்று புத்தி சொல்கிறார். "பவுல் ரோமருக்கு எழுதிய நிருபம்" என்ற இந்த சாதனைப் புத்தகத்தில், சுவிசேஷத்தின் நடைமுறைப்படுத்த வேண்டிய பகுதிகளை நம்முடைய வாழ்வில் அனுதினமும் பயன்படுத்த வேண்டும் என்ற வலியுறுத்தல் உள்ளதை கவனியுங்கள்.

**குடிமக்களாக விசுவாசிகள்**

பதின்மூன்றாம் அதிகாரத்தில், குடிமக்களாக, விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் என்ற சுவிசேஷத்தை எப்படி பயன்படுத்துவது என்று பவுல் நமக்குக் காண்பிக்கிறார். நாம் அப்போஸ்தலர்களுடைய நடபடிகள்

புத்தகத்தில் படித்தது போல், அரசாங்கத்தின் விதிகள், தேவனுடைய உபதேசத்திற்கு முரணாக இருக்கும்போது, நாட்டிற்கு கீழ்ப்படியமுடியாத ஒரு நிலைமை விசுவாசிக்கு வரக்கூடும். இந்த அதிகாரத்தில் பவுல், சட்டத்தை அமுல்படுத்தும் அரசாங்க அதிகாரி, "தேவ ஊழியக்காரனாயிருக்கிறான்" என்று மூன்று முறை எழுதுகிறார் (13:4,6). நியமிக்கப்பட்ட தேவனுடைய ஊழியக்காரணாக, அவன் தேவனுடைய கோபாக்கினையின் (4) தற்போதைய வெளிப்பாடாயிருக்கிறான்.

பவுல், மறுபடியும் பிறந்த சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளைப் பற்றிப் பேசவில்லை, மாறாக, ரோம யுத்த வீரர்களைப் பற்றிப் பேசுகிறார். "நியமிக்கப்பட்ட" என்ற வார்த்தைக்கு அர்த்தம், முக்கியமான இடத்தில் வைக்கப்படுவது. சுவிசேஷத்திற்காக நியமிக்கப்பட்டவர்கள், தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் பிரசங்கிப்பதற்காக முக்கிய இடத்தில் வைக்கப்படுபவர்களாவர், நியமிக்கப்பட்ட சமாதான அதிகாரிகள், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அமுல்படுத்துவதற்காக வைக்கப்படுகிறார்கள். பவுல், "அவர்களுக்கு நீ இணங்கிப் போக வேண்டுமென்றால், நியாயப் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்திரு. ஆனால் நீ திருடினாலோ, கொலை செய்தாலோ, அவர்கள் உன்மேல் பட்டயத்தைப் பயன்படுத்துவார்கள், அவர்கள் பட்டயத்தைப் பயன்படுத்தும் போது, "அவர்கள் தேவனுடைய ஊழியர்களாயிருக்கிறார்கள்".

சட்டமும் ஒழுங்கும் இருக்க வேண்டும் என்ற இந்தக் காரியம் தேவனிடத்திலிருந்து துவங்குவதால், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரியும் தேவனிடத்திலிருந்து தான் தன்னுடைய அதிகாரத்தின் ஆதாரத்தைக் கண்டுகொள்கிறான். இருப்பினும், ஒரு அரசாங்கமே, ஊழல் நிறைந்ததாகவும், அழிவுள்ளதாகவும், அதனுடைய சட்டங்கள் தேவனுடைய நியாயப் பிரமாணங்களுக்கு எதிரானதாகவும் இருக்கையில் சமூகத்திற்கு கீழ்ப் படியாமல் போவதற்கான நேரமும் வாய்ப்பும் ஏற்பட்டுவிடும் (அப்போஸ்தலர் 5:29).

### சீஷர்களின் வாக்குவாதம்

பதினான்காம் அதிகாரத்தில், ரோமாபுரியிலிருந்த சீஷர்களுக் கிடையே வித்தியாசங்களைப் பற்றிப் பவுல் கூறுகிறார். பவுல் ரோமாபுரியிலிருந்த சீஷர்களை சந்தித்திருக்கவில்லை, ஆனால் அவர் இந்த நிருபத்தை எழுதிய போது, எல்லா சாலைகளும் ரோமாபுரியையேச் சென்றடைந்ததால், அங்கிருந்த பல விசுவாசிகளை அவர் அறிந்திருந்தார், கடைசியில் ரோமாபுரிக்கு பயணம் செய்யவிருந்த விசவாசிகளையும் அறிந்திருந்தார். அங்கிருந்த சீஷர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருந்ததையும் அவர் அறிந்திருந்தார்.

முதலாவதாக நடந்த சபை ஆலோசனைக் கூட்டமே இந்த காரியத்தைத் தீர்த்து வைக்கும்படியாகத் தான் கூட்டப்பட்டது: இயேசுவின், புறஜாதிகளான சீஷர்கள், பாரம்பரிய யூதர்கள் போல் வாழ விரும்பவில்லை, மறுபடியும் பிறந்த யூத சீஷர்களோ பாரம்பரிய யூதர்களைப் போலவே தொடர்ந்து வாழ விரும்பினர், ஏனெனில் இரண்டு சாராரும் யூத மேசியாவை பின்பற்றினர் (அப்போஸ்தலர் 15). அந்த ஆலோசனை சங்கத்தின் தீர்வு என்னவாக இருந்ததென்றால், புறஜாதியான சீஷர்கள் யூதர்களைப் போல் இருக்க வேண்டியதில்லை, மற்றும் யூத சீஷர்கள், தங்களுடைய யூத முறைமைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கலாம், ஏனெனில் இரு சாராருமே கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகயிருந்தனர். இந்தக் காரியம் முறைப்படி தீர்க்கப்பட்டாலும், இந்த யூத சீஷர்களும் புறஜாதி சீஷர்களும் கிறிஸ்துவில் ஒன்றாயிருக்க முயற்சி செய்ததால் அவர்களிடம் தொடர்ந்து தீவிரமான கருத்துவேறுபாடுகள் இருந்துகொண்டு வந்தன.

யூத விசுவாசிகளில் சிலர், ஓய்வு நாளை (ஏழாவது நாளை) தேவனை ஆராதிப்பதற்காகவும், ஓய்விற்காகவும், புதுப்பித்துக் கொள்வதற்காகவும் தனியான ஒரு நாளாகப் பிரித்துக் கொண்டாடி வந்தனர். இயேசுவின் உயிர்த்தெழுதலை நினைவுகூரும் பொருட்டு, யூதர்களாயிருந்த அப்போஸ்தலர்கள் அனைவரும், தங்களுடைய ஆராதனை நாளை ஏழாவது நாளிலிருந்து, வாரத்தின் முதல் நாளாக மாற்றிக் கொண்டனர். ஆனால் மறுபடியும் பிறந்த புறஜாதியினர், ஏழாவது நாளை தங்களுடைய ஆராதனைக்காக ஒதுக்கி வைப்பதில் எந்த ஒரு காரணத்தையும் கண்டுகொள்ளவில்லை.

பவுல், ரோம விசுவாசிகளிடம், “அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான், வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான். அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக் கடவன்” (14:5) என்ற இந்த அடிப்படையில் தங்கள் தர்க்கங்களைத் தீர்த்துக் கொள்ளுமாறு கூறினார். ஓய்வுநாள் விவாதத்தோடு கூட, சில விசுவாசிகள், வாரத்தின் முதல் நாளை “கர்த்தருடைய நாளாக” கருதினர், மற்ற விசுவாசிகள், வாரத்தின் எல்லா நாளையும் கர்த்தருடைய நாளாக எண்ணினார்கள்.

இந்த விவாதங்களைப் பற்றிக் கூறும் போது, முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன் என்பதற்கு அர்த்தம் என்ன? முதலாவதாக, பவுல், மனசாட்சியின் அடிப்படையில் நாம் முற்றிலும் நிச்சயம் உடையவர்களாயிருக்க வேண்டும். மனசாட்சி என்பது, அமைதலான மெல்லிய சத்தம், நம்முடைய பெற்றோராலும், மற்றவர்களாலும் பல ஆண்டுகளாக பயிற்றுவிக்கப்பட்டதில் வரும் கட்டுப்படுத்தப்பட்ட மறுமொழி தான் மனசாட்சியாகும்.

மனசாட்சியை ஒரு பாதுகாப்பான, முற்றிலும் சார்ந்து கொள்ளக்கூடிய வழிகாட்டியாக பவுல் கூறவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டியது முக்கியமாகும். ஆனால் நாம் செய்யும் காரியம் எதையாவது தவறு என்று நம்முடைய மனசாட்சி சொல்லும்போது, நாம் அதற்கு செவிசாய்க்கவேண்டும் என்று அவர் நமக்கு ஆலோசனை கூறுகிறார். யூத விசுவாசிகள் தங்களுடைய மதசார்பான பாரம்பரியங்களையும், உணவு பழக்க வழக்கங்களையும், பரிசுத்த நாட்களையும் மதிப்பதற்கு அவர்களுக்கு உரிமையும், பொறுப்பும் உண்டு என்றும், இந்தக் காரியங்களில், புறஜாதியான சீஷர்கள் யூதர்களாக மாற வேண்டும் என்று பலவந்தப்படுத்தப்படக் கூடாது.

உங்களுடைய சொந்த தனிப்பட்ட உணர்த்துதலின் அடிப்படையில், உங்கள் மனதிலே குற்றம் பற்றி முழு நிச்சயத்தை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் (6) என்று எழுதும்போது, பவுல் இன்னும் ஒரு படி மேலே செல்கிறார். குற்றவாளி என கண்டித்து உணர்த்துதல் என்பது நம்முடைய பெற்றோர் நமக்கு கற்றுக்கொடுத்த ஒன்றல்ல. அது நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையினுடைய விளைவாகும். பரிசுத்த ஆவியானவர் எல்லா விசுவாசிகளையும் ஒரே விதமாக கண்டித்து உணர்த்துவதில்லை.

நம்மிலிருந்து வித்தியாசமாயிருக்கும் சகோதரரின் பொருட்டு, இந்தக் காரியங்களை ஆலோசனையின் அடிப்படையில் நாம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று பவுல் கூறுகிறார் (10-23). நம்முடைய சகோதரன் சரியானதைச் செய்யாத போதிலும், அவன் தன் மனசாட்சியிலும், கண்டித்து உணர்த்தப்படுவதிலும், ஏதோ தவறு செய்து விட்டோம் என்று அவன் நம்பும்போது, அவனுக்கு நேராக நமக்கு ஒரு பொறுப்புண்டு.

அவர் இந்தக் கொள்கையை இன்னும் விவரித்துக் கொரிந்தியர் களுக்கு எழுதுகிறார் (I கொரிந்தியர் 8-10). எது சரி, எது தவறு என்பது இங்கு முக்கியமல்ல, மாறாக, நாம் நம் சகோதரனை எவ்வளவாக நேசிக்கிறோம் என்பது தான் முக்கியம் என்று எழுதுகிறார். நம்முடைய சகோதரன் இடறி விழுவதற்கு நாம் ஏதுவாகயிருக்கக் கூடாது. நம்முடைய சகோதரனை கட்டியெழுப்புவதற்கு ஏதுவான எல்லா காரியங்களையும் செய்ய வேண்டும். கடைசியில், பவுல், அன்பைக் குறித்து தான் எழுதியுள்ள (I கொரிந்தியர் 13) காரியங்களின் அடிப்படையில், அன்பை அடிப்படையாகக் கொண்டு நாம் இந்த விவாதங்களைத் தீர்க்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

### பவுலின் மிஷனரி இருதயம்

பதினைந்தாம் அதிகாரத்தில் தான் நாம் அப்போஸ்தலராகிய பவுலை உண்மையிலேயே அறிந்து கொள்கிறோம். உலகமே, இந்த அப்போஸ்தலருடைய இருதயத்தின் மேல் நோக்கமாயிருந்தது. அப்போஸ்தலர்

நடபடிகள் புத்தகத்தில், பவுல் ரோமாபுரிக்குச் செல்லும் எண்ணத்துடன் இருந்ததை நாம் பார்த்தோம். இருப்பினும் பவுல் ரோமருக்கு, “நான் ஸ்பானியா தேசத்திற்குப் பிரயாணம்பண்ணுகையில் உங்களிடத்தில் வந்து, உங்களைக் கண்டு கொள்ளவும், ......அவ்விடத்திற்கு உங்களால் வழிவிட்டனுப்பப்படவும் எனக்குச் சமயங் கிடைக்குமென்று நம்பியிருக்கிறேன்” (24) என்று எழுதுகிறார். அவருடைய தரிசனம் இப்போது ரோமாபுரியையும் தாண்டிச் செல்கிறது. அவர் ஸ்பானியாவில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு, ரோமாபுரியிலுள்ள விசுவாசிகள் தன்னைத் தாங்குவார்கள் என்று எண்ணியதால், ரோமாபுரிக்கு பயணம் செய்ய வேண்டும் என்ற அதே எண்ணத்தோடு இருந்தார்.

**தனிப்பட்ட வாழ்வில் அப்பியாசித்தல்**

பவுல் ரோமருக்கு எழுதிய இந்த அருமையான நிருபத்தின் ஆராய்ச்சியை முடிக்கும் உங்களுக்கும் எனக்கும் முன்பாக இருக்கும் சவால், முதலாவதாக இந்த நிருபத்தின் சத்தியத்தை நமக்கே, தனிப்பட்ட விதத்தில் பயன்படுத்திக் கொள்வதாகும். இயேசு கிறிஸ்து தம்முடைய சிலுவையில் நமக்காக செய்ததில் நம்முடைய தனிப்பட்ட விசுவாசத்தின் மூலமாக தேவனோடு நமக்கு சமாதானமிருக்கிறதா? கிறிஸ்துவுக்காக நம்முடைய உலகத்தில் நிற்கக்கூடிய, தேவனால் நீதிமானாக அறிவிக்கப்பட்ட ஒரு நபராக, தேவனை மகிமைப்படுத்தும் ஒரு வாழ்க்கையை வாழக்கூடிய நபராக விசுவாசத்தினால் கிருபைக்குள்ளாக செல்லும் விதத்தை தனிப்பட்ட விதத்தில் நாம் கண்டு கொண்டு விட்டோமா? விசுவாசத்தின் மூலமாக, நம்முடைய ராஜாவாகிய இயேசுவில் நாம் ஆளுகை செய்கிறோமா? “பாவம் மரணம் என்னும் பிரமாணத்தினின்று நம்மை விடுதலையாக்கும் கிறிஸ்துவிற்குள் ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தில்” நம்முடைய சிந்தையை வைக்கிறவர்களாகயிருக்கிறோமா?

அப்படியென்றால், இந்த நிருபத்திலுள்ள சத்தியத்தை நம்முடைய சபையிலிருக்கும் சகோதர சகோதரிகளுக்கும், அரசாங்கத்திற்கு குடிமக்களாயிருப்பதிலும், நம்முடைய தொடர்பிலும் பயன்படுத்த வேண்டும். இறுதியாக இந்த அன்பான அப்போஸ்தலரைப் போல, இந்த உலகத்தில், இந்த மகிமையான சுவிசேஷத்தை கேள்விப்பட்டிராதவர்களிடம் இந்த நிருபத்தின் சத்தியங்களைக் கூற வேண்டும். பவுலைப் போலவே, நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நாமும் கடனாளிகளாயிருக்கிறோம். எனவே, “விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது” (ரோமர் 1:14-16) என்ற கிறிஸ்துவின் நற்செய்தியை பிரசங்கிப்பதற்கு நாம் எப்போதும் தயாராயிருக்க வேண்டும்.

# அப்போஸ்தலர் நடபடிகளும் ரோமருக்கு எழுதின நிருபமும்

## தேவன் மற்றும் மனிதனின் இயல்புகள்